87

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XVI } ருத்ரோத்காரி௵ ஐப்பசி௴ :: 1923-ம் ௵ அக்டோபர்௴ { பகுதி 1

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
  உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
  உறப்ப ணிந்தில னொருதவ மிலனுன தருள்மாறு
உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்
  விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
  உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன்
                                    மலைபோலே
கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
  கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்
  கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு
                                    பொருபோதே
கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
  கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
  கணத்தி லென்பய மறமயில் முதுகினில்
                                    வருவாயே !
வினைத்த லந்தினி லலகைகள் குதிகொள
  விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண
  விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா !
மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
  கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
  விரைத்த சந்தன ம்ருகமத புயவரை
                                    யுடையோனே !
தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு
  புனற்சொ ரிந்தலர் பொதியவி னவரொடு
  சினத்தை நிந்தனை செயுமுநி வரர்தொழ
                                    மகிழ்வோனே !
தெனத்தெ னந்தன எனவரி யளிநறை
  தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
  திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே !

போர்க்களத்தில் பேய்கள் களித்துக் குதிக்கவும், ஆயுதங்களினாற் சிதைபட்ட தேகங்களினின்று சிந்தும் தசைகளைக் கழுகுகள் தின்னவும், தலைமயிரை என்றும் முடிக்கும் வழக்கமில்லாத அசுரர்களுடன், போர்புரிந்த வேலாயுதனே! மிகவும் இனியபண்களைப் பேர்லவும் குயில் கூவுவதைப் போலவும் இனிமையான குரலையுடையவளும் பைங்கொடியைப்போல் மெல்லிய தேகத்தை யுடையவளுமான வள்ளிநாயகியின் தனபாரங்கள் பொருந்தப்பெறுவனவும், வாசனை மிக்க சந்தனமும் கஸ்தூரியும் பூசப்பெற்றவையும், மலைகளைப் போல் திரண்டவையுமான புஜங்களையுடையவனே ! தினந்தோறும் நான்குவேதங்களும் வல்ல முனிவர்கள் ஆகமங்களிற் கூறிய விதிகளின்படி புநித தீர்த்தங்களினால் உனக்கு அபிஷேகஞ்செய்து மலர்களினால் அருச்சிப்பதையும், தேவர்களும் கோபத்தை யிகழ்ந்து தள்ளிய முனிசிரேஷ்டர்களும் உன்னைப் பணிவதையுங் கண்டு உளமகிழ்வோனே! வண்டுகள் இனிமையாகக் கானஞ்செய்துகொண்டு தெவிட்டுமளவு தேனைக் களிப்புடன் குடிக்கும் உயர்ந்த மரங்கள் நிறைந்த சோலைகளினால்விளங்கும் திருப்பரங்குன்றத்தில்எழுந்தருளியிருக்கும் சரவணபவனே! யான் தினந்தோறும் உன்னை வணங்குவதுமில்லை, உனது குண விசேஷங்களை யெடுத்துரைப்பதுமில்லை, பலவகையான மலர்களினால் உனது பாதத்தாமரைகளை அருச்சித்து என் சிரம் உனது பாதமலர்களில் பொருந்துமாறு பணிவதுமில்லை, எவ்விதமான தவத்தையேனும் செய்வதுமில்லை, என்றும் உனது மாறாத அருளுக்குப் பாத்திரரான மெய்யன்பர்கள் இருக்குமிடம் இன்னதென்று தெரிந்துகொள்வதுமில்லை, அன்போடு உனது திருக்கோயிலைச்சுற்றிப் பிரதக்ஷிணமாக வருவதுமில்லை, ஆனந்தத்தோடு உனது திருப்புகழை யோதி உனைத் துதிக்க ஆசைப்படுவதுமில்லை ; ஆகையினால், கோபாவேசத்துடன் கனைத்துப் பாய்ந்துவரும் எருமைக்கடாவின் முதுகின்மீதேறி என்னுயிரைக்கவரக் கோபத்துடன் வரும் கறுத்த தேகமுடைய இயமனுடைய கிங்கரர்கள் எழும்பிப் பாய்ந்து என்னையணுகி, எறியும் பாசக் கயிற்றைக்கொண்டும் கொல்லுவதற்குரிய கதாயுதத்தைக்கொண்டும் என்னுடன் போர்புரியும் போது, யான் மனக்கலக்கமுற்றுச் செயலற்றிருப்பேன் ; சற்று நேரத்தில் அழியப்போகிற என் மனம் நொந்து துயருறும் ; அப்போது கணப்பொழுதில் என் பயம் நீங்குமாறு நீ மயில்மீதேறி அங்கு வரவேண்டும்; [வந்து என்னைக் காத்தருளவேண்டும்.]

அகர முதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு.

விவேக போதினி

தொ. 16] ருத்ரோத்காரி, ஐப்பசிமீ [பகுதி. 1

√விபீஷண சரணாகதி

VIBHEESHANA'S REFUGE

பக்தர்களான நமக்கெல்லாம் அஷ்டலக்ஷ்மி விலாசங்களை வருஷித்துவரும் ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியினிடம் வந்து, "கண்டேன் ஸீதாதேவியை" என்று கர்ணாமிருதத்தைப் பொழிந்ததும், ஸ்ரீராமன் அவரைப் புகழ்ந்து தமது ஆலிங்கனத்தால் அவரை மகிழ்வித்தார். இலங்கையின் பெருமையையும், இராவணன் மகிமையையும் ஹநுமானிடமாய்த் தெரிந்துகொண்டு, ஸ்ரீராமன் சுக்கிரீவனை யுத்தத்திற்குப் புறப்படலாமோவென, வானரர்கள் சுக்கிரீவனது ஆஞ்ஞாப்பிரகாரம் உற்சாகத்துடன் திரண்டு வந்தனர். ஸ்ரீராமலக்ஷ்மணர்களைத் தொடர்ந்து, மலைகள் பெயர்ந்து வருவதுபோல், வானரவீரர்கள் எள் விழ இடமில்லாது, ஆகாயம் பூமியை நிரப்பிக்கொண்டு பின்சென்றனர். நதிகள், வனங்கள் வனாந்தரங்கள் இவை யெல்லாம் தாண்டி எல்லோரும் சமுத்திரக்கரையை அடைந்தார்கள். கன்னங்கரேலென்று திமிங்கிலங்களுடன் அலைமோதும் கடலுக்கும், நீலநிறமாய் நக்ஷத்திர மீன்களுடன் காணும் ஆகாயத்திற்கும், கரையில் கொந்தளித்துக்கொண்டு ஈ மொய்ப்பதுபோல் நிற்கும் வானர வெள்ளத்திற்கும் ஒரு பேதமும் தோன்றவில்லை. இந்த வானர சேனையை, நீலன் கருடவ்யூகமாய் அணி வகுத்து நிறுத்தினான்.

ஸ்ரீராமன் ஸீதாதேவியை நினைத்து வருந்தினார். "சீதை அக்கரையிலும், நாம் இக்கரையிலுமா யிருக்கின்றோம்! இச்சமுத்திரம் அல்லவா இருவருக்கும் குறுக்காய் நிற்கின்றது. தேவியின் அங்கங்களிற் பட்டுவிட்டு சமுத்திர ஜலத்தின்மீது தவழ்ந்துவந்து நம்மீது வீசுவதால் இந்தத் தென்றல் சிலாகிக்கத் தகுந்ததாகின்றது. தேவியின் கண்கள் சந்திரனைப் பார்க்கும்; நாமும் சந்திரனைப் பார்க்கின்றோம். இருவர் கண்களையும் சேர்த்துப் பார்த்து சந்திரன் களிக்கின்றான். இந்த ராக்ஷஸர்களாகிற மேகக்கூட்டங்களைப் பாணங்களால் பிளந்து, சிதையென்னும் எனது சந்திரகலையை எப்பொழுது மீட்டுவருவேன்?" என்று இப்படி எல்லாம் விசனமுற்ற ஸ்ரீராமனை லக்ஷ்மணன் இனிய வசனங்களால் தேற்றினார்.

ஸ்ரீராமனது வரவைச் சாரர்களால் தெரிந்துகொண்ட இராவணன் ஆலோசனையில் ஆழ்ந்தான். இலங்கையைச் சூறையாடிச் சென்ற ஹநுமான் எங்கே திரும்பிவந்துவிடுகின்றானோ என்ற நினைவால் இராக்ஷஸர்கள் கிலிபிடித்தவர்களாய் இருந்தார்கள். அவசர அவசரமாய் ஒருவாறு புதிப்பிக்கப்பெற்ற லங்காநகரத்தில் இராவணன் ஒரு சபைகூட்டினான். மந்திரிகள், பிரதானிகள், அதிரத மஹாரதர்கள், மித்திரர்கள், சகோதரர்கள் எல்லோரும் பிரவேசித்து அவரவர்கள் ஆசனங்களி லமர்ந்தனர்.

இராவணன் சபையைப் பார்த்து, "சபையோர்களே! மந்திரிகளே! சகோதரர்களே! கேளுங்கள். ஓர் அவசியமான காரியம் ஆலோசிக்கவேண்டியதா யிருக்கிறது. வெள்ளம் வருமுன்னமே அணை கோலிக் கொள்ளவேண்டும், ஹநுமான் என்னும் ஒரு வானரன் படுத்தின பாட்டைமறந்திருக்கமாட்டீர்கள். கோடிகோடி வானரர்களுடன் இராமலக்ஷ்மணர்கள் அக்கரைக்கு வந்துவிட்டார்களென்று தூதன் வந்து தெரிவிக்கின்றான். பார்த்தீர்களா? சீதையை எவ்வளவோ சாமர்த்தியமாய் எடுத்து வந்து நமது நகரில் பத்திரப்படுத்திவிட்டேன். அவளது ஈடுஜோடில்லாத லாவண்யத்தைப் பார்த்தீர்களானால், நான் செய்ததைச் சரியென்றே நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்கள். நான் எவ்வளவோ சரசமாய்ப் பிரார்த்தித்தும் அவள் இணங்கவில்லை. ஆளமாட்டாமல் இராஜ்யத்தைக் கைவிட்டுவிட்டு, பித்தன்போல் வனங்களில் அலையும் அரவிகனான ஸ்ரீராமனையே நினைக்கின்றனளேயன்றி சகலபோகங்களையும் தந்து இவளைச் சர்வேசுவரியாய்ச் செய்யக்கூடிய மகாரவிகனான என்னை மதிக்கின்றாளில்லை. அன்

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ னற்றா டொழாஅ ரெனின்.

னத்தின் அழகை இகழக்கூடிய இவள் நடை ஒன்றே யோகிகளையும் போகிகளாய் மாற்றப் போதுமானது. இம் மங்கையற்கரசியை வேண்டாமென்று எப்படி விலக்குவேன்? சீதையை விடவும் கூடாது. இராமலக்ஷ்மணர்களால் பயமும் கூடாது. இதற்குத் தகுந்த ஆலோசனையைச் சொல்லுங்கள்" என்று இப்படியெல்லாம் நாணமின்றிப் பேசினான்.

பிரதான மந்திரியாகிய பிரகஸ்தன் எழுந்திருந்து, "மகாராஜனே! இதற்கு என்ன இவ்வளவு யோசனை? ஹநுமான் வந்த காலத்தில், நான் ஏதோ அசதியாய் இருந்துவிட்டேன். அதனால் அவன் நகரை அலங்கோலமாக்கிவிட்டான்; பயப்படவேண்டாம். நான் தங்களுக்கு ரக்ஷை கட்டுகிறேன். இதோ ஒரு நொடியில் பாய்ந்து சென்று வானரர்க ளனைவரையும் கைப்பிடியாய்ப் பிடித்துக்கொணர்ந்து தங்களது காலடியில் மூட்டையாய் அடுக்கிவிடமாட்டேனா நான்" என்றுரைத்தான். வஜ்ரதம்ஷ்ட்ரன் எழுந்து, "இதோ பாருங்கள்! இந்த எனது பயங்கரமானகதாயுதத்தை.இதன் ஒரு அடிக்கு நிற்பார்களா இந்த வானரர்கள்?" என்றான். வஜ்ரஹநு என்பவன், "என் பசி யாருக்குத் தெரியும்? இதோ ஒரே தாவலாய்த் தாவி அத்தனைபேரையும் அபுக்கென்று வாயில் போட்டுக் கொண்டு வந்துவிடமாட்டேனா நான்" என்றான். இப்படித் தாறுமாறாய் வாயில் வந்தபடி பேசும் ராக்ஷஸாதமர்களை யெல்லாம் அதட்டி உட்காரவைத்துவிட்டு, மகா புத்திமானான கும்பகர்ணன் இயந்திரம்போல் எழுந்து நின்று, "அண்ணா! என்ன மதிகெட்டதனமாய் இவர்களெல்லோரும் உளறுகிறார்கள். மந்திராலோசனைக்கு இதுவோ காலம். இதுவோ தேசம். சரியான காலதேசங்கள் கடந்துபோய் வெகு நாட்கள் ஆயினவே. குதிரைகளைப் பிந்தியும், வண்டியை முந்தியும் போடுவார்கள் உண்டோ? காலதேசங்கள் அறிந்து சரிவர ஆலோசித்திருந்தால், இராமலக்ஷ்மணர்களை வெல்வது முந்தியும், சீதையைக் கவர்தல் பிந்தியுமாய் நடந்திருக்க வேண்டும். அப்பொழுது தண்டகாரண்யத்தில், வாலி, கரன் என்று இரண்டு வீரர்கள் தங்களுக்கு இரண்டு கைகள்போல் உதவியாய் விளங்கினர். இராமனுக்குத் துணை ஒருவருமில்லை. சுக்கிரீவாதிகள் சகாயம் ஏற்படு முன்னரே, இராம லக்ஷ்மணர்களைத் தாங்கள் சுலபமாய் ஜயிப்பதற்குத் தகுந்த தருணம் ஏற்பட்டிருந்தது. அதைத் தவற விட்டுவிட்டு, திருடன்போல் ஒருவருக்கும் தெரியாமல்,ஒருவருடனும் கலந்து ஆலோசிக்காமல் சீதையை எடுத்து வந்துவிட்டீர்கள். இதிலென்ன சாமர்த்தியம்? தர்மிஷ்டனும், சமயம் தெரிந்தவனும், மகா பலம்பொருந்தியவனும், மகாமேதாவியுமான இராமனையாவது ஜயிக்கவாவது! நல்ல வேளையாய் இதுவரையில் இராம கோபத்திற்காளாகாது தப்பிப் பிழைத்திருக்கிறீர்கள். நான் சொல்லிவரும் இந்த ஹிதமான உபதேசத்தைத்தான் கேட்கப்போகிறீர்களா? ஏது! ஏது! எனக்குத் தோன்றவில்லை. ஆனாலும் நான் இருக்கிற வரையில், உங்களுக்குப் பிராணபயமில்லை. உங்கள் துர்ப்புத்தியால், உங்களுக்கு விளையும் வினையை நான் என் கண்களால் பார்க்கப் போகிறதில்லை. என்னால் கூடியமட்டும் யுத்தத்தில் சகாயம் செய்யப் பிரியமுள்ளவனாகவிருக்கிறேன்" என்று வெகு அழகாய் எடுத்துரைத்தான்.

மஹாபார்சுவன் என்ற ராக்ஷஸன், "பிரதாபலங்கேசுவரா! அனாவசியமான ஆலோசனைகளால் எதற்காக மனதைப் புண்படுத்திக் கொள்ளுகிறீர்கள்? சீதையோ தங்கள் வசத்திலிருக்கிறாள். இராமலக்ஷ்மணர்கள் எப்பொழுதோ படையெடுத்து வரப்போகிறார்கள். அப்படி வரும்போது நாங்கள் இத்தனை பேர்கள் இல்லையா? பார்த்துக்கொள்ளுகிறோம். தாங்கள் சீதையை வசிகரிக்க முடியாதவர்களா? ஏன் கூடாது?" என, இராவணன் அவனை அருகாமையி லழைத்து, "மகாபார்சுவ! அந்த வெட்கக்கேட்டை என்ன சொல்லச் சொல்லுகிறாய். **புஞ்சிகஸ்தலை** என்னும் தேவதாஸியை நான் கெடுத்தது பிரம்மதேவனுக்குத் தெரிந்து, அதுமுதல் நான் யாரையாவது இனி பலாத்கரித்தால் என் தலைகள் ஆயிரம் சுக்கலாய் வெடிக்குமென்று கோரமாய்ச் சபித்தார். இது தெரியாதா உனக்கு? அது போகட்டும். சமுத்திரத்துக்கு என் வேகமில்லை. மாருதனுக்கு என் பலமில்லை. எனது தைரிய பராக்கிரமங்களை இராமன் அறியமாட்டான். அதனால் எதிர்த்து வருகின்றான். பார்க்கலாம் எல்லோரும் எனது பராக்கிரமத்தை. தொடுக்கிறேன் பதினான்கு லோகங்களையும் பற்றி எரிக்கும்படி

யான பாணங்களை; வாட்டுகிறேன் சுக்கிரீவன் முதலிய வானரக்கூட்டங்களை; நாட்டுகிறேன் தீக்ஷணமான **நாளீக நாராசாதிகளை** இராம லக்ஷ்மணர்களது மார்பில்; சீதையையாவது நான் விட்டுவிடவாவது! அது ஒருநாளும் இல்லை" என்று வீராவேசம் பேசிக்கொண்டான். கண்டவைகளை யெல்லாம் ஆயுதமென எடுத்துக்கொண்டும், "இதோ போகிறேன். இராமனை நான்தான் முடிக்கப்போகிறேன். அந்த ஹநுமானை நண்டபிண்டலாக்கி விடுகிறேன் நான்" என்று சொல்லிக் கொண்டும் இராக்ஷஸர்கள் கிளம்பினார்கள்.

இராவணனுடைய கர்ஜிதமும், ராக்ஷஸாதமர்களுடைய ஆரம்பமும் விபீஷணனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. வெகு வணக்கமாய் இராவணனிடம் வந்தார். சிரமீது குவித்த கைகளுடன், "அண்ணா! இந்தத் துராத்துமாக்களது வார்த்தைகளைச் சிறிதும் கேட்கலாகாது. எல்லோரும் தங்களுக்குத் துரோகிகள். சீதையினிடம் ஆசையென்ற விஷத்தையுண்டு, பித்தம் தலைக்கு ஏறிப் பிரமிக்கும் தங்களை, இராகவன் கோபம் என்ற படுகுழியில் தள்ளப்பார்க்கிறார்கள். அப்பிரியமென்று பாராமல் நீடூழிகாலம் க்ஷேமத்தைத் தரக்கூடிய விதமாய் ஹிதவாதிகள் போதிப்பார்கள். மகா பதிவிரதையான சீதையின் சிரிப்பை நினைத்து மோகிக்காதீர்கள். நெருப்பென்று தூரவிலக்குங்கள். விசனத்துடன் முகத்தைக் கைகளால் மறைத்துக்கொண்டு வீற்றிருக்கும் சீதையை, ஸ்திரீ ரத்தினம் என்று ஏமாறவேண்டாம். அழகென்ற படமெடுத்து, விசுவாசம் என்ற பூதாகாரம் பொருந்தி, மனஸ்தாபம் என்ற விஷத்தைக்கக்கும், ஐந்து விரல்களாகிற ஐந்து தலைகளுடைய மகாசர்ப்பமே சீதை என்று ஏன் உங்களுக்குப் புரியவில்லை? சத்தியபராக்கிரமனும், ஸத்ஜன மித்திரனுமான இராமனை இலேசாய் நினைக்கவேண்டாம். ஹநுமான் என்ற ஒருசில்லுண்டி வானரன் இலங்கையை ஹதாஹதம் செய்தபோது, இப்பொழுது மார் தட்டிக்கொள்ளும் பிரகஸ்தாதிகள் எங்குப் போயிருந்தனர்? சுக்கிரீவாதிகளின் பலத்தை யார் அறியக்கூடும்? சூர்ப்பனகை வெட்கக்கேடான மாதிரியாய் நடந்ததால் லக்ஷ்மணன் அவளைச்சிக்ஷித்தார். நியாயத்தை விசாரிக்காமல் எதிர்த்துவந்ததால் கராதிகள் தொலைந்தனர். இராமனிடத்தில் என்ன தோஷத்தைச் சொல்லமாட்டுவீர்கள்? தர்மத்தைவிட்டுத் துளியும் சலிக்காத ராமனுக்குத்தான் ஜயம் என்பதில் தடையுண்டோ? சீதா தேவியை எடுத்துவந்தது சகிக்கக்கூடிய காரியமா? தர்மசூக்ஷ்மங்கள் அறிந்து வேதவேதாந்த பாரங்கதரானதாங்கள், இப்படிச் செய்தால் யார்தான் ஒப்புவார்கள்? வஜ்ரக்கட்டுக் கட்டினதாய், விஷம் பூசிவிட்டதாய், தகதகவென்று பளபளத்து ஆகாயம் பூமி பாதாளம் யாவையும் பறக்கச்செய்துகொண்டு, படீர் படீரென்று மார்பைப் பிளக்கும் ராமபாணங்களின் கடுமையை இந்த பிரகஸ்தன் என்ன கண்டுவிட்டான்? அண்ணா, வானர வீரர்கள் மலைகளையும் மரங்களையும் பெயர்த்து எடுத்துக்கொண்டு ஆஸ்போடிதக்ஷ்வேணித சிம்மநாதங்களால் உலகைச் செவிடாக்கிக்கொண்டு புறப்படுவதற்குள்ளும், அவர்கள் கோட்டை கொத்தளங்களில் பாய்ந்து சின்னாபின்னமாய் அவற்றை இடிப்பதற்குள்ளும், அவர்களிடத்தில் அகப்பட்டுக் காலறுபட்டுக் கையறுபட்டு நாக்கிழந்து வாக்கொழிந்து, மண்டை முறிந்து தொண்டைசெரிந்து கண்கள் தெரித்துப் புண்கள் பெருத்து அஸ்திகள் சிதற ஆவியும் பதற ராக்ஷஸவீரர்கள் துடிப்பதற்குள்ளும், உத்தண்டமான கோதண்டத்தில் பயங்கரமான பாணங்களை ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம் என்று கணக்குவழக்கில்லாமல் இரண்டு கைகளாலும் வாயுவேக மனோவேகமாய்த் தொடுப்பதற்குள்ளும், டங்காரத்துடன் **அண்ட கடா**ஹம் குமுற அவற்றை விடுப்பதற்குள்ளும், இலங்கையின் அழகை அவைகள் முடிப்பதற்குள்ளும், அண்ணா! சொல்லுவதைக் கேளுங்கள். வீணான வம்புவேண்டாம். நாடு நகரங்கள் புல்முளைத்துப் போகவேண்டாம். எல்லோரும் க்ஷேமமாய் அஷ்ட ஐசுவரியங்களுடன் கூடி வாழலாம். சீதாதேவியை இப்பொழுதே ஸ்ரீ ராமனிடம் கொண்டுபோய் ஒப்புவித்து விடுவோம். தயாநிதியான தாசரதி, பல்லாயிரம் அபராதங்களையும் மறந்து சிநேகம் புரிந்திடுவார். இதுவே நீதி. இதுவே அழகு. சாதுக்கள் மெச்சுவார்கள். நீதி நிபுணர்கள் புகழ்வார்கள். பிராத்ரு பக்தியால் இவ்வளவும் சொன்னேன். தங்கள் ஊழியன் நான்" என்று விபீஷணர் ஹிதத்தை எடுத்துக் கூறினர்.

பண்டை இந்தியாவில் வைத்திய உதவி

MEDICAL AID IN ANCIENT INDIA

("சரித்திரக்காரன்" எழுதியது)

"மணி மந்திர ஔஷதம்" என்ற ஒரு சொற்றொடர் வழங்கப்பட்டு வருவதை அனைவரும் அறிவர். இவை மூன்றும் அநுஷ்டானத்தில் இல்லாமலிருந்தால் இந்த மொழி ஏற்பட்டிராது. இம்மூன்றையும் பண்டைக் காலத்திலிருந்த பலர் கையாண்டு வந்தனர் என்பது உண்மை. இதைப்பற்றி எவ்வித ஐயமும் வேண்டுவதில்லை. ஆரியர்கள் தேகக்கட்டு உடையவர்களாகவும், பரந்த மார்பும் உயர்ந்த தோள்களும் பொருந்தினவர்களாகவும் இருந்தார்கள் என்று கூறப்படுவதனாலேயே அவர்கள் காலத்தில் நோய் இருந்ததேயில்லையென்று கொள்வது பொருந்தாது. இந்தக் காலத்தில் எவ்வளவு நோய்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு நோய்களும் வேத காலத்திலும் இருந்தன என்பதற்கு அதர்வ வேதமே சான்று பகரும். ஆனால் அக்காலத்தாருக்கும் இக்காலத்தாருக்கும் உள்ள வேற்றுமை யாதெனில், முற்காலத்தவர் நோய்வராமலிருப்பதற்குரிய பரிகார முறைகளை அநுசரித்து வந்தனர். "நோய்வந்து குணப்படுத்திக் கொள்வதைவிட, நோய்வராமல்தடுப்பதுமேல்" என்ற மூதுரை அக்காலத்தில் ஏற்பட்டதே போலும். இக்காலத்தவரைப் பற்றி நாம் ஒன்றுங் கூறவேண்டுவதில்லை. பலர்—முக்கியமாக நகரங்களில் வசிப்போர் — தங்களுடைய வருவாயின் அதிக பாகத்தை வைத்தியருக்குக் கொட்டிக் கொடுத்துவிடுகின்றனர்.

அதர்வ வேதத்தில் பலதிறப்பட்ட நோய்கள் கூறப்பட்டிருக்கின்றன. வெள்ளைக்குஷ்டம், (கிலாசம்) இருமல், க்ஷயம், பிடிப்பு வாய்வு (விஷகந்தம்) சீதபேதி, கட்டி, ஜனனேந்திரிய சம்பந்தமான நோய்கள் முதலிய பல வியாதிகள் அதில் காணப்படுகின்றன. சுரத்தில் பல வகை இருந்ததாகத் தெரிகிறது. இப்பொழுது நாடெங்கும் கொள்ளைகொண்டுவரும் "மலேரியா" சுரமும் அப்பொழுது இருந்ததாக அறிகிறோம். "பிளேக்" நோயும் அக்காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. வேதகாலத்திற்கு அநேக நூற்றாண்டுகள் பிற்பட்ட சாணக்கியர், தமது அர்த்தசாஸ்திரத்தில், எலிகளினால் உண்டாகும் உபத்திரவங்களை ஒழிக்கச் சில முறைகளைக் கூறுகிறார். எலிகளின் மூலமாகவே பிளேக் நோய் உண்டாகிறது என்ற தற்போதைய சித்தாந்தப்படி நோக்கினால், பண்டைக் காலத்தில் பிளேக் நோய் இருந்ததென்று நாம் கொள்ளலாம். ஆனால் தற்போழ்து அது தலை விரித்தாடுவதைப்போல் அக்காலத்தில் தாண்டவம் செய்திராதென்பது திண்ணம். இருதய சம்பந்தமான நோய்களும், பரம்பரையான வியாதிகளும் அக்காலத்தில் இல்லாமற் போகவில்லை. இந்நோய்களுக்குப் பரிகாரமுறைகள் அக்காலத்தில் நன்கு தெரிந்திருந்தன. வைத்தியர்களும் இரணவைத்தியர்களும் வேத காலத்தில் இல்லாமற் போகவில்லை. இப்பொழுது நாட்டுப் புறங்களில் நாவிதரிற் சிலர் நிகழ்த்தும் கோரமான காட்சிகளைக்கொண்டு, மேனாட்டாருடைய கூட்டுறவினாலேயே நமக்கு இரணவைத்தியம் தெரிந்ததென்றும், அதற்கு முன் —பண்டைக்காலத்தில்—எல்லாம் அநாகரிகமா யிருந்தனவென்றும் எண்ணுவது அறியாமை. ஒருவனுக்குக் காயம் ஏற்பட்டு அதனால் இரத்தம் அதிகமாக வெளிவந்து கொண்டிருந்ததானால் இரணவைத்தியர்கள் கட்டுகள் (அபிச்ரித்)கட்டி அதை நிறுத்தினார்கள் என்று ருக்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இரணவைத்தியர்களுக்கு அவர்களுடைய தொழிலுக்குரிய பலவித ஆயுதங்கள் இருந்தன. இவைகளின் விவரத்தைப்பற்றி மற்றொரு முறை சமயம் நேர்ந்துழி எழுதுகிறேன். வேத காலத்தில் வர்ணவைத்தியமும் செய்யப்பட்டு வந்தது. இன்னும், தற்போழ்து சில கிறிஸ்தவர்களால் அநுசரிக்கப்படும் ஸ்பரிச நிவாரண முறைகளும் அக்காலத்தில் கையாளப்பட்டுவந்தனவென்று தெரிகிறது. மருந்தினாலன்றி, மந்திரத்தாலும் அக்காலத்தில் நோய்களைப் போக்கிக்கொண்டு வந்தனர். இந்த மந்திரமுறைகள் யாவும் அதர்வவேதத்தில் தெள்வாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஒருவனுக்குச் சுரநோய் வந்துவிட்டால், அவன் படுத்திருக்கும் கட்டிற் காலில் ஒருதவளையைக் கட்டிவிட்டு சில மந்திரங்களை ஓதினால், சுரம் நின்றுவிடுமென்று அதர்வவேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நோயாளியின் உஷ்ணத்தை, குளிர்ச்சிபொருந்

திய தவளை மந்திரபலத்தினால் இழுத்துக் கொள்ளுமாம். இஃது இக்காலத்தவருக்கு ஆச்சரியமாகத் தோன்றலாம். இக்காலத்தில் பயிலப்படும் உடல்கூறுநூல் (அனாடமி) அக்காலத்தவர்க்கு நன்கு தெரிந்திருந்தது. தேக அவயவங்களின் தன்மையையும், அவைகளின் செயல்களையும், கெட்டுப்போனால் அவைகளைச் சீர்திருத்தும் தன்மையையும் வேதகாலத்தவர் நன்கு உணர்ந்திருந்தனர் என்பதில் ஐயமேயில்லை. யாககாலங்களில் அநுஷ்டிக்கப்பட்டு வந்த முறைகளை நோக்கின் இவ்வுண்மை புலனாகும். அக்காலத்தில் மூலிகைகள் மேட்டுப்பாங்கான பூமிகளிலும் மலைச்சாரல்களிலும் கிடைத்தனவென்றும், மலைப்பிரதேசங்களில் வசிக்கும் ஜாதியார் அவ்வப்பொழுது இந்த மூலிகைகளுடன் சமவெளிப்பிரதேசங்களுக்கு வந்து இவைகளைக் கொடுத்து, இவைகளுக்குப் பதிலாக, தங்களுக்கு உபயோகமான பொருள்களை வாங்கிக்கொண்டு சென்றனர் என்றும் அறிகிறோம். வேதகாலத்தவர், மந்திரங்களில் அதிக நம்பிக்கை வைத்திருந்தனர். மருந்துகளை இவைகளுக்கு அநுசரணையாகவே கொண்டிருந்தனர் என்று தெரிகிறது.

சரித்திர ஆராய்ச்சிக்குட்பட்ட காலத்தை நோக்குழி, இந்தியாவில் வைத்தியம் முதலியன நன்கு தெரிந்திருந்தன என்பதில் சந்தேகமில்லை. சிறந்த நாகரிகர்களான கிரேக்கர்கள் மஹா அலெக்ஸாந்தரின் தலைமையின்கீழ் இந்தியாவுக்கு வந்தபோது இந்தியர்களின் வைத்தியத் திறமையைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அலெக்ஸாந்தர், தன் படையைச் சேர்ந்த சிலருக்குப் பாம்புகடிக்க, அதனாலுண்டான விஷத்தைப் போக்குவதற்குக் கிரேக்க வைத்தியர்களுக்குத் தெரியாமற்போகவே, இந்திய வைத்தியர்களுடைய உதவியை நாடினானென்று அரியன் என்ற கிரேக்க சரித்திராசிரியன் கூறுகிறான். பாம்புகடி முதலானவைகளுக்கும் இன்னும் சில கொடிய நோய்களுக்கும் இந்திய வைத்தியர்களுடைய உதவியை நாடும்படி அலெக்ஸாந்தர் தன் படைவீரர்களுக்கு உத்தரவு செய்தான். அலெக்ஸாந்தர் திரும்பிச்செல்லும்போது இந்திய வைத்தியரிற் சிலரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு சென்றான் என்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

புத்தர் காலத்திலேயே, இந்தியாவில் வைத்தியமும் இரணசிகிச்சையும் உச்சஸ்தானத்தையடைந்திருந்தன. தட்சசீலத்திலும் காசியிலுமிருந்த இரண்டு சர்வகலாசாலைகளிலும் பல கலைகளோடு வைத்திய சாஸ்திரமும் கற்பிக்கப்பட்டு வந்தது. புத்தர்காலத்தில் தட்சசீலத்துச் சர்வகலாசாலையின் வைத்திய போதகராக இருந்தவர் ஆத்ரேயர் என்பவர். உலகம்போற்றும் சரகர் என்ற சிறந்த வைத்திய சாஸ்திரி இந்த ஆத்ரேயரிடம் பயின்றவர். பலவித மருந்துகளைத் தயார் செய்வதற்குரிய முறைகளும், இரண சிகிச்சைக்குரிய ஆயுதங்களும், அவைகளை உபயோகிக்கும் முறைகளும் வினய பிடகங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளினால் பௌத்தகாலத்தில் வைத்திய சாஸ்திரம் எவ்வளவு முன்னேற்றமடைந்திருந்தது என்பது புலனாகும்.

சந்திரகுப்தனுடைய காலத்தில் வைத்திய சாஸ்திரம் அரசாங்க ஆதரவு பெற்றிருந்தது. மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் ஏற்படும் நோய்களைப் பரிகரிப்பதை அரசாங்கம் தன் கடமையாகக் கொண்டிருந்தது. சந்திரகுப்தனுடைய காலத்தில் (தலை) நகரத்தின் நிர்வாகத்தை, ஒவ்வொரு சபையிலும் ஐவர் அடங்கிய ஆறு சபைகள் ஏற்றுக்கொண்டிருந்தன. இச்சபைகளில் ஒன்றுக்கு வெளிநாடுகளிலிருந்து வருவோரைக் கவனிக்கும் பொறுப்பு இருந்தது. வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு நோய்வந்தால் அவர்களை ஜாக்கிரதையுடன் இச்சபையார் பாதுகாத்து வந்தனர் என்று மெகாஸ்தநேசன் கூறுகிறான். இதனால் வைத்தியர்களும், இவர்களுக்கு வேண்டிய சாமான்களும், மூலிகை தினுசுகளும் வேண்டியளவு அவசரத்துக்கு உபயோகப்படும்படி சித்தமாக இருந்தன என்பது தெளிவாகிறது. அர்த்த சாஸ்திரத்தை நோக்கினால் இந்த உண்மை புலனாகும்.

கி.மு. நான்காம் நூற்றாண்டில் நோயாளிகளின் வியாதிகளைப் பரிகரிக்க ஆங்காங்கு சிகிச்சைசாலைகள் இருந்தன. எத்தனை ஆண்டுகள் எடுத்து உபயோகப்படுத்தியபோதிலும் குறையாத அளவு ஏராளமான மருந்துச் சாமான்கள், இச்சிகிச்சைசாலைகளில் இருந்தன. மருந்துச்சாமான்கள் வைப்பதற்கென்று தனியான அறைகள் பிரத்தியேகப்படுத்தப் பட்டிருந்தன. இவை

களை நிருவகிப்பதற்கென்று தனியான உத்தியோகஸ்தர்களும் இருந்தார்கள். இம்மருந்துச் சாலைகளில் சாமான்கள் எவையேனும் குறைந்து போனால், அந்தந்தச் சாமான்கள் அவ்வப்பொழுது புதிதாய் நிரப்பப்பட்டன. இம்மருந்துச் சாலைகளின் உபயோகத்திற்கென்று மூலிகைகள் பயிராக்கப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அரசாங்கமே இவ்வேலையைச் செய்துவந்தது. சில மூலிகைகள் தொட்டிகளிலும் வைத்துப் பயிராக்கப்பட்டன. அரசனுடைய அரண்மனையின் அந்தப்புரத்துக்கு அணித்தாயுள்ள தோட்டத்தில் மருத்துவத்திற்கு உபயோகமாகும் மூலிகைகள் பயிராக்கப்பட்டு வந்தன. அரசன், அந்தப்புரத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றி கௌடில்யன் கூறும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறான்:— "அந்தப்புரத்திற்குப் பின்பாகத்தில் ஸ்திரீகள் வசிப்பதற்கென்று தனியான இடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அங்கு மருத்துவத்திற்கும், மற்ற வியாதிகளுக்கும் உபயோகப்படும்படியான மருந்துகள் வைக்கப்பட்டிருக்கவேண்டும். இவை தவிர, தொட்டிகளில் மூலிகைகள் பயிராக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கவேண்டும்". பெரிய மனிதர் இல்லங்களில், பாம்பு முதலிய விஷப்பிராணிகள் வராதபடி தடுக்க, சில மூலிகைகள் வளர்க்கப்பட்டு வந்தன. மூலிகைகளோடு பூனைகள், மயில்கள், கீரிப்பிள்ளைகள், புள்ளி மான்கள் முதலியனவும் மேற்படி உபயோகத்திற்காகவே வளர்க்கப்பட்டு வந்தன. மைனா, கிளி முதலிய பறவைகள் விஷத்தை, அல்லது விஷஜந்துக்களைக் கண்டால் கூச்சலிடும். ஆதலின், அவைகளும் வளர்க்கப்பட்டுவந்தன. இவைகளினால் அரசாங்கத்தார் தவிர, தனி மனிதர்களும் நோய் வாராமல் இருக்கப் பலவித முறைகளைக் கையாண்டார்கள் என்பது புலனாகிறது.

வைத்தியர்களில் நான்கு வகை நிபுணர்கள் கூறப்பட்டிருக்கிறார்கள். சுரம் முதலிய தேக சம்பந்தமான நோய்களைத் தீர்க்கும் வைத்தியர்கள், விஷம் முதலியனவற்றைக் கண்டுபிடித்து அவைகளைப் பரிகரிக்கும் வைத்தியர்கள், மருத்துவம் முதலிய ஸ்திரீகள் சம்பந்தமான நோய்களைக் கவனிக்கும் வைத்தியர்கள், இராணுவத்தோடு செல்லும் இரணசிகிச்சைக்காரர்கள்என நான்கு வகைப்பட்டவர்கள் இருந்தார்கள். இராணுவத்தோடு தாதிமார்களும் (நர்ஸ்) சென்றார்கள். இவர்களைப்பற்றி அர்த்தசாஸ்திரம் பின்வருமாறு கூறுகிறது:—

"இரணசிகிச்சைக்குரிய சஸ்திரங்கள், இயந்திரங்கள், எண்ணெய்கள், இரணம் முதலிய காயங்களைக் கட்டுவதற்கு உபயோகப்படும் துணிகள் (பாண்டேஜ்) முதலியவைகளுடன் வைத்தியர்களும், சமைத்த ஆகாரங்கள், பான வகைகள் முதலியவைகளுடன் தாதிமார்களும் ராணுவத்துக்குப் பின்னால் நின்று அவ்வப்போது வேண்டப்படும் உதவிகளைச் செய்வதுடன், இராணுவ வீரர்களுக்கு உற்சாகத்தையும் அளித்துக்கொண்டிருப்பார்கள்."

வைத்திய சிகிச்சை நாட்டில் சரியாகச் செய்யப்படுகிறதா என்பதை அரசாங்கம் கவனித்து வந்தது என்று முன்னர்க்கூறினோம். கண்டவர்களும் கண்டபடி வைத்தியம் செய்ய அப்பொழுது அரசாங்கம் விட்டுவைக்கவில்லை. எந்தெந்த நோயாளிகளை எந்தெந்த வைத்தியர்கள் சிகிச்சை செய்யலாமென்பதைப் பற்றியும், வைத்தியர்கள் அனுசரிக்கவேண்டிய முறைகளைப்பற்றியும் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அரசாங்கத்தாரால் வைத்தியம் செய்வதற்குத்தகுதியுடையவரென்று அங்கீகரிக்கப்பட்டவரே பொதுஜனங்களுக்கு வைத்தியம் செய்யலாம். தற்போது, வைத்தியர்கள் வைத்தியம் செய்வதற்கு முன் அரசாங்கத்தின் அங்கீகாரத்தை எங்ஙனம் பெறவேண்டுமென்கிற விதி இருக்கிறதோ அங்ஙனமேதான் முற்காலத்திலும் இருந்தது. வைத்தியர்கள் தங்களிடத்தில் வரும் நோயாளிகளில் எவருக்கேனும் கொடிய நோய் இருப்பதாகத் தென்பட்டால் அதை உடனே அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும். இங்ஙனம் செய்யாத வைத்தியர்கள் அபராதம் விதிக்கப்பட்டார்கள். வைத்தியருடைய அஜாக்கிரதையால் நோயாளிக்கு மரணம் ஏற்பட்டாலும், அல்லது, வியாதிமுற்றிப்போய் விட்டாலும் அதற்காக வைத்தியர்கள் அபராதம் விதிக்கப்பட்டார்கள். இதனால் ஆயிரம் பேரைக்கொன்று அரைவைத்தியனாவது அக்காலத்தில் இல்லை என்பது தெளிவாகிறது. அக்காலத்திய அரசாங்கம் குடிகளின் தேக சௌக்கியத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்தது.

இயற்கை மரணம் அடையாதவருடைய பிரேதம் இக்காலத்தில் அரசாங்க வைத்தியர்களால் பரிசோதனை (போஸ்ட்-மார்டம்) செய்யப்படுகிறது. இதைப்போல் இரண்டாயிரத் திருநூறு ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் நடைபெற்று வந்தது என்பது பலருக்கு ஆச்சரியமாகவே இருக்கும். சந்திரகுப்தனுடைய காலத்தில் பிரேத பரிசோதனைக்கென்று விதிகள் ஏற்படுத்தப்பட் டிருந்தன. திடீரென்று ஒருவனுக்கு மரணம் ஏற்பட்டால் அவனுடைய பிரேதமானது அதற்கென்றுள்ள ஒருவித தைலத்தால் தடவிப் பிறகு பரிசோதனை செய்யப்பட்டுவந்தது. பிரேதம் கெடாமலிருப்பதற்காகவும், துர்நாற்றம் வீசாமலிருப்பதற்காகவும் இந்தத் தைலம் உபயோகிக்கப்பட்டு வந்தது. மூச்சுத்திணறி இறந்தவர், தற்கொலை செய்து கொண்டவர், நீரில் மூழ்கி இறந்தவர், விஷங் கொண்டவர் முதலியோர் பிரேத பரிசோதனை ஸ்தலத்திற்குக் கொண்டு செல்லப்படுவார்கள். இந்திந்த விதமான நிலைமையிலிருக்கும் பிரேதங்கள், இந்திந்த விதமானகாரணங்களால் இறந்துபோயிருக்கும் என்பதைப் பிரேத பரிசோதகர்கள் அறிந்துகொள்வதற்கு அர்த்த சாஸ்திரத்தில் பல அடையாளங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பிரேத பரிசோதகர்கள் அரைகுறையாகப் பரிசோதனை செய்யாமல் தங்கள் முழுக் கவனத்தையும் அதில் செலுத்தவேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருந்தார்கள். பிரேத பரிசோதனை ஸ்தலத்திற்கு வருவோர் பிறரால் கொல்லப்பட் டிருக்கின்றனர் என்பது தெரிந்தால் அது சம்பந்தமாகத் தக்க வாக்குமூலங்கள் வாங்கப்படும். பிறகு இந்தவிஷயம் நீதிஸ்தலத்தாருடையமுடிவுக்கு விட்டுவிடப்படும். பணத்தை விரும்பியாவது, விரோதத்தினாலாவது வேறு காரணங்களினாலாவது ஒருவன் கொல்லப்பட்டு அவன் பிரேதம் பரிசோதனைசாலைக்கு வந்தால், பரிசோதகர்கள் இறந்தவருடைய உறவினர்களைப் பின்வருமாறு விசாரிக்கவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருந்தார்கள். "இறந்தவரை வீட்டினின்று அழைத்துச் சென்றவர் யார்? அவருடன் இருந்தவர் யார்? அவருடன் சென்றவர் யார்? அவர் இறக்கும்போது அவருடன் இருந்தவர் யார்?" கொலை நடைபெற்ற இடத்தில் எவரேனும் இருந்தால் அவர் பின்வருமாறு விசாரிக்கப்படவேண்டும்:—கொலை நடந்த இடத்திற்கு இறந்துபோனவர் யாரால் கொண்டுவரப்பட்டார்? கொலை நடைபெற்ற இடத்திற்குச் சமீபத்தில் எவரேனும் ஆயுதபாணிகளாய்த் திரிந்து கொண்டிருந்தனரா?" இவை போன்ற பல கேள்விகள் கேட்கப்படவேண்டும். கொலைசெய்யப்பட்டவன் அணிந்திருந்த ஆடை ஆபரணங்கள் முதலியனவற்றையும், அவனிடத்தில் வேறு சாமான்கள் காணப்பட்டால் அவைகளையும், இறந்துபோனவருடைய உத்தியோகம், இருப்பிடம், பிற நடவடிக்கைகள், அவருடைய நண்பர்களின் விவரங்கள் முதலியவைகளைப்பற்றியும் பிரேத பரிசோதகர்கள் பரிசோதனை செய்யவேண்டும். இறந்துபோனவர் விஷம் வைக்கப்பட்டவராயிருந்தால், பிரேத பரிசோதகர்கள் அவருடைய ஜீரணியாத உணவை எடுத்துப் பாலில் போட்டுப் பரிசோதிக்கவேண்டும். அல்லது இந்த உணவை நெருப்பில்போட்டு, அது "சிட்சிடா" சப்தம் செய்தாலும், வானவில் நிறத்துடன் கொழுந்துவிட்டெரிந்தாலும், இறந்துபோனவர் விஷம்வைக்கப்பட்டவர் என்று தீர்மானிக்கப்பட்டது. பிரேத பரிசோதனை என்பது ஆங்கில நாகரிகம் ஏற்பட்டதற்குப் பிறகு உண்டானதென்று எண்ணுவது அறியாமை. இரண்டாயிரத்திருநூறு வருஷங்களுக்குமுன்னரே இந்த முறை மிகத் திறம்பட, அதிக ஆச்சரியப்படத்தக்க விதமாக நடைபெற்று வந்ததென்பது இதுகாறும் கூறியவற்றால் நன்கு புலப்படும்.

பண்டைக்காலத்தில் அரசாங்கத்தார் வியாதிகளைப் பரிகரிக்க அநேக முறைகளைக் கையாண்டதுபோல், நோய்கள் வரவொட்டாமலும், வந்தால் அதிகமாகப் பரவவொட்டாமலும் இருக்க பலமுறைகளை அநுசரித்தனர். ஜனங்கள் சுகாதார விதிப்படி நடப்பதற்காகப் பல சட்டங்கள் ஏற்பட்டிருந்தன. வியாபாரிகள், ஒரு சாமானை மற்றொரு சாமானுடன் கலந்தேனும், தாழ்ந்த சாமானை உயர்ந்ததெனக் கூறியேனும், விற்றால் தண்டிக்கப்பட்டுவந்தார்கள். "தானியங்கள், எண்ணெய்கள், உப்பு வகைகள், வாசனைத் திரவியங்கள், மருந்துச்சாமான்கள் முதலியவைகளோடு அவைகள் மாதிரியாயுள்ள வேறு தாழ்ந்த சாமான்களைக் கலந்து விற்கும் வியாபாரிகள் பன்னிரண்டு பணம் அபராதமாக விதிக்கப்படுவார்கள்" என்பது அர்த்த சாஸ்

திரம். தெருக்களில் குப்பைகளைச் சேர்த்து வைப்பதும், பாதைகளில் அசுத்த ஜலம் தங்க விடுவதும் குற்றங்களாகக் கருதப்பட்டன. இக் குற்றஞ்செய்தவர்களை அரசாங்கம் தண்டித்துவந்தது. ஆலயங்கள், அரசனுடைய அரண்மனை, யாத்திரைஸ்தலங்கள், நீர்நிலைகள் முதலிய இடங்களிலும் இவைகளுக்குச் சமீபத்திலும் ஜலமலங் கழிப்பது குற்றமாகக் கருதப்பட்டது. நகர எல்லைக்குள் எவரேனும் மிருகங்களின் சவத்தையாவது மனிதர்களின் பிணத்தையாவது கிடத்தியிருந்தால் அவர் தண்டிக்கப்பட்டார். நகரத்திற்கு வடக்கேயாவது கிழக்கேயாவது சுடுகாடு இருக்கவேண்டுமென்ற விதி இருந்தது. இந்த இடத்திற்குப் புறம்பாய் வேறுஎங்கேனும் பிணம் எரிக்கப்பட்டாலும் புதைக்கப்பட்டாலும் அது சுகாதார விதிக்கு மீறிநடந்த குற்றமாகக் கருதப்பட்டது. ஸ்மசான பூமி செல்வதற்கென்று தனியான பாதை அமைக்கப்பட்டிருந்தது. நாற்பத்தெட்டுஅடி அகலமுள்ள இந்தப் பாதை தவிர, வேறு வழியில் பிணங்களை எடுத்துச் செல்லக் கூடாது. மீறிச் சென்றவர்கள் அபராதம் விதிக்கப்பட்டுவந்தார்கள். பத்துவீடுகளுக்கொரு பொதுக்கிணறு இருந்தது. இதனால் ஜனங்கள் ஜலக்கஷ்டமில்லாமல் இருந்தார்கள். (வாந்திபேதி, பிளேக்போன்ற) பெருவாரி நோய்கள் வந்த காலத்து வைத்தியர்கள் மருந்துகளை எடுத்துக்கொண்டு ஆங்காங்குச்சென்று சிகிச்சைசெய்து கொண்டு வந்தார்கள்; இலவசமாக அவரவர் வேண்டும்பொழுது மருந்து வழங்கிக்கொண்டு வந்தார்கள். இவர்கள் தவிர துறவிகளும், அரசாங்க புரோகிதர்களும் இந்நோய்கள் ஒழிய மந்திரம் ஜபித்து வந்தார்கள்.

அசோகன் காலத்திலிருந்த வைத்திய ஏற்பாடுகள் மிகவும் வியக்கத்தக்கன. இவைகள் யாவும் அவனுடைய சாஸனங்களினின்று நன்கு புலனாகும். இங்ஙனமே தமிழ் நாட்டை ஆண்ட பல மன்னர்களும், ஜனங்களுக்கு வேண்டிய வைத்திய உதவிகளை அரசாங்கச் செலவில் செய்துவந்தார்கள். தென்னாட்டிலுள்ள கோயில்களில் காணக் கிடக்கும் சாஸனங்களை நோக்கினால் இவ்வுண்மை புலனாகும். விரிவஞ்சி அவைகளை விடுக்கின்றேன்.

ஸ்ரீகிருஷ்ண கர்ணாமிருதம்

SRI KRISNA KARNAMRUTHAM

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवराम्बरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

"த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவராம்பரம் ததானே||
வபு ரளககுலாவ்ருதானனாப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா"

இந்தச் சுலோகத்தில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் திவ்வியமங்கள விக்கிரஹத்தைத் தியானிக்கும் விதம் கூறப்படுகிறது. இதன் பொருள், "ஸ்ரீபகவானுடைய தேகம் தமாலவிருக்ஷத்தின் வர்ணத்தோடுகூடினதும், ஒப்பற்ற ஸௌந்தர்யமுள்ளதும், மூவுலகிலுள்ளோரும் விரும்பத் தக்கதாயுமுள்ளது. அவர் தரித்திருக்கும் உத்தம பீதாம்பரம் சூரியகிரணம்போல் ஜாஜ்வல்லியமானது. தாமரைப்புஷ்பம்போன்ற அவரது திருமுகமண்டலம் கருத்த குந்தலங்களால் சிறிது மூடப்பட்டுப் பிரகாசிக்கிறது. இவ்விதரூபம் பொருந்தியவராய், பார்த்தனுக்கு எவ்விதத்திலும் தோழனாய் விளங்கிய ஸ்ரீபகவானிடம் எனக்கு நிஜமான பக்தி எக்காலத்திலு முண்டாகட்டும்!" என்பதே.

'எப்போது அதர்மம் தழைத்தோங்கி, தர்மம் மிகவும் குறைவடைகிறதோ அப்போது நான் இப்புவியில் அவதரித்து, துஷ்டநிக்கிரகம், சிஷ்டபரிபாலனம் செய்து, தர்மத்தை நிலைநாட்டுவேன்' என்று ஸ்ரீபகவான் அருளிச்செய்த வாக்குப்பிரகாரம், இப்பரதநாட்டில் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் ஏற்பட்டுள்ளனவென்று ஆஸ்திக ஹிந்துக்களின் பூர்ணமான நம்பிக்கை. இவ்வித அவதாரங்களுள் ஸ்ரீகிருஷ்ணாவதாரம் பலவிதத்திலும் சிறப்புற்றது. பகவான் தம் அடியாருக்கும் அடியாராக விளங்கிக் காட்டியுள்ள ஸௌலப்யம், தாம் பரமாத்மா என்பதை ஆங்காங்கே விளக்கக்கூடிய பராக்கிரமச் செயல்கள், உலகத்தார் அனுஷ்டிக்கவேண்டிய விநயம், வாக்குறுதி, பொறுமை, தயைமுதலிய நற்குணங்களைவற்புறுத்திக் காட்டக்கூடிய கிருத்தியங்கள் இவைகளும், மற்றைய உத்தமகுணங்களும் ஸ்ரீகிருஷ்ணாவதார சரித்திரத்தில்போல் மற்ற அவதாரக் கதைகளில் காண்பதரிது. பரமகாருணிகனும், பரம

புருஷனுமான ஸ்ரீகிருஷ்ணனிடத்தில், கோபிகைகள் விஷயத்தில்அவர் நடந்துகொண்ட சில விஷயங்களைப்பற்றிக் கேவலமாய் எண்ணித் தூஷித்துப்பேசும் அஞ்ஞர்களும் சிலர் இருக்கலாம். இவ்வித எண்ணம், கோபிகளின் நிஜஸ்வரூபமும், ஸ்ரீகிருஷ்ணனது லீலைகளின் ரஹஸ்யமும் நன்கு அறியாதவர்கள் தங்கள் புத்தியீனத்தால்கிரஹிக்கும்அபிப்பிராயம்.உலகிலுள்ளோர் தாங்கள் சிற்றின்பசுகங்களை யதேஷ்டமாய்அனுபவிப்பதற்கு ஸ்ரீகிருஷ்ணன் அவ்வாறு வழிகாட்டியிருக்கிறார் என்பது கனவிலும் நினைப்பது பெருந்தவறு; மிகவும் பாவகரமானது. கோபிகைகளுள், சிலர் வேதாபிமானிகளான தேவதைகளென்றும், சிலர், முன்னர் ரிஷிகளாயிருந்து, பூமியில் அவதரித்துள்ள பரமபுருஷனது திவ்வியமங்கள விக்கிரஹத்தின் ஆச்லேஷசுகத்தை யடையக்கருதி, இவ்வவதாரத்தில் கோபகன்னிகைக்ளாய்ப்பிறந்துள்ளாரென்றும்,வேறு சிலர், பகவானது மந்திரோபாஸனங்களிற் கூறப்பட்டுள்ள நித்திய ஸித்தர்களான கோபிகைகள் என்றும், மற்றவர் பூர்வம் அப்ஸரஸ்திரீகளாயிருந்து, பிறகு கோகுலத்தில் கோபஸ்திரீகளாய் வந்தவரென்றும் புராணங்களிற் கூறப்பட்டிருக்கிறது. நம்முள் நவீன நாகரிகத்தை அனுசரித்துப் பேசும் தன்மையுள்ளோருக்கு உதிக்கக்கூடிய சங்கையை, ஸ்ரீ சுகாசார்யர், பரீக்ஷித் மஹாராஜன் கேட்பதுபோல் கேட்டுக் கொண்டு, அதற்குத் தக்க சமாதானஞ் சொல்லியிருக்கிறார். ஸ்ரீபகவானுடைய ராஸலீலையைக் கேட்டு முடிந்ததும், பரீக்ஷித் மகாராஜன் ஸ்ரீ சுகரைநோக்கி, 'பகவான், தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அவதரித்த ஜகதீச்வரன் இவ்வாறு உலகவிருத்தமானவும், நிந்திக்கத்தக்கதுமான காரியத்தை ஏன் செய்தார்? தர்மநிலை ஏற்படுத்தி ரக்ஷிப்பவரும், தமது அனுஷ்டானத்தால்தர்மத்தை உபதேசிக்க வந்தவரும்அவரே. அவர் அவாப்த ஸமஸ்தகாமன்; இவ்வுலக சுகங்களால் அவருக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை.யாதவர்களுக்கு அதிபதியாய்ப்பிறந்தவர். பிரஜைகளைநல்வழியிற்செலுத்தக் கடமைப்பட்டவர். அவ்விதமிருக்க, அவர் பிற ஸ்திரீகளின் கற்பையழிக்கத் துணிந்ததன் காரணமென்ன?" என்று வினவ, ஸ்ரீசுகப் பிரும்மரிஷி வெகுவாறு சமாதானம் கூறியிருக்கிறார். (1) ஸ்ரீமந்நாராயணன் ஒரு புருஷன் என்றும், ஜகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் ஸ்திரீபோன்றவர்களென்றும், பதிவிரதை தனது கணவனையே எக்காலத்திலும் பூஜித்து அவனிடம் வழிபடுவது எவ்வாறு உசிதமோ, அவ்வாறே எல்லா ஜீவக் கூட்டங்களும் பரமபுருஷனிடம் ஈடுபட்டு, ஜன்மத்தை ஸபலமாக்கிக் கொள்வது அவசியமாகும். (2) பகவான் எல்லாப் பிராணிகளுக்கும் அந்தர்யாமியா யிருப்பதுபோல், கோபிகைகளுக்கும் அந்தர்யாமியா யிருந்தார். அதனால் அவருக்கு பரஸ்திரீஸங்கம தோஷமேற்படுமோ? எட்டுவயதுக்குள் இவர்களுடன் ராஸலீலை செய்ததாய்ச் சொல்லப்பட்டுள்ள பகவானுக்குச் சாதாரண மனுஷருக்குரியஸுகத்தில் அபேக்ஷை யிருந்திருக்கக் கூடுமா? ஒருவன் நூற்றுப் பத்துக்கோடி கோபிகைகளை பிராகிருத சுகத்தால் திருப்திசெய்திருக்கக் கூடுமா? எல்லாவற்றையும் துறந்து, மெய்ம்மறந்து, தம்மை நாடிவந்த கோபிகைகளைப் பகவான் தமது யோகமாயையால் திருப்திசெய்து வைத்தாரென்றும், அதனால் தாம் ஒருவித திருப்தியையுமடையவில்லையென்றும், உலகில் சாதாரண ஸ்திரீபுருஷர்களின் சங்கமகாலத்தில்உண்டாகக் கூடியகாரியங்கள் ஒன்றும் ராஸலீலைகளில் ஏற்படவில்லையென்றும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. (3) மேலும்,இவ்வித லீலைகளின் சிரவணத்தால் ஒருவன் பகவத் பக்தி பரவசனாய்; காமஜயத்தைப் பெறுகிறானென்று பலன்சொல்லப்பட்டிருக்கிறது. (4) கோபிகைகளுக்கு இடையிடையேஉண்டானஸ்வதேகாபிமானம், தங்கள் சௌந்தரிய சம்பந்தமான கர்வம் முதலான சில இழிகுணங்கள் உண்டானபோது, பகவான் அவர்களை விட்டுப் பிரிந்து தவிக்கச் செய்ததையும், ராஸலீலையின் இறுதியில் அவர்களுக்கு அகம்பாவாதி துர்க்குணங்கள்ஒழிந்து, அவர்கள் பரமபுருஷனது நிஜஸ்வரூபத்தை யறிந்ததும், பகவானுடன் ஐக்கியமாகி, அழிவற்ற பேரானந்தத்தைப் பெற்றார்கள் என்று வர்ணிக்கப்பட்டிருப்பதையும் ஆராய்ந்து நோக்கில், பகவானுடைய அவ்வித கிருத்தியங்களில் யாதொரு சங்கையையும் வைக்கத் தகாதென்பதும், அவற்றை வியாஜமாய்க்கொண்டு இக்காலத்தவரும் துராசாரங்களைக் கைப்பற்றத் துணிவதுஎவ்விதத்திலும் பாபகரமென்பதும், நன்கு விளங்கும். பால்யம் முதல் ஸ்ரீகண்ணன் செய்த அமானுஷ கிருத்தியங்கள் பல உள.

97

பூதனையின் ஸம்ஹாரம், பகாசுரன், சகடாசுரன், திருணாவர்த்தன் இவர்களைப்பகவான்வதைத்து மோக்ஷமளித்தல், கோவர்த்தனகிரியை 7 நாள் தாங்கி நிற்றல், காளிங்கமர்த்தனம், யசோதைக்குத் தமது வாயைத்திறந்து விசுவரூபங் காட்டுதல், அவரது பிரபாவத்தைப் பரிசோதிக்கக் கருதிய பிரும்மதேவனது அகம்பாவத்தையடக்குவதற்காக, அவர் மந்திரபலத்தால் திருடிப் போன மாடுகள், கோபாலர்கள் முதலானவற்றை பகவான் சிருஷ்டித்தல், ராஸலீலைகள், இவைகளெல்லாம் கேட்போரைப் பரிசுத்தர்களாக்கி, நற்கதி யடைவிக்குமென்பது ஆஸ்திக ஹிந்துக்களின் திடமான மதம். இவற்றின் பெருமையைப்பற்றி, பரீக்ஷித் மஹாராஜன் 'பிரும்மரிஷியே, நான் க்ஷத்திரியஜாதியில் தாழ்ந்தவனானும், தங்கள் வாக்கிலிருந்து பெருகும் கிருஷ்ணனது புண்ணிய கதாமிருத பானத்தால், எல்லா லோகங்களிலும் மிக்க தன்யனாய் விட்டேன்' என்று மனதாரத் துதித்தார்.

ஸ்ரீபகவானது லீலாவிசேஷங்கள் ஸ்ரீமத் பாகவதத்தில் வெகு விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றை எல்லோரும் எளிதிலறிந்து ஆநந்தப்படுவதற்காக, லீலாசுகர் என்றும், கர்ணாமிருதாசார்யர் என்றும் சொல்லப்பட்ட மஹான், ஸ்ரீ 'கிருஷ்ண கர்ணாமிருதம்' என்னும் கிரந்த ரூபமாக வெளியிட்டிருக்கிறார். இதிலடங்கியுள்ள சுலோகங்கள் அர்த்தம் நிரம்பினவைகளாயும் எளிதில் அறியக்கூடியனவாயுமிருப்பதுடன், கானரூபமாய்ப் பாடிக் களிப்பதற்கும் மிக்க ஏற்றவை. சில வருஷங்களுக்கு முன்னர்கூட பல ஹிந்துக்கள் வீடுகளில் விடியற்காலத்தில் புருஷர்களோ ஸ்திரீகளோ இவற்றைப் பாடுவது வழக்கமா யிருந்தது. நமது பூர்வீகமான கிரந்தங்களுக்கு, தற்காலம் ஏற்பட்டுள்ள மெல்லிய தசையால் இவ்விதவழக்கமும் குன்றிவருகிறது. ஆஸ்திக ஹிந்துக்கள் இப்போது இக்கிரந்தவிஷயங்களைத்தெரிந்துகொள்வதில் சிரத்தையுள்ளவர்களாயிருப்பார்களென நம்புகிறோம். இக் கிரந்தகர்த்தாவின் பூர்வ சரித்திரமும், இவர் அதை இயற்ற நேர்ந்த காரணமும் வியக்கத் தக்கனவே. இவர் ஆதியில் தமது பாஷாஞ்ஞானத்தை நரஸ்துதி செய்வதில் உபயோகப்படுத்தி, வெகுதனம் சம்பாதித்து, அதைச் **சிந்தாமணி** யென்னுமொரு தாஸியிடம் கொடுத்து, சிற்றின்பங்களை அனுபவிப்பதிலேயே வீண்காலங்கழித்துவந்தார். பூர்வ ஜன்ம பாப விசேஷத்தால் அவர் இவ்வாறு அதர்ம மார்க்கத்தில் வெகுகாலம் சென்று வந்தார். நற்குலத்திலுதித்தும் இவ்விதம் அஞ்ஞானமாகிற அந்தகாரத்தில் சுழன்று தவிக்கும் அவரைக் கரையேற்றவேண்டுமென்று பகவத் ஸங்கற்ப முண்டாயிற்று. சாதாரண ஆசாரியனைக்கொண்டு இவரது அஞ்ஞான இருளைப் போக்குவது அசாத்தியமென ஸ்ரீபகவான்கருதி, இவர் ஒரு பெருந்தெய்வமாகக் கொண்டாடி வரும் தாஸியைக்கொண்டே தக்க தருணத்தில் இவரைக் கைதூக்கி நற்கதியில் சேர்ப்பிக்க வேண்டுமென்று எண்ணினார். இவரது தந்தையின் சிரார்த்த தினம் வந்தது. சிந்தாமணியை விட்டு அரைக்ஷணங்கூட விட்டுப்பிரிய மனம் வராத இவர், லோகாபவாதத்துக்குச் சற்று அஞ்சி, வெகு சிரமப்பட்டு அன்று சிரார்த்தம் முடியும்வரையில் அவளிடம் போகாம லிருந்தார். கூடியசீக்கிரம் அதை முடித்துக்கொண்டு, உண்டது முண்ணாததுமாய் அவள் வீட்டண்டை ஓடிக் கதவைத்தட்டி, அது திறக்கப்படாமையால், வெகுநேரம் காத்திருந்து அதுஉடையும்படி உரத்து இடித்தார். கதவைத் திறந்து அவரை உள்ளே வரவழைத்துக்கொண்டால், ஊரிலுள்ளோர் தன்னையும் நிந்தித்து இம்சிப்பர் என்று பயந்த அந்தத் தாஸி அதைத் திறவாமல் சும்மாயிருந்து விட்டாள். அவளைக் காணாமல் தன் பிராணன் தரித்திராது என்றுணர்ந்த அந்த அந்தணர் அவ்வீட்டின் மேலேறிக் குதித்து உள்ளே சென்று அவளைக் கண்டு தழுவ ஆரம்பித்தார். அவள் மனமிரங்கி, அவரைப் பார்த்து, "பெரியோரே, நசிக்கக்கூடிய மாம்ஸபிண்டமான எனது சரீரத்தின்மேல் நீர் இவவளவு அளவற்ற பற்று வைத்துத் தவிப்பது மிகவும் விசனிக்கத்தக்கது. என்னிடம் வைத்துள்ள பிரேமையில் ஆயிரத்திலொரு பங்காவது நீர் ஸர்வேசுவரனிடம் பாராட்டி பக்தி பண்ணினால், ஸம்ஸார துக்கம் நீங்கி நற்கதி பெறலாமே?" என்று பலவாறு உபதேசிக்க, அவரும் வெட்கத்தால் தலைகுனிந்து நின்று, பச்சாத்தாபத்தால் வருந்தி, தான் அஞ்ஞானத்தில் ஆழ்ந்து உண்மையறிய வழியற்றிருப்பதை வெளியிட்டார். இது கேட்ட சிந்தாமணி என்பவள், அவ்வூரிலுள்ள ஸோமகிரி என்னும் மஹானை அவர்

குருவாக அடுத்து உபதேசம்பெற்றால், அவருக்கு நற்கதி உண்டாகுமெனப் புத்திகூறினள். அவ்வாறே அவர் அம்மஹானுபாவரை நாடித் தனக்கு உபதேசஞ்செய்து கரையேற்றும்படி வேண்டினர். அவரும் லீலாசுகரைத் தம்முடன் வசிக்கச்செய்து, நல்வழியிற்செல்லும்படி உபதேசித்துச் சிக்ஷித்துவந்தார். நாளடைவில், ஸத்ஸங்க பலத்தாலும், குரு கடாக்ஷத்தாலும் இவருக்குக் காமக் குரோதாதி இழி குணங்கள் அழிந்து, தர்மத்தில் புத்தி நாடி, பகவத் ஸ்வரூபத்தை அறிந்து கடைத்தேறவேண்டுமென்று நிஜமான ஆவலுண்டாயிற்று. அப்போது ஸோமகிரி இவருக்கு மந்திரோபதேசஞ் செய்து, ஜீவேச்வர விவேகத்தையும், ப்ரகிருதி புருஷ விவேகத்தையும், மோக்ஷ ஸ்வரூபத்தையும் எடுத்துக்காட்டினர். இவர் அந்த மந்திரார்த்தத்தை வெகுவாறு அநுஸந்தானம் பண்ணி பக்தி பரவசரானர். இவ்வித மனப்பாங்கடைந்த இவர் விஷயத்தில் பகவத்கடாக்ஷம் பூர்ணமாய் ஏற்பட்டது. ஒருநாள் இவரது ஸ்வப்னத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவான் தம் வடிவழகையும், தாம் செய்துள்ள லீலைகளையும், தெய்வீகச் செயல்களையும் இவருக்குக் காட்ட, இவற்றையெல்லாம் இவர் கண்டு களித்து ஆநந்தக்கடலில் மூழ்கினர். தாம் மட்டில் இவ்வித சுகானுபவம் செய்வதைக்கொண்டு திருப்தி யடையாமல், அக்காலத்திலுள்ள மற்றோரும் பின்புள்ளோரும் ஸ்ரீபகவானது குணநயங்களையும், லீலா விசேஷங்களையும் கேட்டு உஜ்ஜீவிக்கும் பொருட்டு, பகவத்விஷயமான தமது சுகானுபவங்களை 'கர்ணாம்ருதச் சுலோகங்கள்' மூலமாக வெளியிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஸர்வேசுவரனைத் தவிர வேறொன்றிலும் மனம் நாடாமல் பிரம்மஞ்ஞானியாய் அலைந்து திரிந்த ஸ்ரீ சுகரைப்போல, இவரும் ஸ்ரீகிருஷ்ணனது செளந்தரியத்திலும், பாலலீலைகளிலும் மனம் ஈடுபட்டு, அவற்றையே பரமபுருஷார்த்தமென நினைத்தவராதலால், இவருக்கு லீலாசுகர் என்று அக்காலத்துப்பெரியோர் நாமஞ்சூட்டிப் புகழ்ந்தார்களென்பது பிரசித்த ஐதஹ்யம். இவர் செய்துள்ள சுலோகங்கள் ஆஸ்திகர்களின் சுரோத்திரேந்திரியத்திற்கும் மனத்துக்கும் அருஞ்சுவையுள்ள அம்ருதவர்ஷம் போலாகுமெனபதற்கு ஐயமில்லை.

எச்சிலின் இலக்கணம்

THE GRAMMAR OF SPITTLE

[மிஸ்டர் K. P. சந்தோஷம், பி.ஏ., எல்.டி.]

எச்சிலென்னுஞ் சொல் 'எஞ்சு' என்ற பகுதியிலிருந்து தோன்றுவது. எச்சம் என்பது அவ்வாறே. இரண்டு சொற்களுக்கும் பொருளொன்றே. (எஞ்சு=மிகு; எஞ்சியது=மிகுந்தது; இதுஎச்சிலென்றும் எச்சமென்றும் விகுதியில் மாத்திரஞ் சிறிதுவேற்றுமையுடன் வழங்கும். உணவில் எஞ்சி நின்றது எச்சில்; ஒரு மகன் தன் வாழ்விற்குப்பின் வைத்துப் போகும் மக்களுக்கு எச்சம் என்று பெயர்.

"தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப்படும்"

என வருதல்காண்க. இவற்றிற்கிடாக மற்றொரு பகுதியையும் பார்ப்போம். 'மிஞ்சு'என்ற முதல நிலையை யடியாகக் கொண்டு மிச்சம் என்ற சொல் பிறக்கிறது. ஆனல் 'மிச்சில்' என்று வேறொரு வார்த்தையு மிதனடியாய்த் தோன்றும்:—

"வித்து மிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்" என்றார் குறளில்.

மிச்சில் என்பதும் மிகுந்து நிற்பதையே யுணர்த்தும். ஆக எச்சம், எச்சில், மிச்சம், மிச்சில் என்பவை யாவு மொருபொருளனவே; மிகுதியையே இவை குறிக்கும். ஆனல், 'எஞ்சு' என்ற பகுதிக்கு இன்னொரு பொருளுமுண்டு. இது நாமிதுவரையிற் கண்டதற்கு முற்றுமுரண்பட்ட பொருள். எஞ்சு=குறை; எச்சம்=குறைந்தது. இக்குறிப்பைப் பெயரெச்சம், வினையெச்சம் எனவரு மிலக்கணச் சொற்களில் நன்கு காணலாம். பெயரெச்சம்=பெயர்க்குறை; வினையெச்சம் = வினைக்குறை. 'மிஞ்சு' என்பதற்கு மிவ்விதப் பொருளுண்டு. அதை வழக்கிற் காணலாம்.

ஓரே பகுதிக்கு இங்ஙனமுற்று முரண்பட்ட இரண்டர்த்தம் வருவது பொருந்துமோ வெனின்? கூறுவோம். இம்முரண்பாட்டாற் பண்டைக்காலத் தமிழ்மக்களின் மரபொன்று வெளியாகிறது. குறைவு எங்ஙனமிழுக்குடையதோ வங்ஙனமே மிகுதியுங் குற்றமுடையதென்றறிந்த முன்னோர் அவை யிரண்டையுமொன்றாய்த் தாட்டி, 'எஞ்சு' என்ற ஒரு சொல்லிலடக்கிக் காட்டினர். மிகைபடலுங்

தப்பார்க்குத் தப்பாய தப்பாக்கித் தப்பார்க்குத் தப்பாய தூஉ மழை.

குறைபடலுமாகிய விரண்டுந்தீதே; அளவுபட நிற்றலே யழகு. ஆதலின் குறைதலுக்கு மிகலுக்குமுள்ள வேற்றுமையை விலக்கி யவற்றிற்குள்ள வொற்றுமை தெற்றெனத் தெரியும் வண்ணம் ஒரு சொல்லிற்கே பொருளாயமைத்தார். அன்றியும் குறைவும் மிகுதியுமொன்றே யென்பது மற்றொரு வகையானும் விளங்கும். இருபத்தைந்தென்ற எண்ணை எடுத்துக்கொள்வோமாயின் அதை இருபதின் மிகுதியென்றாயினும், முப்பதின் குறைவென்றாயினுங் கூறலாம். ஓரிலக்கத்தின் மிகுதியே வேறோரிலக்கத்தின் குறைவாய்நிற்பது வெளிப்படை. இப்படியே எப்பொருளினு மொன்றின் மிகுதி வேறொன்றின் குறைவா யிருக்குமென்று பொதுவாய்க் கூறக்கூடும். இக்கருத்தை யுன்னியே 'எஞ்சு' என்பதை இருபொருளுடன் வழங்கினார்கள்.

வழக்கத்தில் எச்சிலென்றசொல்லிழிவையே யுணர்த்தும்; எச்சம் என்பதோ அவ்வாறின்றி யாவரும் போற்றும் பொருளையேதரும். ஆயினு மவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசத்தையொழித்து "பெற்றபிள்ளை எச்சில்" என்றாரொருவர் (சித்தர்).இவ்வாறுகூறியவர் நன்கு ஊன்றி யுணர்ந்தவரேயாவர். ஏனெனின் எச்சிலின்னதென்றறியாமக்களுக்கு அதன் தன்மையை இதனாலெடுத்துக் காட்டினார். பொன்னைப் போற்றி வளர்க்கப்படு மக்களைத் தெருவிலெறியப்படு முணவின் மிகுதியுடனென்றவைத்திரண்டிற்குமுள்ள சம்பந்தத்தை விளங்க வைத்தார். அவர் கடுந்துறவியாதலின் உலகோர்பாராட்டும் வேற்றுமைகளின் பயனிலாமையைப் பசுமரத்தாணிபோற் பதியவைத்தற் கங்ஙனங்கூறினாரென்க. எச்சிலைப்பற்றி இன்னுமிவர் சொல்லியிருப்பதைச் சித்தர் நூலில் விரியக்காணலாம். நிற்க, மனிதர் தங்கள் மரணத்திற்குப் பின் வாழ்வதற்கென்று மிகுத்துவைக்கும் மைந்தர்களை எச்சிலென் றழைத்தோமாயின் மரஞ்செடிகளின் காய் பூ முதலியவு மெச்சிலாக வேண்டுமென்றோ? ஆதலின் வையகம் எச்சிலால் நிறைந்திருக்கிறது; எதையுமெச்சிலென்றிகழ்வதற்கில்லை யென்பது சித்தர் கொள்கை.

இனி, இகழப்படு மெச்சிலிற்றானும் வேறுபாடுகளுள. கற்புடைய மனைவியர் தங்கணவரெச்சிலை மூவாமருந்தென்று கொள்வர். குழந்தைகள் தஞ்சிறுகைகளா லளைந்து வைதத சோறு, "அமிழ்தினு மாற்றவினிதே" என்றார் தெய்வத்தன்மை திருவள்ளுவர். அன்பு முதிர்ந்து நிற்குமிடமெல்லாம் எச்சில் தன்னிழிவை யிழந்து தலைமை பொருந்தி நிற்கும். மாண்புடைய துறவிகளெச்சிலும் சான்றோரெச்சிலும் யாவராலும் பேணியுணப்படும். அன்பின் மகிமை யாரறிவார்? அதன் பெருமை என்னே! அது கல்லைக் கனியாக்கும், எட்டியைக் கட்டியாக்கும், வேம்பைக்கரும்பாக்கும், நீரைப்பாலாக்கும், நஞ்சை மருந்தாக்கும். உலகம் நிலைபெறுவது அதனாலேயே; மக்களுய்வதும் அதனாலேயே. இதைக் கருதியன்றோ "அன்பே சிவம்"என்றார் திருமூலர். ஆதலின், அன்புண்டாயின் எச்சிலுமில்லை, இழிவுமில்லை; அன்புண்டாயின் குறைநிரம்பும்; மிகுதியடங்கும். அன்பில்லையாயின் மாசு, மறு, ஏற்றம் இறக்கமாகிய வின்னும் பல பிழைகள் வந்துகூடும். அன்பாலொத்திருக்கலாம்; ஒத்திருந்தால் வாழலாம்.

அன்புடையார் செய்கையி லாசாரம் வேண்டியதில்லை. "உள்ளொன்று வைத்துப் புறமொன்று" பேசாத நண்பர் நம்மிடம் வந்தால் அவர்களை யாசாரத்தின்படி யழைத்து நாம் உபசாரஞ் சொல்வதில்லை. அகத்தில் உவப்பும் முகத்தில் முறுவலுந்தாமே வருகின்றன. எவ்வகையிடருமின்றிப் பேசுகிறோம். பொருளுக்கேற்றவாறு உரைபெருகியோ சிறுகியோ பாய்கிறது. அவர்களிடத்து நமக்குக் கூச்சமுமச்சமுமின்மையால் நமது விருப்பையும் வெறுப்பையும் நாம் மறைப்பதில்லை. ஆகையால் நமது மனத்திற் பிறக்குமெண்ணங்கள் மூட்டின்றி முகத்தில் விளங்கித் தடையின்றிச் செய்கையில் வெளியாகின்றன. மனம், வாக்கு, காயம் ஆகியமூன்றிலுமுண்மையே குடிகொண்டிருக்கிறது. இது, வாய்மை நிலை; தூய்மை நிலையாவது மதுவே. அவ்வாறின்றி நாமையமுறுமொருவர் நம்மிடம் வந்தால் நமதுரை குன்றுகிறது. நாம் விரும்பாதவர் நமதண்டை வரின் நம்முடைய நினைவுகளை மறைக்க முயல்கிறோம். ஆசாரத்தின்படி நின்று திட்டங்களின் படியு மொழுங்கின்படியும் பேசி நடிக்கிறோம். பொருளிலாச்சொற்களை வழங்குகிறோம். மரியாதை யென்பதை மிகவும் பற்றி நிற்கிறோம். அகத்திலொன்றிருக்க முகத்தி லொன்றைக் காட்டி "வாருங்கள், அமருங்கள்" என்று உபசாரஞ் சொல்லுகிறோம்.

இங்ஙனமே, இறைவனது உண்மைத் தன்மையை யறிந்து, அவன்மீது தங்களன்பைச் செலுத்தி, வாழ்க்கையின்பயனறிந்து செம்மையாய் நடப்பவர் எண்ணரிய சடங்குகளின் விதியைக் கடந்துநின்று சுகமடைவர். தெய்வத்தை யணுகுதற்கு வாய்மையே சிறந்தவழி யென்றுணர்ந்தார் ஆசாரத்திற்குட்பட்டு நெஞ்சுபுண்ணுவதில்லை. உண்பதிலுங் குடிப்பதிலும் நகைப்பிற்கிடமான அனுஷ்டானங்களை அவர் கைக்கொள்ளார். அன்பினலுண்டாகும் நம்பிக்கை யவர்க்குண்டாதலின் வெளிவேடத்தை யவரெள்ளளவும் மதியார். அன்பின்னதென்றறியாது சுயநன்மையின்பொருட்டுக் கடவுளை வணங்குவாரும், பகை, பிணி முதலியவைதமை வருத்தாதிருக்க வேண்டுமென் றிறைவனைத் தொழுவாரும் இறைவனது அருளைக் காணது மயிரை மழித்தலினு முடிப்பதினும் உடைதரிப்பதிலும், நீராடியுண்பதிலும் நுண்ணிய பலமுறைகளைக் கையாடி அதனலேயே தெய்வத்திற்குப் பெரிய தொண்டுசெய்து விட்டதாக வெண்ணி இறுமாப்படைந்து ஏனையோரை யிகழ்ந்து தடுமாறுவர். இத்தகையோரை யுற்றுநோக்குங்கால் யாவருமெளிதிற் காணக்கூடிய தொன்றுண்டு. தெய்வத்தின் பெயர் அவர்கள் வாயில சாலவுந் தோன்றுமேயொழிய தெய்வத்தின றன்மையிவர்கள் குணத்திற்பெரும்பாலுந் தோன்றுவதில்லை. இததகையார்க்கு, ‘எச்சில்’ என்ற சொல் செவியிற்பட்ட மாத்திரத்தில் தேகம் நடுக்குறும். தீட்டென்றுந் தீண்டத்தகாதனவென்று மிவர்கள் விலக்கும் பொருள்கள் பல.

கறம்ரூரேத்துங கண்ணப்பனெச்சில் கண்மூன்றுடைய வள்ளலாலும் முவந்தேற்கப்பட்டது. அதுதானுங் கேட்டோா காதைப் புளிக்கச்செயயும்பன்றியிறைச்சியினெச்சில். அதை வாரியுண்டு மஙகைபஙகன் மகிழ்ந்தானெனப் புராணங்கூறும். நீராடி நீறணிவதாலேயே முத்தியடையமுயல்வோர் கண்ணப்பன் கதையை எங்ஙனமுணர்வார்? ஒன்றுமுணரா வேடனெச்சிலுக்கு அத்தகைய தூயமை வந்ததெங்ஙனம்? வேதாகமவிளக்கஞ் சிறிதேனு மறியாச் சிறுமகனுக்கு வந்த பெருமைதா னென்ன! அன்பெனும் பெருவெள்ள மவனுள்ளத்திற் பெருகியதாலன்றோ யாவரும் வியக்கு மப்பெருநிகழ்ச்சி நடந்தது! இதிற் சடங்குமில்லை, சாஸ்திரமுமில்லை. முக்கண்ணன் மேனி சிவந்தவண்ணம் கண்ணப்பனன்பு பழுத்திருந்தது. இதைத்தவிர அங்கு வேறென்றுமில்லை. இவண், எச்சிலென்பது வானுரவோங்கி வளர்ந்துநின்றது. இதைப்போலவே, வனத்திற்சென்ற இராமன்மீது தனக்கிருந்த வன்பைக்காட்டும் பொருட்டுத் தான் புசித்து ருசித்து மிகுத்துவைத்திருந்த பழவகைகளைச் சவரி கொடுததாள். அவறறை வாங்கியுண்டு அகமகிழ்ந்தான் தசரத புத்திரன். மற்றும், அனுமனுடன், மற்றோர் சாதியென்றிகழ்ந்திடாமல், ஓரிலையிலுண்டு தன் அருளைக்காட்டிய இராமனது செய்கை அறிவுடையோரால் போற்றப்படுவதே. எச்சிலி னிலக்கணத்தை இதனலுணர்ந்து நன்னெறிச்செல்மின்.

நமது சிறு கதை
OUR SHORT STORY
சசீந்திரன்
(“மௌத்கல்யன்” எழுதியது)

I

ஒற்றையடிப்பாதை. இருபுறத்திலும் காவல் வீரர்களன்ன புஷ்பச்செடிகள் வளர்ந்து நிற்கின்றன. இவைகள் காற்றினல் அசைந்து கொடுப்பது அவ்வழியாக வரும் இளைஞனுக்கு வணக்கம் செய்வதுபோ லிருந்தது. இச்செடிகளுக்கு இருமருங்கும் பசும்புற்றரை. ஆங்காங்கு மேடைகளும் அவைகள் நடுவண் புஷ்பச்செடிகளும் திகழ்கின்றன. ஒற்றையடிவழியாகச்செல்லும் ஆடவன் பின்புறத்தில் தன் கையைக் கட்டிக்கொண்டு தலை குனிந்தவண்ணம் ஆழ்ந்துயோசித்துக்கொண்டே அடிமேல் அடி எடுத்து வைத்துக்கொண் டிருக்கிருன். சசீந்திரனுடைய நெற்றிக்கோடுகள் அவனுடைய கவலைகளை விளக்கின. அவனுடைய கபோலப் பிரதேசங்கள் அவனுடைய அறிவுக்கஞ்சியோ என்னவோ உள்ளே அடங்கி ஒடுங்கிக் கிடந்தன. அவனுடைய கண்கள் சிங்கத்தின் கண்கள்போல் பிரகாசத்துடன் விளங்கின. அவன் ‘கிராப்’ செய்துகொள்ளவில்லையே யாயினும் அதற்கு அஸ்திவாரமாகத் தன்மயிரைவெட்டிக்கொண்டிருந்தான். மேலே மெல்லியதான ஓர் அங்கியை அணிந்து, அதனமீது சிறியதொரு துவாலையைப் போட்டுக்கொண்டிருந்தான். நெற்றியையும் புருவங்களையும் அடிக்கடி நெறித்துக்கொள்வதனல்

ஏரி னுழாஅ குழவர் புயலென்னும் வாரி வளங்குன்றிக் கால்.

அவனுடைய திலகத்தில் ஒருபாதி அழிந்து போயிருந்தது. மேற்கூறப்பட்ட நந்தவனத்திற்குள் நுழைந்ததுதான் சசீந்திரனுக்குத் தெரியும். பிறகு, அவனை அவனுடைய கவலைகள் அத்தோட்டவழியாக இழுத்துச்செல்கின்றன. சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தமென்னும் ஐவகை உணர்ச்சியும் அற்ற ஒரு யோகிபோல் அவன் அச்சமயத்தில் இருந்தான் என்பது எவ்விதத்திலும் பொருந்தும்.

சசீந்திரனுக்கு என்ன கவலை? அவன் யார்? இவைகளை அறிய நேயர்கள் ஆவல்கொண்டிருக்கலாமல்லவா? மயூரபுரியில் முனீந்திரர் என்ற ஒருஜமீன்தார் இருந்தார். இவர் பரம்பரையான ஜமீன்குடும்பத்தைச் சேர்ந்தவர். மொகலாய ஆட்சி வடஇந்தியாவில் அதிகப் பிரசித்திபெற்றிருந்தபோது இவருடைய குடும்பத்தாருக்கு இருந்த செல்வாக்குக்கு அளவேயில்லை. அச்சமயத்தில், முனீந்திரபாபுவின் மூதாதையரில் ஒருவர், ஒரு முஸல்மான் பிரபுவுக்கு அவனுடைய உயிரையும் அவன் குடும்பத்தாருடைய மானத்தையும் காப்பாற்றிக்கொடுத்து அதனால் ஒரு கிராமத்தைச் சன்மானமாகப் பெற்றவர். அங்ஙனம் சன்மானமாகப்பெற்ற நாகேந்திரன், அதனை விருத்தியாக்கி அதன் மூலமாக வேறு சில கிராமங்களையும் வாங்கினான். இங்ஙனம் படிப்படியாக இந்த ஜமீன் முன்னேறிக்கொண்டு வந்தது. அதிருஷ்ட வசமாக, நாகேந்திரன்முதல் முனீந்திரன்வரை ஒவ்வொருவருக்கும் ஒரேபிள்ளை. வமிசம்பெருகினால் சொத்துக்கள் பங்கிடப்பட்டு ஒவ்வொருவருக்கும் சிறிது பங்கே கிடைத்திருக்கும். ஆனால் ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒரேகுமாரனாதலால் நாகேந்திரன் பெற்ற சன்மானப்பொருள் விருத்தியாகிக்கொண்டே வந்தது. முனீந்திரனுக்கு இருபத்தேழு கிராமங்களும் நகைகள் மூலமாக ஒன்றரைலட்ச ரூபாயும் ரொக்கமாகஇரண்டு லட்சத்து எண்பத்திரண்டாயிரம் ரூபாயும், காசி, கல்கத்தா, சென்னை, குற்றாலம், இராமேசுவரம், பம்பாய், தில்லி முதலிய முக்கியமான சில இடங்களில் விசாலமான தோட்டங்களையுடைய பங்களாக்களும் இருந்தன. முனீந்திரனுக்கு ஒரே குமாரனாக சசீந்திரன் பிறந்தான். சசீந்திரனுடைய பதினெட்டாவது வயதில் அவனுடைய தகப்பனார் விண்ணுலகடைந்தார். கணவனை இழந்த துக்கத்தினால், பதிவிரதையான சத்தியாபாய் தன் ஒரே குமாரனை வைத்துக்கொண்டு மயூரபுரியிலுள்ள தனது பங்களாவில் வசித்துவந்தாள். முனீந்திரன் இருந்தவரை, தன் குமாரனைக்கல்லூரிக்கு அனுப்பவில்லை. உபாத்தியாயருக்குச் சம்பளம் கொடுத்து அவனுடைய பிற்காலவாழ்க்கைக்கு அமைந்ததான கல்வியைப் போதித்துவந்தான். தகப்பனை யிழப்பதற்குமுன் சசீந்திரன், ஏறக்குறைய முனீந்திரன் விரும்பிய எல்லாக் கலைகளையும் கற்றுவிட்டானென்று சொல்லவேண்டும். ஆனால் புத்தகப்படிப்பு மாத்திரம் ஒருவனுக்கு இருந்தால் அதனால் அவனுக்கு எவ்வித நன்மையும் உண்டாகாதல்லவா? அநுபவ ஞானமும் வேண்டுமே. அதற்காக சசீந்திரனை உலக யாத்திரையில் அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை முனீந்திரன் செய்துகொண்டிருந்தான். ஆனால் அதற்குள் அவன் இயமனுடைய நெருங்கிய நண்பனாகிவிட்டான். தானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறதல்லவா? தந்தை இறந்ததும் தாயாரை விட்டுப் பிரிந்து செல்ல சசீந்திரனுக்கு மனம் வரவில்லை. ஜமீன் நிருவாகத்தை யெல்லாம் தானே ஏற்றுகொள்ள வேண்டியவனாகி விட்டான். இதனால் இவன் தன் படிப்பை விருத்தி செய்துகொள்ள முடியாமற்போயிற்று. தகப்பனார் இறந்த கவலையைப் பொருட்படுத்தாதிருக்குமாறு தாயாரை மனங்கோணாமல் நடத்தவேண்டுமென்ற கவலையும், ஜமீன் நிருவாகத் தொல்லையும் சசீந்திரனுடைய வாலிப ஊக்கத்தைச் சிறிது மட்டுப்படுத்தின என்று கூறவேண்டும். ஆனால் முனீந்திரனுடைய தந்தையார் காலமுதற்கொண்டு மயூரபுரி ஜமீனில் ஊழியம் பார்த்துவந்த இராஜ நாராயணர் என்ற ஒருவருடைய உதவி இருந்தது, சசீந்திரனுக்குச் சிறிது ஆறுதலை அளித்துவந்தது. சசீந்திரனுடைய பாட்டனார் காலத்தில் இராஜ நாராயணர் மயூரபுரி ஜமீனில் ஐந்து ரூபாய் சம்பளத்தில் ஒரு குமாஸ்தாவாக வந்து அமர்ந்தார்; முனீந்திரனுடைய காலத்தில் ஜமீன் வரிவசூல் முழுவதும் இவருடைய வசத்திலிருக்கும்படியான உயர்ந்த நிலைமைக்கு வந்தார். முனீந்திரன், தன்னுடைய கடைசி காலத்தில் இராஜ நாராயணரை இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய் சம்பளத்தில் திவானாக நியமித்தான். முனீந்-

திரன். இறந்ததும் இவர் தமது திவான் பதவி
யினின்று விலகவில்லை. ஆனால் இவர் தமது
உயர்பதவியினின்று விலகத் தீர்மானித்திருந்
தார். இவருக்கு வயது எழுபத்தைந்து. மயூர
புரி. ஜமீனிலேயே இவர் தமது உத்தியோக
காலத்தை யெல்லாம் கழித்துவிட்டார். உலகத்
தொல்லைகளினின்றும் விலகி மறுமைக்குரிய
வழியை அநுசரிக்க வேண்டுமென்று இவர்
பெரிதும் விரும்பினார். ஆனால், சசீந்திர
னுடைய வாலிபத்தையும் சத்தியாபாயின் நிலை
மையையும் கவனித்தால் இவருக்கு ஜமீன் நிரு
வாகத்தை விட்டுப்போக மனம் வரவில்லை.
ஜமீன் கவலையோடு இராஜ நாராயணருக்கு
அவருடைய குடும்பக் கவலையும் சேர்ந்து
கொண்டது.

பொன்னிருந்தென்? பொருளிருந்தென்?
மற்றென்னிருந்தென்? ஒருவனுக்குக் குடும்பம்
சரியாக அமையவேண்டும். அந்தோ! இந்தக்
காலத்தில் எத்தனைபேர் இந்தப் பாக்கியத்தை
யடையாதவர்? உத்தியோகசாலையில் பகலெல்
லாம் உழைத்துவிட்டு, மேலதிகாரியின் கோபத்
துக்கிலக்காகாமல் இன்றைய பொழுது கழிந்
ததேயென்று சந்தோஷப்பட்டுக்கொண்டுவரும்
ஒரு புருஷன், வீட்டுக்கு வந்தால் என்ன காண்
கிறான்? மனைவியின் புன்முறுவலை எதிர்பார்க்
கின்றவர் ஒரு சிலரேயன்றோ! மற்றவர்? ஒரு
சமயம் மனைவி வீட்டில் இல்லாமலே இருப்
பாள். உத்தியோக சாலையிலிருந்து கணவன்
வரும் வேளையாயிற்றே என்று எத்தனை பேரு
க்கு ஞாபகம்? குழந்தை ஒன்று இருந்தால்
அதற்குப் பலவித அருச்சனைகள் செய்து
இடுப்பிலே தூக்கிப் போட்டுக்கொண்டு, கண
வன் மேற்குப்புறமாகச் சென்றால் கிழக்கு முக
மாகச் செல்லும் பதிவிரதைகள் எத்தனைபேர்
இல்லை? மாலை ஐந்து மணிவரை தங்களுடைய
பசியை மறந்து, குழந்தைக்கு உண்டாகும்
பசியை அடியாலும் திட்டாலும் போக்கிவிட்டு
ஊர்வம்பில் ஈடுபட்டவராய் தங்களை மெய்மறந்
திருப்போர் எத்தனைபேர்? புருஷன் வரும்
சமயம் அறிந்து வீடுவந்து சேர்ந்து அடங்கிக்
கிடக்கும் இவ்வநிதாமணிகள், நாயகன் வந்த
தும், நாஸ்தி வசனம்கூறி வரவேற்போர்
எத்தனைபேர்? வீட்டிலில்லாத குறையை,
அடுக்கடுக்காகச் சிறந்த நாவலரும் அஞ்சும்
வண்ணம் எடுத்துரைப்போர் பலர். புருஷன்
வரும் சமயம்பார்த்து ஆண்டவனால் தற்கால
நாகரிகத்திற் கேற்றவாறு படைக்கப்பட்
டிருக்கும் எல்லாவித நோய்களையும் தங்க
ளிடத்தில் வரவழைத்துக் கொண்டு அவை
களுக்கு "உம்"கார சப்தத்தினாலும் "ஆ"கார
சப்தத்தினாலும் உபசாரஞ் செய்வோர் பலர்.
களைப்பினால் வந்த நாயகர்கள், உத்தியோகசாலை
யில் பட்ட சிரமம் போதாதென்று வீட்டிலும்
வந்து பரிசாரகத்தொழிலும் சமையற்றொழி
லும் செய்கிறார்கள். சமையலானதை அறிந்த
நாயகிகள் இலையில் உட்கார்ந்து, உங்களுடைய
சமையல் நளபாகமாயிற்றே என்று சொல்லி
விடுவார்களாயின் அவ்வமுத மொழிகளைக் கே
ட்டு உச்சிகுளிர்ந்து தங்களுடைய கவலைகளை
யும் கஷ்டங்களையும் மறந்துவிடும் கம்பீர புரு
ஷர் எத்தனைபேரில்லை? ஆயிரம் சம்பாதித்தா
லென்? இரண்டாயிரம் சம்பாதித்தாலென்?
வீட்டில் அடிமைதான். இதனால் ஸ்திரீகளைத்
துன்புறுத்த வேண்டுமென்பது பொருளல்ல.
சுய அறிவுகொண்டு சுயமரியாதையுடன் ஒவ்
வொரு புருஷரும் நடந்துகொள்ளவேண்டும்.

விவாகம் எதற்காகச் செய்யப்படுகிறது?
ஸ்திரீ புருஷ சம்பந்தம் ஏன் ஏற்பட்டிருக்
கிறது? குடும்பம் என்பது எதற்காக அமைக்
கப்பட்டிருக்கிறது? இவைகளை யறியாமல் எத்
தனை தம்பதிகள் தங்களுடைய வாழ்க்கையை
நடத்துகிறார்கள்? பரிதாபம். தேக அமைப்பி
லும், குணத்திலும் மற்ற நடைஉடை பாவனை
களிலும் மாறுபட்ட இருவர் சேர்க்கையினால்
இன்பமுண்டென்பதைக் கண்டே உலகத்தில்
விவாகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த விவா
கத்திற் குட்படும் ஸ்திரீ புருஷர்களுக்கிடையே
தோன்றும் காதல் தெய்விகமானது. தெய்வ
சாட்சியை ஆதாரமாகக் கொண்டே இந்தக்
காதல் என்னும் பெருந்தனம் ஆடவருக்கும்
பெண்டிருக்கும் வளர்கிறது. இந்தக் காதல்,
ஒருவனுடைய அல்லது ஒருத்தியுடைய தேக
அழகைக் கவனியாது. வாலிபத்தைப் பாராது.
இதற்கு ஆதியுமில்லை; முடிவுமில்லை. இத
னுடைய நடமாட்டத்திற்கு ஒருவரம்புமில்லை.
இத்தகைய காதலைப் பெறாத தம்பதிகளின்
குடும்பமே சீர்கெட்டுப் போகிறது. இராஜ
நாராயணருடைய வரலாற்றில் காதலைப்பற்றி
அதிகப் பிரசங்கம்செய்ய ஆரம்பித்து விட்ட
தற்கு மன்னிக்கவேண்டும். இம்மையிலும்

அம்மையிலும் நற்புகழ் பெறவேண்டியே, கிரகஸ்த தர்மம் ஏற்பட்டிருக்கிறதென்று பொதுவாகக் கூறிவிட்டு மேலே செல்லலாம்.

இராஜ நாராயணர் பணத்தைப் படைத்தார்; புகழைப் பெற்ருர். ஆனல் குடும்ப பாக்கியம் அவருக்கு இல்லை. அவருடைய மனைவி பெயரைச் சொல்லவும் நடுக்கமாயிருக்கிறது. ஏழைக் குடும்பத்தினின்றும் வந்தவள். இராஜ நாராயணர் ஏழையாயிருந்தபோது இவளை விவாகம் செய்துகொண்டார். இப்பொழுது அஷ்ட ஐசுவரியம் வந்துவிட்டது. அதனல் அர்த்தராத்திரியில் குடைபிடிக்கிருள். அட்டாலும் பால்சுவையிற் குன்ருது. பரம்பரையாகப் பெருந்தன்மை வாய்ந்த குடும்பத்திலே பிறந்தவர் வறியவராயினும் செல்வராயினும் ஒரே நிலையில்தான் நிற்பர். பகலெல்லாம் பட்டினிகிடந்து இராத்திரியில் பணம் கிடைக்கப்பெற்ருேர் விடியற்காலை எழுந்து கூத்தாடமாட்டாரோ? தன் கணவனுக்குத் திவான் பதவி கிடைத்ததும் இராதாபாய்க்குத் — அதுவே இராஜ நாராயணரால் தொட்டுத் தாலி கட்டப்பட்ட அம்மையாரின் திருநாமம் — தலைகால் தெரியவில்லை. மற்றும் இராதாபாய் இரண்டாவது சம்சாரம். கேட்க வேண்டுமோ? மயூரபுரி ஜமீன் முழுவதையும் தன்னுடைய ஒரு கட்டைவிரலுக்குள் அடக்கிவைத்துக்கொண்டிருந்த இராஜ நாராயணர், வீட்டில் வந்தால் குலாம்தான். பாவம்! அந்தச் சமயத்தில் இவரைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கும். இராஜ நாராயணருடைய மூத்த மனைவிக்கு ஒரு குமாரனும், இளைய சம்சாரத்திற்கு ஒரு குமாரத்தியும் இருந்தார்கள். இராஜ நாராயணருடைய குமாரனை நிகில சந்திரன், தன் தாயார் இறந்ததும் தகப்பனுருடைய ஆதரவில் இருக்கவில்லை. அறிவிலும் ஆண்மையிலும் சிறந்து விளங்கின தன் மகனைத் தன்னேடு வைத்திருக்க வேண்டுமென்ற ஆசை இராஜ நாராயணருக்கு அதிகம் உண்டு. ஆனல், இராதாபாயின் பெண்மையற்ற குரலும் இராட்சத குணங்களும் அவ்வீட்டில் தாண்டவம் செய்துகொண்டிருக்கும் வரை இராஜ நாராயணருடைய அபிப்பிராயங்களுக்கு என்ன மரியாதை இருக்கும்? நிகிலசந்திரன் என்னும் பெயரைக் கேட்டால் கூட இராதாபாய்க்குப் பிடிப்பதில்லை. அப்படி யிருக்க நிகிலசந்திரனை அவள் ஆதரவு செய்வளோ? ஆனல் பெற்றபாசம் போகுமா? இராஜ நாராயணர், இராதாபாய்க்குத் தெரியாமல் மாதம் இருநூறு ரூபாய் நிகிலசந்திரனுடைய செலவுக்கு அனுப்பி வந்தனர். நிகிலசந்திரன் மிதுனபுரியில் உள்ள உயர்தரக் கலாசாலையில் படித்து வருகிருன். பூதத்துவ சாஸ்திர ஆராய்ச்சியில் இவனுக்கு நிரம்பின பற்றுள்ளம் உண்டு. இவனை, இவ்வாராய்ச்சியில் அபிவிருத்தியடையும் பொருட்டு அமெரிக்காவுக்கு அனுப்புவதென்று இவனுடைய கலாசாலை அதிகாரிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். நிகில சந்திரன் சாந்த புருஷன்; வாய்மை, தூய்மை, பொறுமை முதலிய நற்குணங்கள் அமையப்பெற்றவன். பார்வைக்கு மிகவும் நன்ருயிருப்பான். "பாலொழுகும் முகம்" என்று பெரியோர்கள் சொல்வார்கள். அந்தச் சொற்றெடரை இவனிடத்தில் எவ்வித சந்தேகமுமின்றிப்பிரயோகிக்கலாம். இவனுடைய கண்களிலிருந்து, கருணை, பிரவாகமாகப்பொழியும். அன்புக்கு உறைவிடமாயிருந்த இவன், தன் கலாசாலை மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் பெரிதும் கௌரவிக்கப்பட்டு வந்தான். இத்தகைய ஆடவர் திலகனை, இராதாபாய் எக்காரணத்தாலோ வெறுத்து வந்தாள். இளையவள் காய்ச்சல் என்ற காரணத்தைத் தவிர இத்தற்கு வேறென்ன காரணங் கூறக்கூடும்? நிகில சந்திரனுக்கு வயது இருபத்தாருகிவிட்டது. பலர், தங்களுடைய பெண்ணை அவனுக்குக் கொடுப்பதாக இராஜநாராயணரிடத்தில்வருகின்றனர். ஆனல் இராதாபாய்க்குப் பயந்து அவர்களுக்கு எவ்வித மறுமொழியும் சொல்லாமலே இருந்துவருகிருர். இதுநிற்க.

இராதாபாய்க்கு ஒரு பெண் உண்டு என்று முன்னர்க் கூறினேம். அந்தப் பெண்ணுக்குச் சுஜாதை என்று பெயர். ஒரே பெண்; மற்றும் இராஜ நாராயணர் உயர்ந்த அந்தஸ்திலிருக்கும்போது பிறந்த பெண். ஆதலின் மிகச் செல்வமாக வளர்க்கப்பட்டாள். சுஜாதைக்கு இப்பொழுது பதினருவது நடக்கிறது. இராதாபாயின் பெண்ணுக இவள் பிறந்தபோதிலும், இவள் தன் தாயாரின் குணங்கள் சிறிதும் வாய்க்கப்பெருதிருந்தாள். இது யார் செய்த புண்ணியமோ தெரியவில்லை. சுஜாதை பெருந்தன்மை வாய்ந்த பெண்மணி; தன் குணத்திற்கேற்ற அழகுடையவள். சுஜாதை

இதுகாலை யௌவன ராஜனின் ஆட்சிக் குட்பட்டு மன்மதனின் வெற்றிக்கொடிபோல் விளங்குகிறாள். தன் மனைவியைப்போல் தன் மகள் இராமலிருப்பதைக்குறித்து இராஜ நாராயணருக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் இராதாபாய்க்கு, தனக்கென்று ஒரு புத்திரன் இல்லையென்று அதிக வருத்தம். இராஜநாராயணருக்குப் பிறகு அவருக்கிருக்கும் சொற்ப ஆஸ்தியும் நிகில சந்திரனுக்குச் சேர்ந்து விடப் போகிறதே யென்று இராதாபாய் மிக விசனித்தாள். இதற்காக சுஜாதைக்கு விவாகம் செய்து அவளுக்கு ஒரு புத்திரன் பிறந்தால், தௌஹித்திரபாத்தியங் கொண்டாடி அதற்காகப் பாதிப்பொருள் வாங்கிக்கொடுக்கலாம் என்பது இராதாபாயின் அபிப்பிராயம். எனவே, சுஜாதைக்கு முதலில் விவாகஞ்செய்து வைக்கவேண்டு மென்றும், நிகிலசந்திரனுக்கு இப்பொழுது அவசரமில்லையென்றும், உத்தியோகத்தினின்று விலகுவதற்குமுன், பெண்ணுக்கு விவாகம் செய்தால்தான் சிறிது கௌரவமாயிருக்கும் என்றும் இராதாபாய் அடிக்கடி இராஜ நாராயணரிடத்தில் கூறிக்கொண்டு வந்தாள். இராஜ நாராயணரும், இராதாபாயின் தொந்தரவைப் பொறுக்கமாட்டாமல், தன் பெண்ணுக்கு இடந்தேட ஆரம்பித்தார். திவானுடைய பெண்ணை எங்ஙனம் நாட்டுப் பெண்ணாகக் கொள்வது என்று பலர் அஞ்சினர். பலர், இராதாபாயின் குணத்தை அறிந்து, அதைப் பகிரங்கமாகக்கூறாமல் அவளுடைய பெண்ணைக்கொள்ள மறுத்தனர். கடைசியில், இராஜ நாராயணர், தன் மகளின் விவாக விஷயமாகச் சத்தியாபாயை அண்டினார். சத்தியாபாயும், தன் ஏகபுத்திரனுக்கு விவாகஞ்செய்து வைக்கவேண்டுமென்று அதிக விருப்பங்கொண்டிருந்தாள். மற்றும் இராஜ நாராயணர் மயூரபுரிக்குச் செய்துள்ள அரிய ஊழியத்தையும் அவருடைய பெருந்தன்மையான குணத்தையும் கண்டு, அவருடைய சம்பந்தம் அவர் ஜமீன் ஊழியத்தினின்று விலகியபிறகும் இருக்கவேண்டுமென்று சத்தியாபாய் விரும்பினாள். சுஜாதையையும் இவள் அடிக்கடி பார்த்திருக்கிறாள். அவள் சத்தியாபாயின் மனத்திற்குப் பிடித்தவளாகவே இருந்தாள். இராஜ நாராயணர், தன்னைவந்துவிவாக விஷயமாகக் கேட்டபோது, சசீந்திரனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டுத் தெரிவிப்பதாகச் சத்தியாபாய் கூறினாள்.

II

தாயார் தன்னிடத்தில் சுஜாதைவிஷயமாகக் கூறிய விஷயங்களைக் கேட்ட பிறகே, சசீந்திரன் நந்தவனத்தில் ஆலோசித்தவண்ணம் உலவிக்கொண்டு வந்தான். சசீந்திரனுடைய உள்ளத்தில் பலவித எண்ணங்கள் எழுந்தன. ஒரு கணத்தில் அவனுடைய மனது, இந்தப் பூலோக முழுவதையும் சுற்றித்திரிந்து வந்தது. இராதாபாயைப்பற்றிச் சசீந்திரன் பலவாறு கேள்விப்பட்டிருக்கிறான். தன்னுடைய ஜமீனிலே ஊழியஞ்செய்துவந்த ஒருவருடைய பெண்ணையா நாம் மணப்பது என்ற எண்ணம் இவனுக்கு ஒருசமயத்தில் எழும். மற்றொரு சமயத்தில் இராதாபாயின் பார்வை இவன் எதிரே தோன்றும். இவைகளைப் பார்த்தால் சுஜாதை வேண்டாமென்று தீர்மானிப்பான். ஆனால் அவளுடைய முல்லைப்பற்களும் குவளைக்கண்களும் அவனுடைய தீர்மானத்தை ஒரு வினாடியில் கலைத்துவிடும். இதற்குமுன், சுஜாதையை இவன் இரண்டொருமுறை சந்தித்திருக்கிறானாகையால் அவளைப்பற்றி இவன் அறியாதவன் என்று சொல்வதற்கில்லை. ஒருசமயம், உலகயாத்திரை செய்துவிட்டுப் பிறகு விவாகஞ்செய்துகொள்ளலாமென்று எண்ணுவான். உடனே தாயாரைத் திருப்திசெய்ய வேண்டுமேயென்று நினைப்பான். இங்ஙனம் பலவிதமாக இவனுடைய மனது ஊசலாடிக்கொண்டிருந்தது. இவைகளிடையில் இவனுடைய வாலிபப் பருவம் இவனுடைய மனதைச் சிறிது புண்படுத்தியது. என் செய்வான்? நாகசர்ப்பம்போல ஒருமுறை பெருமூச்செறிவான். ஒருமுறை மேல் நோக்கி வானத்தைப் பார்ப்பான். 'நிர்மலமான ஆகாயமே! நீயே புண்ணியபுருஷன்; உன்னிடத்தில் என்ன களங்கமிருக்கிறது' என்று வானத்தின்மீது பொறாமைகொள்வான். இங்ஙனம் இவன் நினைத்துக்கொண் டிருக்கும்பொழுதே சில மேகங்கள் ஆகாயத்தின் ஒருபாகத்தை மூடிக்கொண்டன. 'என் மனத்திற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்' என்று சிறிதுநேரம் தனக்குள் சிரித்துக்கொள்வான். மாலை நான்கு மணிக்கு வந்த சசீந்திரன் ஆறரைமணிவரை ஒன்றுந் தோன்றாமல் தியங்கிக்கொண்டிருந்தான். பிறகு அங்கிருந்த ஒரு மேடைமீது

சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

அமர்ந்து கீழ்திக்கை நோக்கினன். பூர்ணிமைச் சந்திரன் உலகத்தை எட்டிஎட்டிப்பார்க்கிறான். வெண்மை ஆடைஅணிந்து கறுப்புக் குதிரையின்மீதேறிவரும் ஒரு யுத்தவீரனைப்போல் சந்திரன் புலப்பட்டான். குளிர்ச்சியான கிரணங்களைச் சோமன் வீசுவதற்கும் தூய்மையான காற்று மெல்லென அடிப்பதற்கும் அச்சமயம் அந்த நந்தவனம் சுகஸ்தானமாகவிளங்கியது. சசிந்திரன் மேடைமீது சார்ந்தான். அச்சமயத்தில், மாலையில் போனவன் இன்னும் வரவில்லையே யென்று சசிந்திரனைத் தேடிக் கொண்டு அங்கே சத்தியாபாய் வந்தாள். சசிந்திரன், தன் பக்கத்தில் தாயாருக்கு இருக்கை அளித்து உபசாரமொழிகள் கூறினன்.

சசி:—என்னைத் தேடுவானேன்? நான் என்ன அறியாதவனா?

சத்:—உனக்கென்ன தெரியும் அந்தக்கவலை? எனக்கன்றோ தெரியும்?

சசி:—சரி. இராஜ நாராயணர் அப்புறம் வந்தாரா?

சத்:—இப்பொழுதே ஓர் ஆள் வந்துவிட்டுப் போனான். நாளை காலை அவரை வரச் சொல்லி யிருக்கிறேன்.

சசி:—இதுவிஷயமாக அவர் ஏன் நம்மிடத்தில் வரவேண்டும்? சரி; அவருக்கு நாளை என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

சத்:—உன்னுடைய எண்ணம் என்ன?

சசி:—உங்கள் அபிப்பிராயப்படி.

சத்:—எனக்கென்ன எண்ணம்? பெண்ணைப் பண்ணிக்கொள்ளலாம். இராதாபாயைப்பற்றி நாம் அதிகமாகக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் ஐயாயிரம் வராகன் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுத்தால் விவாகம் செய்து கொள்ளலாம்.

சசி:—அம்மா! இஃதென்ன ஆச்சரியம். மயூரபுரி ஜமீன்தாருடைய மனைவியாரான சத்தியாபாய் அம்மையாரா இங்ஙனம் கூறுகிறார்! எதற்காக நீங்கள் சீதனம் வேண்டுமென்கிறீர்கள்?

சத்:—நீ அறியாதவன்; தெரியாமல் பேசுகிறாய். நம்முடைய ஜமீனிலே ஊழியஞ்செய்த ஒருவருடைய புத்திரியை நாம் விவாகஞ்செய்து கொள்வதே அகௌரவம்; மற்றும் இராதாபாயின் பெண்ணை மணம்புரிந்து கொள்கிறோம். இவைகளுக்கெல்லாம் ஈடாக ஐயாயிரம் வராகன் சீதனமாகவாவது பெறாவிட்டால் நமது கௌரவத்திற்குக் குறைவு நேரிடாதா!

சசி:—கௌரவம்! குறைவு! நல்லமொழிகள் அம்மா! ஐயாயிரம் வராகன் சீதனமாகக் கொடுத்தால் நமது கௌரவம் குறையாமலிருக்குமா? இராதாபாய் நல்லவளாகி விடுவாளா? தாயே! வரதட்சணை வாங்குவது கௌரவமென்று பலர்நினைக்கின்றனர். இதைப் போன்ற மூடஎண்ணம் வேறொன்றுமில்லை. ஆடு மாடுகளுக்கு விலைகொடுத்து வாங்குவது வழக்கம். மனிதர்களுக்கும் விலைகொடுப்பதென்றால், மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் என்ன வேற்றுமை இருக்கிறது? வரதட்சணை வாங்குவதென்றால், அக்கினி சாட்சியாக விவாகஞ்செய்துகொள்வானேன்? பணம் பெற்றவர், பணம் கொடுத்தவருக்கு அடிமைப் பட்டு விடுகிறார். ஆதலின் விவாகச்சடங்குகளேன்? வீண் ஆடம்பரங்களேன்? வரதட்சணைபெற்று நான் ஒருபோதும் விவாகம் செய்துகொள்ளமாட்டேன். தேவலோகத்துக் கன்னிகைகளே இலட்சம் இலட்சமாக வராகன்களைக் கொட்டிக்கொடுத்து என்னை விவாகம் செய்துகொள்வதாகக் கூறினும் நான் அதற்கு ஒருபோதும் சம்மதியேன். மயூரபுரி ஜமீன்தார் வமிசத்திலே உதித்தநானா கேவலம் சில ஆயிரம் வராகன்களுக்கு ஆசைப்படுவேன்? அம்மா! என்னை மன்னிக்கவேண்டும். தங்களுடைய இந்த விருப்பத்திற்கு ஒருபோதும் இணங்கமாட்டேன். மன்னிக்கவும்.

சத்:—சரி. உன்னிஷ்டம். இராஜ நாராயணர் நாளைகாலை வந்தால் அவரிடத்தில் என்ன சொல்லிக் கொள்ளுவாயோ அதைச் சொல்லிக் கொள். நீ சௌக்கியமாக இருக்கவேண்டுமென்பதே என்னுடைய பிரார்த்தனை. வா; எழுந்திரு; நேரமாயிற்று.

சசி:— பெண்ணைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

சத்:—என்னைக் கேட்பானேன்? விவாகம் செய்துகொள்ளப் போகிறவன் நீ.

சசி.—அப்படியல்ல. உங்களுடைய அபிப்பிராயத்தை நான் தெரிந்துகொள்ளவேண்டாமா?

சத்:—பெண்ணைப் பொறுத்தமட்டில் தாராளமாக விவாகஞ் செய்துகொள்ளலாம். நான் தான் முன்னரே என் அபிப்பிராயத்தைக் கூறி யிருக்கிறேனே.

சசீ:—அப்படியானால் முகூர்த்தம் நிச்சயிக்கும்படி சொல்லிவிடுகிறேன்.

இருவரும் எழுந்து வீட்டுக்குச் சென்றனர். பொழுது புலர்ந்தது. இராஜ நாராயணர், உத்தியோகமுறையில் அல்லாது, தனிமனிதர் என்ற முறையில் சசீந்திரன் வீட்டுக்கு வந்தார். சசீந்திரனும் இராஜ நாராயணரும் தனி அறையில் உட்கார்ந்து நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். கடைசியில், இராஜ நாராயணர் அறைக்கு வெளியே வந்து ஜமீன்தாரிணியிடம் உத்தரவு பெற்றார். "என்ன முடிவு ஏற்பட்டது" என்றாள் சத்தியபாமா. "ஜோதிடர்கள் வீட்டுக்குச் செல்கிறேன்" என்றார் இராஜ நாராயணர்.

√கல்விச்சாலைகளும் நல்லொழுக்கஞானமும்

MORAL AND RELIGIOUS EDUCATION IN SCHOOLS

கல்வி கற்கவேண்டுமென்பது எல்லாத்தேசத்தவரும் ஒப்புக்கொண்ட விஷயம். இளம்பிராயத்தில் சிறுவர்கள் கல்வி பயின்று, தக்க வயது வந்ததும், மனிதருக்குரிய கடமைகளைச் சரிவர செய்யக்கூடிய நிலைமை பெறும்பொருட்டு எல்லா நாடுகளிலும் பலவிதக் கல்விச்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு, அவைகளில் பலருக்கு ஞானம் புகட்டப்பட்டுவருகின்றது. கல்வியின் நோக்கம் யாது என்னும் விஷயத்தில் நமது பரதநாட்டிலிருந்துள்ள பூர்வீகர்களுக்கும் மேனாட்டாருக்கும் முக்கிய பேதமொன்றுண்டு. உலகில் மனிதரிடம் காணப்பட்டுள்ள புத்திசாதுரியம், சீலம், சன்மார்க்கப் பிரவிருத்தி, தெய்வபக்தி முதலிய நற்குணங்கள் உதிப்பதற்கு வேண்டிய சக்திவிசேஷங்கள் இளமைப் பருவத்திலேயே குழந்தைகளிடம் விதைரூபங்களாக இருக்கின்றன வென்றும், நாளடைவில் இவ்வித சக்திகள், வீடுகளிலும் கல்விச்சாலைகளிலும் நல்லுபதேசம், சிக்ஷணம், ஸத் ஸஹவாஸம் முதலியவற்றால் விருத்தியடைந்து, தக்க தருணத்தில் நன்கு பயன்படுமாறு செய்வித்தலே கல்விப் பயிற்சி எனத் தகுமென்றும் சர்வ சாதாரணமாய் ஒப்புக்கொண்ட விஷயம். மேனாட்டு வித்துவான்களின் கல்வி விஷயமான அபிப்பிராயங்களையும், சிறுவர் சிறுமிகளின் வித்தியாப்பியாசத்திற்காக ஏற்படுத்தப் பட்டுள்ள கலாசாலைகளின் ஒழுங்குகளையும், பாடமுறைகளையும் உற்றுநோக்கில், மாணுக்கரின் புத்தியை விசாலப்படுத்தி, மனோ சக்தயை விருத்திசெய்வதே கல்விப்பயிற்சியின் முக்கிய நோக்கமென்பது விளங்கும். நமது நாட்டில் முற்காலங்களிலுள்ள ஏற்பாட்டைக் கவனித்தால், புத்தி கௌசலம் மாத்திரமன்றி, சீலம், உலகநீதி, தெய்வபக்தி முதலியனவும் சரிவரத் தழைத்தோங்குமாறு செய்வதே வித்தியாப்பியாஸத்தின் கருத்து என நம்பூர்வீகர்கள் அபிப்பிராயங் கொண்டிருந்தனர் என்பது ஏற்படுகிறது. முற்காலத்திய பள்ளிக்கூட முறைமைகளையும், குருகுல வாஸாதி விவரங்களையும் பட்சபாதமில்லாமல் ஆராய்ந்து பார்ப்பவருக்கு இது நன்கு விளங்கும். சுமார் நூறு வருஷகாலமாக நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரால் இங்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள வித்தியாப்பியாச ஒழுங்குகளும், கல்விச்சாலைகளில் நடைபெற்றுவரும் பாடமுறைகளும், போதன நியமங்களும், யதார்த்தமான கல்விப் பயிற்சிவிஷயத்தில் எவ்வாறு பயன்பட்டுள்ளனவென்று சற்றுக் கவனிப்போம். எல்லாச் சிறுவர்களுக்கும் ஓரேவிதமான சக்தி விசேஷங்கள் உண்டெனவென்றும், அவற்றை ஏகரீதியான பாடங்கள், கற்பிக்கும் முறைகள், பரீக்ஷைகள் முதலியவற்றால் சரிவர விருத்திசெய்து, புத்தியை விஸ்தாரப்படுத்திவிட்டால், மாணுக்கர்களுக்குத் தக்க பருவம் வந்ததும், அவர்கள் தத்தம் புத்தி சாதுர்யத்தால், தங்களது உரிமைகளையும் கடமைகளையும் நன்கறிந்து, சன்மார்க்கத்திலேயே நடந்து, நற்கதி பெறுவார்களென்பது அரசாங்கத்தாரின் கொள்கை. மத விஷயமாயோ, சாதாரணமாய் எத்தேயத்தவரும் அநுஷ்டிக்க வேண்டிய நல்லொழுக்கங்கள் விஷயமாயோ, மாணுக்கர்கள் அறியவேண்டிய உபதேசங்களும், ஒழுகவேண்டிய பழக்கங்களும் வற்புறுத்தப்படவில்லை யென்பது, வித்தியா இலாகா அதிகாரிகளும், மேனாட்டுக் கல்விப் பிரசார திட்டங்களை வெகுவாறு புகழ்ந்துபேசி வந்துள்ள நாகரிக ஹிந்துப்பிரபுக்களும், இப்

போதாவது ஒப்புக்கொண்ட விஷயம். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் ஏற்படுத்தியுள்ள கலாசாலைகளில் மதசம்பந்தமான ஞானம் புகட்டுவதற்குரிய சாதனங்க ளிருப்பினும், அவைகள் இந்தியச் சிறுவர் சிறுமிகளின் மதாசாரத்துக்கும், ஜனசாரத்துக்கும் ஒற்றுமையற்றவைகளாயும், சிலவேளைகளில் இவற்றிற்கு விரோதமானவைகளாயும் இருந்து வந்திருப்பதாய் நினைக்க இடமுண்டு. ஹிந்துப்பிரபுக்களின் ஆதீனத்துக்குட்பட்ட கல்விச்சாலைகளிலும், சர்க்கார் நேர்விசாரணைக்குட்பட்ட கலாசாலைகளிலும் சீலம், தெய்வபக்தி முதலியவற்றை வற்புறுத்தக்கூடிய ஏற்பாடுகள் கிடையாது. மேலும், புத்தியை விசாலப்படுத்துவதற்கான திட்டங்களே தக்க பயனுற்றவைகளாய்த் தெரியவில்லை. பள்ளிக்கூடங்களில் சிறுவர் கற்கும் விஷயங்கள், பெரும்பாலும் அவர்கள் மனத்துக்கு ஒரு வீண்பாரத்தை யுண்டுபண்ணக்கூடியவைகளா யிருக்கின்றனவே யொழிய, பிறகு அவர்களது உலகவாழ்க்கையில் பயன்படக்கூடியவைகளாயோ, அல்லது அவர்களது மனோசக்தியை விசாலப்படுத்தி, பகுத்தறிவைப் பெருக்கக்கூடியவைகளாயோ இல்லையென்பது மறுக்கக்கூடாத விஷயம். மேனாடுகளிலுள்ள கல்விச் சாலைகளில் நடந்தேறிவரும் திட்டங்கள் திருப்திகரமா யில்லையென்று அத்தேய வித்துவான்களே அபிப்பிராயப் பட்டிருக்கின்றனர். நமது நாட்டிலுள்ள ஆங்கிலேய கலாசாலைகளையும், பாடமுறைகளையும் பற்றிக் கேட்கவேண்டியதில்லை.

கொலம்பியா தேசத்து சர்வகலாசாலையின் பிரஸிடெண்டு **நிகோலஸ் மர்ரே பட்லர்** (Nicholas Murray Butler) என்னும் வித்துவான் ஒருசமயம் அடியில்வருமாறு சொன்னதாகத் தெரியவருகிறது. "கல்வியின் பெயரைச் சொல்லிக்கொண்டு, உலகில் ஏற்பட்டுவரும் அக்கிரமங்களையும், கேடுகளையும் பற்றி ஒருவன் தீர்க்காலோசனை செய்துபார்த்தால், கல்விப் பயிற்சி கூடாதென்றும், கல்லாமையே இருக்கவேண்டுமென்றும் நிர்ப்பந்திக்கத்தக்க ஏற்பாடு செய்தால், அது நலமாயிருக்காதோ என்று நினைப்பதுகூட ஒருவாறு நியாயமாகத் தோன்றக்கூடும்." கல்விச் சாலைகளிலுள்ள பாடமுறைகள் முதலியன மாணாக்கர்களுக்கு பெருஞ்சுமைபோன்ற சிலவிஷயங்களைத் தெரிவிக்க உதவுகின்றனவே யொழிய, அவற்றால் புத்தியின் யூகமதிகரித்து, நன்மை தீமை, தர்மாதர்மம் முதலியவற்றை நன்கு பகுத்தறியும் விவேகம் விருத்தியாக இடமில்லாமற் போவதைப்பற்றி, ஆங்கிலேய தேசத்து முக்கிய மந்திரியாயிருந்த **கிளாட்ஸ்டன்** (Gladstone) என்னும் மஹானின் அபிப்பிராயம் கவனிக்கத்தக்கது. "உலகிலுள்ள பலவிதத் தொழில்களில் மிகத்தேர்ச்சியடைந்து பிரசித்திபெற்றுள்ளோரின் சாக்ஷியத்தால், மனத்தை ஒழுங்குபடுத்தி விருத்தி செய்வதே கல்வியின் முக்கிய நோக்கென்றும், பலவிதத் தகவல்களைத்தெரிவித்து மனதில் பெரும்பாரத்தைச் சுமத்துவது அப்பிரதானமென்றும் ஏற்படுகிறது." இவ்வாறு மஹானான கிளாட்ஸ்டன் சொன்னதை அநுசரித்து மற்றும் பலர் கூறியுள்ளார். **ஜேம்ஸ் பியாட்டி** (James Beattie) என்னும் வித்துவானும், "மற்றவர் நினைத்துள்ள விஷயங்களை ஒரு பெருஞ்சுமைபோல் மாணாக்கர்களின் ஞாபகத்தில் சுமத்துவதைக் காட்டிலும், அவர்கள் தாங்களே நன்கு ஆராய்ந்து அரிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளுமாறு அவர்கள் மனோசக்தியை விருத்திசெய்வதே கல்வியின் நோக்கு. இது விஷயத்தில் பழைய கல்விமுறைகள் பயன்படா. 'மனோ சிக்ஷணம்' என்பது படிப்பின் இலக்கு என்று கொள்ளுதல் உசிதம். மனோசக்தியைச் சரிவர விசாலமாக்குவதே முக்கியம். இதற்குச் சாதகமாயுள்ள ஞானபாகங்களைச் சிறுவர்களுக்கு எடுத்துக் கூறுவது ஓர் உபகரணமாகும். இதைப் பிரதான அம்சமாகக் கொள்ளல் கூடாது. மாணாக்கர்களுக்குப் போதிக்கப்படும் கல்வியானது, அவர்களுக்குத் தக்கபருவம் வந்து அவர்களுக்கு உலகில் ஏற்படக்கூடிய அடியிற்கண்ட ஏழுவித வாழ்க்கைகளிலும் அவர்கள் சரிவர நடந்து மேன்மையடைவதற்குத் தக்க சாதனமாயிருக்கவேண்டும்:—தேகாரோக்கியம், மனோவிகாஸம், நல்லொழுக்கங்கள், நகரவாழ்க்கை, ஜனக் கூட்டுறவு, ரஸஞ்ஞானம், ஆத்மஞானம்" என்று கூறியுள்ளார்.

மேற்றேயங்களிலேயே அவரவர்கள் ஏற்படுத்தியுள்ள கலாசாசாலைகளில் நடைபெறும் வித்தியாப்பிரதானமானது நற்பயனை யளிக்கத் தக்கதாயில்லை யென்றால், நமது நாட்டில் ஆங்கிலேய பாடசாலைகளில் அநுஷ்டிக்கப்பட்டு

வந்திருக்கும் ஓதுமுறைகள் திருப்திகரமில்லையெனச் சொல்லவேண்டுமோ? உலகவாழ்க்கையைப்பற்றி நாம் கொண்டுள்ள நோக்கமும், மேனாட்டாரின் இலக்கும் பேதமுள்ளவை. அவர்களின் நோக்கத்தை நாடியும், இந்தியாவில் மத சம்பந்தமான விஷயங்களில் ராஜாங்கத்தார் பிரவேசிப்பது சரியல்ல என்கிற கருத்துடனும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கலாசாலைகளில் கற்பிக்கப்படும் பாடங்களும், முறைகளும், பரீக்ஷைகளும் இந்தியர்களுக்கு ஒவ்வாதிருத்தல் ஸஹஜமே. இவ்விதக் கல்வியினால் பெரும்பாலும் நிஜமான மனோவிசால மேற்படாததுடன், தேகாரோக்கியத்துக்கோ, நல்லொழுக்கங்கள் படிவதற்கோ சாதனமில்லாமலிருக்கிறது. நாளடைவில் இந்த ஸ்திதி கேவலமாகி வருகிறது. கல்விச்சாலைகளில் படிக்கும் சிறுவர்களின் தேகஸ்திதி, சீலமின்மை, கெட்ட பழக்கம், தெய்வபக்திக் குறைவு முதலியவற்றை நோக்குவோருக்கு இது நன்குவிளங்கும். மாணாக்கர்கள் ஏதோ சில பாடங்களைப்படித்து, பரீக்ஷைகாலம் வரையில் ஒரு பெருஞ்சுமை போல் அவற்றைத் தங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, பிறகு மறந்துவிடுவதே கல்வியின் நோக்காயிருக்கிறது. கலாசாலைகளில் பாடமுறைகள் முதலியன காலஅளவில் நடந்தேறி வருவதற்குரிய சில நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருப்பினும், மாணாக்கர்களுக்கு நற்குணங்களும், நல்லொழுக்கங்களும் உண்டாவதற்கு வேண்டிய உபதேசங்களோ, மேல்விசாரணையோ கிடையாது. பாடகாலங்கள் தவிர, இதர வேளையில் மாணாக்கர்கள் கெட்டபழக்கங்களைப் பழகிவருவதை உபாத்தியாயர்கள்நன்கறிந்தும், அவற்றைப்பற்றி அவர்கள் ஒன்றுஞ் சொல்லக்கூடாதென்றும், கண்டாலும் காணாததுபோல் பாவித்து நடக்கவேண்டுமென்றும் இப்பொழுது சம்பிரதாயமா யிருந்துவருகிறது. முற்காலங்களில் உபாத்தியாயர்கள் சிறுவர்களை அனாவசியமான நிர்ப்பந்தங்களுக் குள்ளாக்கி வந்தார்களென்றும், பையன்களுக்குரிய ஸ்வாதந்திரியம் குன்றத்தக்க காரியம் செய்வது கல்வியின் நோக்கு இல்லையென்கிற அபிப்பிராயம் வரவர மேலிட்டு, இவ்வித ஹீனஸ்திதி ஏற்பட்டிருக்கிறது. பையன் பொய் சொன்னால் அபராதம் போடப்படுகிறது. இது பையனது தந்தைக்குத் தண்டனையா, அவனுக்குச் சிட்சணமா? நவீன ஆசார்ய சிஷ்ய லக்ஷணங்கள் வெகு விநோதமானவை!! நிரீச்வரக் கல்வியெனத்தக்க (Godless Education) இவ்வித வித்தியாப்பியாஸத்திலுள்ள குறைகளை அரசாங்கத்தாரும், இங்கிலீஷ் படிப்பில் தேர்ந்துள்ள பிரபுக்களும் ஒருவாறு அறிந்து, பாடசாலைகளில், மதம் நல்லொழுக்கம் இவற்றைப் பற்றி உபதேசமும் கூறப்பட வேண்டுமென்ற கிளர்ச்சி இப்போது உண்டாயிருக்கிறது. சில விடங்களில் வாரத்திற்கு ஒருமணியோ, அரை மணியோ, மதசம்பந்தமான பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆனால் சர்க்கார் பரீக்ஷைக்கோ, மேல் வகுப்புக்கு மாற்றுவதற்கோ அவசியமாய்க் கற்கவேண்டிய பாடங்களுக்குள்ள கௌரவத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இவ்விதப் பாடத்திற்குக் கிடையாது. இவ்விதப் பாடம் ஒரு தமாஷ்போல் நடந்து வருகிறது. இதனால் யாதொரு நற்பயனும் விளைய இடமில்லை. கல்விச்சாலைகளில் இப்போது கற்பிக்கப்படும் விஷயங்களையும் பாடமுறைகளையும் மாற்றி, தக்க சீர்திருத்தம் செய்தாலொழிய, நமதுசிறுவர்சிறுமிகள்நற்போதம், சீலம்,தெய்வபக்தி, உலகசுகம் முதலியனயடைவதற்குரிய சாதனம் ஏற்படாது என்பது திண்ணம். நமது இந்திய தேசாபிமானிகள் யாவரும் இதைக் கவனித்தல் அவசியம். தற்காலம் மேனாட்டு நாகரிகம் வெகுவாகக் கொண்டாடப்பட்டுவரினும், அது நமது தேசத்துக்கு எல்லா விஷயங்களிலும் பொருந்துமென்று நினைப்பது தவறு.நாம் அதிலுள்ள சாராம்சங்களை மட்டில் கிரஹித்து, நம் நாட்டிற்குரிய நாகரிகத்தை, நமது நோக்கங்களை அநுசரித்து விருத்திசெய்வதே முதற் கடமையாகும். வெளி ஆடம்பரமுள்ள நவீன நாகரிகமாகிற கானலைப் பார்த்து, தாகவிடாயைத் தீர்க்கத்தக்க குளிர்ந்த ஜலம் என்று ஏமாறுதல் விசனிக்கத்தக்கது.

பஞ்சரத்தினம்.—மரகதவல்லி என்னும் உயர்தர நாவலின் ஆசிரியரான ப. சி. கோவிந்தசாமி ராஜா இயற்றியது. மணாளனைத்தவிர மற்றொருவரை மனத்திலும் நாடாத ருக்குமிணி, நமனிடமிருந்து நாயகன் உயிரை மீட்டுவந்த சாவித்திரி, காதகர் கையிற் சிக்கிக் கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக் காத்துவந்த சீதை, தமயந்தி, சகுந்தலை முதலிய ஐந்து ஸ்திரீ ரத்தினங்களின் சரித்திரங்கள் கொண்டது. ஐந்து அழகிய ஆப்டோன் படங்களுடன், இதன் விலை அணா **12**.

துளஸியின் மகிமை

THE VIRTUES OF TULASI PLANT

நமது வீடுகளிலும் ஆலயங்களிலும் துளஸியும் பில்வமும் பூஜைக்கு உபயோகப்பட்டு வருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் இவற்றின் குணங்களையும் மகிமையையும் அறிந்துள்ளோர் சிலரே எனச் சொல்லலாம். துளஸியின் விசேஷ குணங்களைப் பற்றி இப்போதைய வைத்திய சிரோமணிகளின் அபிப்பிராயத்தையும், பூர்வீக வைத்திய கிரந்தங்களில் கூறப்பட்டிருப்பதையும் கவனிப்போம்.

துளஸிச் செடியானது அதைச் சுற்றிலுமுள்ள காற்றைப் பரிசுத்தம் பண்ணி, **மலேரியா** ஜுரத்தைத் தடுப்பதில் மிக்க சாதகமுள்ளது. "துளஸியின் வாஸனையை எடுத்துக்கொண்டு காற்றானது எங்கெங்கு வீசுகிறதோ, ஆங்காங்குள்ள பரமாணுக்களையும், மற்றைய நான்கு பூதங்களையும் உடனே சுத்திசெய்கிறது. துளஸிச்செடி பயிர் செய்யப்பட்டுள்ள கிருஹம் மிகப் பரிசுத்தமான ஸ்தலம். யமகிங்கரர்களுக்கு (வியாதிகளுக்கு) அவ்விடத்தில் பிரவேசம் ஏற்படாது" என்று பாத்மோத்தரகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அகஸ்திய ஸம்ஹிதையிலும், "துளஸிச்செடியின் கூட்டமானது, கங்கையின் பிரவாகம்போல், இரண்டு மைலுக்குச் சுற்றிலுமுள்ள பிரதேசத்தைப் பரிசுத்தமாக்கும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

துளஸியின் ஆழ்ந்த வாசனையைத் தேனீ போன்ற ஜந்துக்கள் பொறுக்கமுடியாது. துளசியின் ரஸத்தை நமது தேகத்தில் பூசிக்கொண்டால், தேனீ முதலியன கிட்ட அணுகா. துளஸியின் ரஸம் கொசுக்களையும் உபத்திரவித்து, அவை சமீபத்தில் வராமல் தடுக்கக்கூடும். எல்லாவித கொசுக்களையும் துரத்தி யடிக்காவிடினும், மலேரியா ஜுரம்போன்ற வியாதிகளை யுண்டுபண்ணத்தக்க கொசு விசேஷங்களைப் போக்க வல்லமை அதற்குண்டென்று அனுபவ சித்தமாய்க் கண்டுபிடித்திருக்கிறார்கள். கொசுக்கடி உபத்திரவத்தை நீக்குவதில் துளஸிக்குண்டான விசேஷத்தை **சசிபூஷன் பானர்ஜி** என்னும் வைத்திய வித்துவான் தமது அனுபவ சித்தமானதை அடியில் வருமாறு வெளியிட்டிருக்கிறார். "நான் ஒரு ஹிந்துவானதால், எனது வீட்டில் பூஜைக்காகவும், துளஸியின் மருந்துகுணங்களை உத்தேசித்தும் அச்செடியைப் பயிர்செய்து அதன் குணங்களை அடிக்கடி பரீக்ஷணம் செய்வது வழக்கம். ஒரு சமயம் மஹாசிவராத்திரி தினம்வந்தது. ஆஸ்திகர்கள் விரதம் பூண்டு, அன்றிரவு முழுவதும் மஹாதேவனைக் குறித்துப் பூஜைசெய்து தியானிப்பது வழக்கம். அதுபோல் நானும் அனுஷ்டித்துவருகையில், நானிருந்த அறையில் நிறைந்திருந்த கொசுக்களின் உபத்திரவத்தால், நான் என் மனதைச் சரிவர பூஜையில் செலுத்த முடியாமற் போயிற்று. இவ்வாறிருக்கையில் எனக்கோர் எண்ணம் உதித்தது. என் முன்னிருந்த துளஸிச்செடியிலுள்ள இலைகளைப் பறித்துக் கசக்கி அந்த ரஸத்தை என் அவயவங்களில் பூசிக்கொண்டேன். அதன் பிறகு அங்குள்ள கொசுக்கள் என்மீதுபட்டும், அவை என்னைக் கடித்ததாக உணர்ச்சி எனக்குண்டாகவேயில்லை."

துளஸிக்கு அதைச் சுற்றிலுமுள்ள ஆகாயத்தைச் சுத்திசெய்து, மலேரியா ஜுரத்தைத் தடுக்கக்கூடிய சக்தியிருப்பதுடன், மற்றைய வியாதிகளை நிவர்த்திக்கக்கூடிய மருந்துகுணங்களுமுண்டென வைத்தியசாஸ்திரங்கள்முறையிடுகின்றன. சாதாரண ஜுரம், **இன்ப்ளுவேன்ஸா** என்னும் விஷஜ்வரம், காசம், க்ஷயம், இருமல், ஜலதோஷம், பீநஸம் முதலிய ரோகங்களை நிவர்த்திக்கக் கூடிய மருந்துகளில் துளஸி ஒரு முக்கியாம்சமாகக் கூறப்பட்டிருக்கிறது. சாரங்கதர ஸம்ஹிதையில் 'துளஸிஇலைச் சாற்றிலாவது, பெருவாகையின் ஸ்வரஸத்திலாவது மிளகுப்பொடியைக்கலந்து உபயோகித்தால்முறைக் காய்ச்சல் முதலிய விஷஜ்வரங்கள் தீரும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. துளஸியும் இன்னும் சில சரக்குகளும் சேர்ந்துண்டான ஸ்வரஸம், பீநஸம் என்னும் வியாதியைப் போக்கத்தக்க ஒளஷதமென்று சக்கரபாணி தத்தா என்னும் பிராசீன வைத்தியசிரோமணி கூறியுள்ளார். குஷ்டம், மேகவட்டை, ஜலதோஷம் முதலியரோகங்களும் துளஸியால்நிவர்த்திக்கத் தக்கவை. துளஸிச்செடியில் பூத்துள்ள மேற்பாகங்களோ, இருமல், க்ஷயம், இன்ப்ளுவென்ஸா முதலிய வியாதிகளைப் போக்குவதில் மிக்க உபயோகமுள்ளவை. உலர்ந்த இலைகளைச் சன்

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார் பெருமை பிறங்கிற் றுலகு.

னமாய்ப் பொடிசெய்து, நஸ்யமாக உபயோகப்படுத்தினால் பீநஸம் நீங்கும். தேயிலைக் கஷாயம் காப்பிக் கஷாயம் போல் துளஸி இலைகளையும் கஷாயமாக்கிப் பானம் செய்துவந்தால், அது சளிக்கட்டுகளை நீக்குவதுடன், தேகாரோக்கியத்தையும் விருத்திசெய்யும்.

மேற்கூறிய குணங்களைத் தவிர்த்து, துளசிக்கு மற்றொரு விசேஷ குணமிருப்பதாகத் தெரியவருகிறது. பாம்பின் விஷவேகத்தைக் குறைத்து, பாம்புகடி உபத்திரவத்தைப் போக்குவதற்குரிய வல்லமை துளஸிக்கு உண்டு. துளஸிச் செடியினருகில் ஸர்ப்பங்கள் அணுகாவாம். சாதாரணப் பாம்போ நாகமோ ஒருவனைக் கடித்துவிட்டால், அவனை ஒரு முஷ்டி துளஸி இலைகளைக் கடித்து விழுங்கச்செய்வதுடன், அதன் வேரை வெண்ணெய்போல் அரைத்து, கடிபட்ட இடத்தில் தடவினால், தடவும்போது வெள்ளையாயிருந்த துளஸியின் கூழானது, பாம்பின் விஷத்தை உருஞ்சிக் கீல்போலக் கருநிறமாகுமெனச் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வித சிறந்த குணங்கள் பொருந்திய துளஸியைத் திவ்விய மூலிகையென்றும், தேவதா பூஜைகளுக்குத் தக்க வஸ்துவென்றும் ஹிந்துக்கள் கொண்டாடிவருவது பொருந்தும். நவீன நாகரிகச் சுழலில் அகப்பட்டு, நம்முள் பெரும்பான்மையோர் நமது தேசத்துக்கு இன்றியமையாத ஒழுக்கங்களையும், தேகாரோக்கியத்திற்கேற்ற ஆசாரங்களையும் ஔஷதாதிகளையும் கைவிட்டு, வீணான பெருஞ்செலவு உண்டுபண்ணக்கூடிய அப்பியாசங்களை அனுஷ்டித்து வருவதுபோல், துளஸி விஷயத்திலும் உதாஸீனமாய் இருந்து வருகிறார்கள். நமது பிரபுக்கள் வீடுகளில், வெகு திரவியம் செலவு செய்து, தக்க எருப்போட்டு, மிக்க ஜாக்கிரதையாய் வளர்க்கவேண்டிய மேனாட்டுச் செடிகள் சட்டிகளில் வைக்கப்பட்டு மிக ஊக்கத்துடன் போஷிக்கப்பட்டு வருகின்றன. இதனால் கோடிக்கணக்கான கொசுக்கள் வந்துசேர்ந்து, வீடுகளில் பரவி, கொசுவலைகள் நூற்றுக்கணக்காய் விலையாவதற்கு வேண்டிய ஸ்திதி ஏற்படுகிறது. இவற்றில் வைக்கப்பட்டுள்ள சிரத்தையில் பத்திலொரு பங்காவது வைத்து, நாம் நமது வீடுகளிலும் பங்களாக்களிலும் துளஸிச் செடிகளை ஏராளமாய் விருத்திசெய்துவந்தால், சுற்றிலுமுள்ள காற்று பரிசுத்தமாவதுடன், மலேரியா ஜ்வரம் முதலிய வியாதிகளையுண்டாக்கக்கூடிய கொசுக்களின் உபத்திரவம் நீங்கத்தக்க சாதனம் ஏற்படும். எளியவர்களும் இதைச்சுலபமாய்ச் செய்துவந்து, தங்கள்தேகாரோக்கியத்தைக் கூடியவரையில் வைத்தியர் உதவியன்னியில் தேடிக்கொள்ளலாம். நமது வீடுமத்தியில் துளஸிமடம் ஏற்படுத்தி, துளசியை வெகு பக்தி சிரத்தையுடன் ஹிந்துஸ்திரீகள் வளர்த்துவருவது வெகு நாளைய வழக்கம். தற்கால நாகரிக பலத்தால், இவ்வித ஆசாரமும் குன்றிவருகிறது என்பது துக்கிக்கத்தக்க விஷயம். தேகாரோக்கியத்தில் கருத்துள்ளவர்கள் இவ்வித உத்தமவஸ்துவைத் தங்கள் தங்கள்கிருகங்களில் இனியாகிலும் பயிர்செய்துவருவார்களென்று நம்புகிறோம்.

லோகநாதன்

துப்பறியும் ஓர் இனிய நாவல்

AN INTERESTING DETECTIVE NOVEL

முதல் அத்தியாயம்

காணமற்போன புஷ்பவல்லி

இருள் நீங்கி வெளிச்சமுறுகிறது. எல்லார்க்கும் பொதுவினில் நடனமிடும் ஆண்டவனின் வெளித்தோற்றமாம் ஆதவன் அகண்டாகாரமான இருளைப் பிளந்துகொண்டு தன் ஸ்வர்ணமயமான கிரணங்களை எங்கும் வீசுகிறான். பராபக்தியின் பயனாகிய களிப்பால் பக்தர்கள் மயிர்க்கூச்சடைகிறார்கள். புஷ்பங்களெல்லாம் முகமலர்ந்து தங்கள் காதலரான வண்டுகளை வரவேற்கின்றன. பக்ஷிகளெல்லாம் தம் இனிய கானங்களைப் பாட வாரம்பிக்கின்றன. அன்புமேலிட்டு களிப்புற்று சாந்தியுடன் உணர்ச்சிபெற்று ஜீவராசிகளெல்லாம்

உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

தத்தம் கடமைகளைச் செய்ய வாரம்பிக்கின்றன.

அந்தோ! ஈசனின் மாயை என்னவென்றுரைப்பது! இராக்காலத்தையே வரவேற்கும் இராக்கதக் கணங்களெல்லாம் துன்புறுகின்றன. இராமுழுவதும் கொள்ளையடிக்க வெண்ணி ஊரூராய்ச் சுற்றித்திரிந்த திருடரெல்லாம் தங்கள் மறைவிடங்களிற் சென்று ஒளிகிருர்கள். பிறமாதரைக் கவர்ந்துசென்ற விடர்கள் வெகு வேகமாய்த் தங்கள் வீட்டுக்குச் சென்று இராமுழுதும் கண்விழித்த களைப்பால் துப்பட்டியை இழுத்துப் போத்திக்கொண்டு தூங்குகிருர்கள். கோட்டான், ஆந்தை முதலிய இராக்கதப் பிராணிகளுக்கு இரவிலே உலாவாகையால் சூரியனைக்கண்டதும் பதுங்குகின்றன. மாயையில் இது ஒரு சத்தியம் போலும்! மனோநிம்மதியையும் உயர்தரமான உற்சாகத்தையு| மளிக்கத்தக்க சூரியனின் உதயத்தைக்கண்டு களிக்க இயலாதவர் இராக்கத கணத்தைச் சார்ந்தவரே போலும்!

சென்னையைச் சார்ந்த நுங்கம்பாக்கத்தில் பெரும் பணக்காரர்கள்தான் வசிக்கமுடியும். ஏழைகள் வசிப்பதென்ருல் வெகுவாகத் துன்பத்துக்குள்ளாகவேண்டும். அந்த ஊரில் கடை யாவது கண்ணியாவது கிடையாது. சுமார் இரண்டு மைலுக்கப்பாலிருந்து ஒவ்வொரு பதார்த்தமும் வரவேண்டும். பெரிய பணக்காரரிடம் வேலைசெய்துகொண்டிருக்கும் ஏழைகளைத் தவிர வேறு ஏழைகளே கிடையா. வெகு விசாலமான தெருக்கள். கப்பிக்கல் போட்டு கீல் எண்ணெய் தேய்த்த வெகு வழவழப்பான சாலைகள். ஆனல் ஒரு அசௌகரியம். நல்ல வெயில் வேளையில் உயர்தர ரப்பர் ஜோடுகளைப் போட்டுக்கொண்டு அந்தச் சாலைகளில் நடந்தால் ரப்பர் உருகி, ஜோடுகளைக் கைவிடவேண்டி வரும். ஆனல் நுங்கம்பாக்கம் வாஸிகளுக்கு இம்மாதிரி விபத்து நேருவதில்லை. ஏனென்ருல் ஒரு குதிரைவண்டியோ, மோடார் வண்டியோ, வைத்துக்கொள்ளப் போதுமான செல்வம் இல்லாதவர் நுங்கம்பாக்கத்திற்றங்க முடியாது. முக்கியமான சாலைகளிலுள்ள அழகிய பங்களாக்களிலெல்லாம் உயர்தர உத்தியோகம் வகித்த ஐரோப்பியரே வசித்துவந்தனர். ஆனல் ஹைரோட்டில் இரண்டு மூன்று வீடுகளில் வெகு பணக்கார இந்தியர்கள் வசித்தனர். இரண்டு வீடுகளில் ஜமீன்தார்களிருந்தனர். 'சுந்தரிவிலாஸம்' என்ற மற்ருெரு வீட்டில் வக்கீல் மாசிலாமணி பிள்ளை இருந்தார். இவர் பூர்வீகமாயே மிக்கப் பணக்காரர். அதிக சம்பாத்தியமுங்கூட வாதலால், நிரம்பப் பணம் சேர்ந்துவிட்டது. இருந்தாலும் தொழிலை விடவில்லை. இப்பொழுது அவருக்கு வயது ஐம்பத்தைந்தாகிறது. தன் ஒரே பையன், லோகநாதன், அப்போதுதான் பீ. ஏ., பாஸ் செய்திருக்கிருன். மில்லர் காலேஜில் வாசித்துக்கொண் டிருந்தான். இப்பொழுது சட்ட காலேஜுக்கு அனுப்பவேண்டும். இரண்டு வருஷத்துக்கெல்லாம் முதிர்ந்த வக்கீலாய் விடுவான். பின்னர் ஹைகோர்ட்டுக்கு எதிரில் தனக்கிருந்த ஆபீஸில் மகனை வைத்துவிட்டு, தான் அதிகத் தொந்திரவில்லாமல் நுங்கம்பாக்கத்திலேயே வாழ்நாட்களைச் செலவிடலாமென உத்தேசித்திருந்தார். ஆனல் ஒரே ஒரு பொறுப்புள்ள காரியம் மட்டும் பாக்கியிருந்தது. இரண்டு வருஷங்களுக்குமுன் அவர் நண்பர் சரவணமுத்து, தன் பெண் புஷ்பவல்லியையும், அவளுடைய சொத்தென்று தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் போஸ்டு, மாங்குடி என்ற கிராமத்திலுள்ள ஐந்துவேலி நஞ்சை புஞ்சை நிலங்களையும், மாசிலாமணிப் பிள்ளையிடம் ஒப்புவித்து அவரைக் கார்டியனுக நியமித்துவிட்டு, இறந்து போய்விட்டார். அந்தப் பெண்ணின் நன்மையைக் கோரியே பிள்ளையவர்கள், முதல் நாள் மாங்குடி சொத்தெல்லாவற்றையும் தேனும்பேட்டையில் தங்கியிருந்த நங்கபுரம் பாலய்யாவுக்கு சாஸனஞ் செய்துகொடுத்தார். பாலய்யாவிடம் தற்போது பணமில்லையாகையால் தன் தாயார் நகைகளைப் பெட்டியுடன் கொடுத்தார். பதினெட்டாயிரம் ரூபாய் நகைகளின் மதிப்பு. மூவாயிரம் ரூபாய் பணமாய்க் கொடுத்தார். (100-பத்து ரூபாய் நோட்டுகள், நான்கு ஐந்நூறு ரூபாய் நோட்டுகள்.) பணமும் நகைப்பெட்டியும் திறவுகோலும், சப்ரிஜிஸ்திரார் முன்னிலையில் பெற்றுக்கொள்ளப்பட்டன. உடனே அவைகளைப் பாங்கியிற்கொண்டுபோய் வைத்திருப்பார். ஆனல் பாலய்யாவை விருந்துக் கழைத்திருந்த படியால் மறுநாள் கட்டிவிடலாமென இரும்புப்பெட்டியில் நகைப்பெட்டியை வைத்து விட்டு, பணத்தை ஒரு காகிதத்தில் மடித்து, அதையும் பக்கத்திலேயே வைத்து

இரும்புப்பெட்டியைப் பூட்டி அதன் சாவியைத் தன் மேஜையறையில் வைத்துப் பூட்டிவிட்டார். நகைப்பெட்டிச் சாவியைத் தன் சாவிக் கொத்திற்சேர்த்துக்கொண்டார். மேஜையறைச் சாவியும் சாவிக் கொத்திலேயே இருந்தது. சாவிக் கொத்தை இடுப்பிற் சொருகிக்கொண்டார். பாலய்யாவுடன் வெளியே புறப்படும் பொழுது கதவைப் பூட்டித் திறவுகோலைத் தன் கையிலேயே வைத்துக்கொண்டிருந்தார். திரும்பிவரும் வரை, மூன்று காவலரை அறையின் வாசலிலேயே இருக்கும்படி ஆக்ஞாபித்திருந்தார். திரும்பிவந்தது முதல், விடியும் வரை பெட்டியண்டையிலேயே கட்டிலைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார். நடுவில் பாலய்யாவுடன் கிலாச்சாப்பாடு சாப்பிட அரை மணி நேரம் போயிருப்பார். அப்பொழுது அறையில் காவலர், லோகநாதன் யாவருமிருந்தனர். திரும்பிவந்ததும் பாலய்யாவை அனுப்பி விட்டுக் காவலரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார். மூன்று மணிக்கப்பால் கொஞ்சம் பேசாமல் சும்மாவிருந்தார். கட்டாயம் தூங்கவேயில்லை. விடிந்ததும் தந்தசுத்தி செய்துகொண்டு, காப்பி சாப்பிட்டுவிட்டு, "யாரடா லோகுவை எழுப்பு; பாங்கிக்குப் போகவேண்டும். அவனை என்னை எழுப்பென்று சொல்லியிருந்தேன். கொஞ்சமேனும் தேகத்தில் அச்சமில்லாமல் தூங்குகிறான்" என்று ஒரு காவற்காரனைக் கீழே அனுப்பிவிட்டு, தன் சாவியால் மேஜையறையைத் திறந்து இரும்புப்பெட்டிச் சாவியை எடுத்து இரும்புப்பெட்டியைத் திறந்தார்.

"இதென்னடா இது?" என்று பெட்டி முழுதுந் தேடினர். லோகநாதன் அதற்குள், "என்ன அது?" என்று ஓடிவந்தான். பெட்டியையுங் காணோமடா! பணத்தையுங் காணோமடா!" வென்றலறினர். "அந்தக் குட்டியை எப்படியடா பார்ப்பேன்?" என்றார். உடனே காவற்காரர்கள் கீழே போய் லோகநாதனின் தாயையும் புஷ்பவல்லியையும் கூப்பிட்டார்கள். தாய் வந்தாள். புஷ்பவல்லி வரவில்லை. அறைக்குள் போவது என்று எல்லோரும் கிளம்புமுன்னர், மாசிலாமணிப் பிள்ளை, "டெலிபோனில் போலீஸாரைக் கூப்பிட்டுவிடு" என்றார். லோகநாதன்டெலிபோனில் போலீஸாரைக்கூப்பிட்டு விட்டு, புஷ்பவல்லியின் அறைக்குச்சென்றான். பக்கத்தறைக் கதவு திறந்திருந்தது. அங்கிருந்து தோட்டத்துக்குத் திறக்குங் கதவும் திறந்திருந்தது. திடுக்கிட்டான் லோகநாதன். புஷ்பவல்லியின் அறைக்கதவுமட்டில் உள்ளே தாளிடப்பட்டிருந்தது. எல்லோரும் 'புஷ்பவல்லி' 'புஷ்பவல்லி' என்று கத்திக்கொண்டிருந்தனர். அச்சமயம் போலீஸ்இன்ஸ்பெக்டர் சுப்பண்ணவும் எட்டு கான்ஸ்டேபில்களும் உள்ளே வந்தனர். குதிரைமீது வந்த ஸார்ஜண்டொருவன் வாசலிலேயே குதிரைமீது தங்கிவிட்டான். பெரிய தோட்டமும் சுற்றுச் சுவருங்கொண்ட பங்களா அந்தச் சுந்தரிவிலாஸம். மாசிலாமணிப் பிள்ளையுங் கீழேவந்தார். இன்ஸ்பெக்டர், "என்னவிசேஷம்" என்று கேட்டார். மாசிலாமணிப் பிள்ளை நடந்தவற்றை யெல்லாம் சொன்னர். இன்ஸ்பெக்டர் உடனே, 'புஷ்பவல்லி எங்கே?' என்றார். அமிருதமென்னும் வேலைக்காரி, "இந்த அறையிலே, இராத்திரி படுத்துக்கொண்டாள். நான் எட்டரை மணிக்கு விட்டுவிட்டு ஆச்சி அறைக்குப் போய்விட்டேன். கதவைத் தாப்பாள் போட்டுக்கொண்டாள்" என்றாள். இன்ஸ்பெக்டர் உடனே வெளியறைக்கதவு திறந்திருப்பதையும், தோட்டத்துக்கதவு திறந்திருப்பதையும் கண்டுகொண்டார். புஷ்பவல்லியின் அறைக்கதவண்டையில்வந்து கூப்பிட்டார். பதிலில்லை. கான்ஸ்டேபில்களைக் கூப்பிட்டுத் தள்ளச்சொன்னர். கதவு 'படீ' ரென்று திறந்தது. உள்ளே சென்றதும் புஷ்பவல்லியைக் காணவில்லை. உடனே இன்ஸ்பெக்டர் சுப்பண்ண, "புஷ்பவல்லி பணத்தை எடுத்துப்போயிருக்கலாம். படுக்கை விரித்தமாதிரி இருப்பதால் அப்படித்தான் தோன்றுகிறது" என்றார். மாசிலாமணிப்பிள்ளை உடனே, "அதுமுடியாத காரியம். அவள் பச்சைக்குழந்தை. இன்னும் பன்னிரண்டு வயதாகவில்லை. குணம் பத்தரை மாத்துத் தங்கமய்யா. நீரென்னமோ விளையாட்டாய்ச் சொல்லுகிறீர்கள்! நான் பழியாய்க் காத்துக்கொண்டிருந்தேன். எல்லாம் இருந்தது இருந்தபடி இருக்கிறது. நகையும்பணத்தையுங் காணவில்லை. நீங்கள் என்னெல்லாமோ சொல்கிறீர்கள்" என்று மறுத்துச் சொன்னர்.

"நீர் வீட்டிற்பணம் கொண்டுவைத்திருப்பது யாருக்குத்தெரியும்? நீர் யாருக்குச்சொன்னீர்?"

"நேற்று, பாலய்யா நான் லோகு எல்லோரும் உலாவப்போகும்பொழுது என் மகனிடம்

பாங்கிக்குப் போகவேண்டும்; என்னைக் காலையில் எழுப்பு" என்று சொன்னேன்.

"ஆ! எனக்குத் தெரியுமே. அவள் பணந் தானது. அவள் ஒருத்திதான் இந்த வீட்டிற் சிறியபெண். லோகநாதன் ஒருவன்தான் வாலிபன். இரண்டுபேரும் இரண்டு வருஷமாகக் கூடவேஇருக்கிறார்கள். நீங்க பெரியமானஸ்தர். ஒருவர் நம்பிக்கொடுத்த பணத்தை நீங்களே வைத்துக்கொண்டு விடுவதாவென வெகுதூரம் மீனம் மேஷம் பார்ப்பீர்கள். அப்பொழுது என்ன நடக்குமென்று சொல்ல, இக்ஷணி வரவேண்டுமோ? லோகநாதா! உன்னுடைய முகத்தில் திம்மாச்சு பண்டிதரென் றெழுதியிருக்கிறது. உள்ளத்தைச் சொல்லிவிடு. கேஸ் வெளியிலேயே போகாது. இல்லாவிட்டால் போலீஸ் மரியாதைகளெல்லாம் பெற்று உண்மை சொல்லவேண்டிவரும்" என்றார் இன்ஸ்பெக்டர் சுப்பண்ணு.

லோகநாதன் முதலில் விழித்தான். இம்மாதிரி விஷயமே அவனுக்குப் புதிதாயிருந்தது. என்ன செய்வான் பாபம்? "எனக்கொன்றுந் தெரியாது. நான் தூங்கிவிட்டேன். காலையில் வந்து எழுப்பினார்கள்" என்றான். இன்ஸ்பெக்டர் சுபபண்ணு உடனே, "உன்மேலதான் நான் சந்தேகப்படுகிறேன். இன்னும் கொஞ்ச காலங்கொடுக்கிறேன். நீ செயயக்கூடியதைச் செய்" என்றார்.

"இதுவென்ன அநியாயம்' என்று கத்தினார் மாசிலாமணிப் பிள்ளை. "பணத்தைக் காகக என்னால கூடியவரை சிரமப்பட்டேன். பணம் போயவிட்டது. புஷ்பவல்லியைத் தந்தையைப் போல் காப்பாற்றிவந்தேன். அவளெங்கேயோ காணமற் போய்விட்டாள். ஒரே பிள்ளைமீது சந்தேகமெல்லாம் சூழ்ந்துகொண்டிருக்கிறது. நானென்ன செய்வேன்!" என்றலறினார்.

லோகநாதனே, கொஞ்சம கலக்கததலிருந்து தெளிந்து ஒரு கடிதத்தல தன் வலாசத்தை யெழுதி, தனனைக் காபபாறற உடனே வரவேண்டுமென்ற வேண்டுகோளுடன் மோட்டார் ஓட்டுபவனிடம் கொடுத்து மயிலாப்பூரில லஸ்ஸில் வசிக்கும் துப்பறியும் மயிலை மகாலிங்கத்தனிடம் கொடுத்து, உடனே மோட்டாரில் அவரை அழைத்துவரும்படி அனுப்பினான். இன்ஸபெக்டா சுபபண்ணு கான்ஸ்டபிள்கள் எல்லாரும் அங்கேயே நின்றனர்.

இரண்டாம் அத்தியாயம்

துப்பன்—மயிலை மகாலிங்கம்

மயிலாப்பூர் லஸ்ஸில் அழகான பங்களாவொன்றில் ஒரு வாலிபர் காலையிலெழுந்து ஸ்னானஞ்செய்து தனது அழகிய சுருட்டை மயிரை வகிடெடுத்து வாரிக்கொண்டு நெற்றிக்குப் பொட்டிட்டு, வெள்ளையுடை யுடுத்துக் கொண்டு தன் தோட்டத்தின் வனப்பை நோக்கினவராய் அரைமணிநேரம் உட்கார்ந்திருந்துவிட்டுக் காலையுண்டி சாப்பிட்டார். இந்நாட்களில் சாப்பிடுங் காப்பியில் பாலிலுள்ள உணவைக் கெடுக்கும் சக்தியிருப்பதால் இவர் காப்பி கலந்து சாப்பிடுவதில்லை. மூன்று ரொட்டிகளை நன்றாய் நெய்யிற் கலந்து, நெருப்பில் வாட்டி அவைகளை யெல்லாம் சாப்பிட்ட பின்னர், இரண்டாழாக்குப் பாலை நன்றாய்க் காயவைத்து சாப்பிட்டுவிடுவார். புறச்சுத்தமும் அகச்சுத்தமும் நிறைந்திருத்தல் வேண்டுமென்பதே அவர் கொள்கை. தான் பீ. ஏ., பரிக்ஷையில் தேறியதும் தனக்கென்ன தொழில், சரிவர திருப்திகரமாயிருக்குமென்று வெகுநாள் யோசித்தார். சில வாலிபருக்குக் கிடைப்பதுபோல்அவருக்கு அவர்தொழிலைத்தெரிந்துகொடுத்து உதவபுரிய பணக்கார உறவினா ஒருவருங்கிடைக்கவில்லை. ஔவை சொன்னபடி, "சீரைத் தேடுங்கால் ஏரைத்தேடு" வதென முதலில் தீர்மானித்தார். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார். மற்றெல்லாரும் தொழுதுண்டு வாழ்பவர். ஆனால் இதுவரையில் தான் கற்ற நூல்களுக்கும், தான் கொண்ட பயிற்சிக்கும் தன் நுண்ணறிவிற்கும் போதுமான இடம்ராதென்று அநதத் தொழிலைச் செய்வதல்லையெனத் தீர்மானித்துக் கொண்டார். 'சட்டம் தெரியாத மாந்தா இருத்தலுமொன்று, இறத்தலுமொன்று' என்று ஒருமே ஞட்டுக்கவி எழுதியதைப் படித்திருக்கிறார். ஆனால் சட்டத்தின பெயரை வைததுக் கொணடு எவவளவு அநியாயங்கள் நடக்கின்றனவென்றறிந்ததும், அதைக் கைக்கொள்ளலாகாதென விட்டுவிட்டார். டாக்டர் பரிக்ஷைக்கு வாசிப்பது வெகு அழகாயிருந்தது. ஆனால், மருந்துகொடுத்து பிறர் துன்பத்தைத் தாக்கும் சகதி வெகு எளிதற கற்றுக்கொண்டுவிடலாம். அதறகு டாக்டா பரீட்சையில தேறவேண்டுவதில்லை. உபாத்தியாயர் தொழில தூரப் பார்

வைக்கு வெகு வனப்போடு கூடியதாயிருந்தாலும் அதுவுமோர் தொழுதுண்டுவாழும் தொழிலாகும். ஆகையால் தன் நுண்ணறிவிற்குத் தக்க அவகாசங் கொடுக்கத்தக்கது துப்பறியுந் தொழிலே யெனத்தேர்ந்து அதைக் கைக்கொண்டார். சத்தியத்தை அறியும்வரை உழைப்பதென்பதே அதன் கொள்கை. ஆனால் நிரம்ப அபாயமுண்டு. தன் சக்திக்குத் தகுந்தபடிக்கு அபாயத்தை யணுகினால் ஒருகேடும் வராதென்று துப்பறியும் தொழிலையே கைக்கொண்டார். உடனே நான்கு வருஷங்கள் அதற்கென்று உழைக்கத் தலைப்பட்டார். கியாதுக்கு வந்து இப்போதுதான் மூன்று வருஷங்களாகின்றன. இப்பொழுது மயிலை மகாலிங்கமென்றால் குற்றவாளிகளுக்கெல்லாம் சற்று அச்சந்தான்.

திருட்டுப்போனதினம் காலையில், வழக்கம்போல ஸ்னானஞ்செய்துவிட்டு சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு மேஜைமீது வைத்திருந்த ஒரு புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதுவோர் மலையாளி ஆடவரின் முகம். அதை வைத்துக்கொண்டு கொஞ்ச நாழிகை உட்கார்ந்திருந்துவிட்டு மேஜைமீது வைத்திருந்த ஓர் புல்லாங்குழலை எடுத்துக்கொண்டு வெகு இனிமையாய் தேவகாந்தாரி வாசித்தார். மேஜை மட்டில் வெகு சுத்தமாய் இருந்தாலும், அறைமுழுதும் அதிகக் குழப்பமா யிருந்தது. அங்கே கண்ணாடிப் பாத்திரங்கள், அங்கும் கண்ணாடிகள், அங்கும் ஒடிந்த துப்பாக்கிகள் இரண்டு மூன்று விளக்குகள் ஒருதுருத்தி இவை இருந்தன. இரண்டு அழகான துப்பாக்கிகளும் இருந்தன. அங்கே குற்றவாளிகளின் கையெழுத்துக்கள்; அங்கே புகைப்படங்கள்; கைரேகை அடையாளங்கள்; அங்கே புத்தகங்கள்; எல்லாம் அடுக்காமல் எங்கும் பரவிக் கிடந்தன. இவையெல்லாம் அடிக்கடி உபயோகப்படும் போலத் தோன்றுகிறது. ஆனால் இவ்வளவு வேலை செய்பவர் எப்பொழுதும் ஓய்வு கொண்டவரே போல பாடிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. ஓட்டுபவன் கீழ்வந்து கடிதமொன்றைக் கொடுத்ததும், ஒரு சட்டையை மாட்டிக்கொண்டு மோட்டார் வண்டியில் வந்தேறிக் கொண்டார். ஒரு பையன் வீட்டினுட்சென்று கதவைத் தாப்பாள் போட்டுக் கொண்டான்.

பத்து நிமிஷங்களுக்குள் 'ஸுந்தரி விலாஸம்' வந்து சேர்ந்தார். எல்லோரும் நின்ற விடத்திற்கு வந்து, லோகநாதன் அருகிற் போய், 'தைரியமா யிரு. உன் முகத்தில் குற்றவாளியின் அடையாளமே யில்லை. அனுபவமே இல்லாததால் பயப்படுகிறாய். தைரியமல்லவோ வேண்டும்.' "ஐயா இன்ஸ்பெக்டர் சுப்பண்ணா! என்ன விசேஷம்?" என்றார். இன்ஸ்பெக்டர் உடனே ஆதியோடந்தமாய் நடந்ததை யெல்லாஞ் சொன்னார். உடனே மகாலிங்கம் அந்த அறைக்குள் நுழைந்து, "திருட்டைவிட முக்கியமானது காணாமற்போன கண்மணியைக் கண்டுபிடிப்பதுதான்" என்று சொல்லிக்கொண்டே தாப்பாள் போடாமல் சாத்தப்பட்டிருந்த ஜன்னலைத் திறந்து கீழ் நோக்கினார். பக்கத்தறையின் தளவரிசை ஆறரை அடிக்குக் கீழ் இருந்தது. அந்த அறைக்கதவு திறந்திருந்தது. அங்கிருந்து தோட்டத்துக்குப் போகும் கதவும் திறந்திருந்தது. உடனே அவர் தோட்டத்திலிறங்கி அடிச்சுவடுகளையெல்லாம் சோதனை செய்தார். கொஞ்சதூரத்திற் கப்பால் இரண்டு அடிச்சுவடுகள்தான் தெரிந்தன. இரண்டும் ஒருவரின் அடிச்சுவடே. ஒன்று வலதுகாற் சுவடு. மற்றொன்று இடதுகாற் சுவடு. அதன் அளவுகளைக் குறித்துக்கொண்டார். அப்படியே தோட்ட முழுதுஞ் சுற்றிக்கொண்டு பங்களாவிற்குள் வரும் வழியில், காவற்காரன் தங்குவதற்கென்று போட்டிருந்த குடிசையொன்றில் மகாலிங்கம் சென்றார். ஒரு மூலையில் தயிர்க்கூடை யொன்றிருந்தது. பானையில் முக்கால் நிறைய தயிர் இருந்தது. காவற்காரனைக் கூப்பிட்டு, தாகசாந்திக்கென்று ஒரு பானை தயிர், கூடையோடு வாங்கி வைத்திருக்கிறாயா வெனப் பரிகசித்தார். காவற்காரன் சற்றுக்கோபத்துடன் பதிற்சொன்னான். "நான் அவ்வளவு முட்டாளில்லை. பானை தயிரைக் குடிச்சா, வயிறு வெடிச்சு செத்துல்ல போகவேணும். நேத்தைக்கு எசமானோட பத்துமணிக்கு விருந்தாடி வந்தாருங்கோ. வீட்டுலே தயிர் பத்தலே. கொஞ்சம் தயிர்வேணுங் நாங்க. நான் வாசலலே வந்து தயிருக் கெங்கடா போரதுன்னு தவசுபண்ணினேன். அப்போ ஒரு கன்னிடையன் இந்த நுங்கம்பாக்கத்துக்கு தயிர்க்கூடையைத் தூக்கிக்கிட்டு வந்தானே. அப்படியே கம்முக்குட்டேன். தயிர

மொத்தமாத்தான் குடிப்பேன். சைதாப்பேட்டையிலே ஒரு கண்ணாள வூட்டுக்கு எழும்பூருலேருந்துல்லே தூக்கிட்டுப் போனானாம். நல்ல வார்த்தை சொன்னேன். தாவாக் கட்டையைப் பிடிச்சுக் கிட்டேன். அவன் ரொம்ப தள்ளாடிக்கிட்டு வந்தான். ஒருபடி தயிர் வாங்கிக்கிட்டேன். தயிர்க் கூடையை இங்கேவைச்சுப்புட்டு படுத்துக்கிறேன்னானே. நான் உட்டுட்டேனா? ஏதாவது சோதாத்தனம் பண்ணிப் பூட்டான்னா இம்னா வருமா? அம்னா வருமா? நான் பல்லைக் கடிச்சுக்கிட்டு முடியாதென்னுட்டேன். கூடையை மாத்திரம் இங்கே வெச்சூட்டு தோட்டத்துக்குள்ளே அந்த மாமரத்து நிழல்லெ போய்ப் படுத்தான். பித்தப் பட படப்பு. ஏக்கனவே கிழவன்; அறவது வயதிருக்கும். குடியிலே உடம்பெல்லாம் தளந்து பூட்டுது. காலவெயிலிலெ கூடையைத் தூக்கிட்டு வந்தது தாங்கல்லே. அப்படியே படுத்துட்டான். அவனைப் பத்தி அப்புறம் மறந்துட்டேன். கூடையை வெச்சுட்டுத் திரும்பி எரும்பூருக்குப் பூட்டான் போலெல்லே இருக்கு. கூடையை எடுக்க இன்னக்கி வருவான். குடுமியைப் பிடிச்சுக்கிட்டு வாடகை வாங்கிப் புடறேன். வுட்டேனா ?" என்றான். "நீ எவ்வளவு நேரம் வரை. இங்கிருந்தாய் ?" என்றார் மகாலிங்கம்.

"நான் மத்தியானம் மூணு மணி வரை இங்கேதான் இருந்தேன். எசமான் மாடியிலே போய் காவலாக் குந்திக்கோன்னாருங்க. அவர் அந்த அறையைப் பூட்டி சாவியை எடுத்துக்குண்டு பூட்டாருங்க. நாங்க மூணுபேருங் காவலாயிருந்தம். ஆறுமணிக்கு வந்துட்டாருங்க. நான் உடுப்பெலலாம் வாங்கி வெச்சுண்டு மாடியிலேயே அரைமணி வரையிலே இருந்தேன். அவர் வந்ததும் மத்த காவக்காரன்களை உடனே வூட்டுக்குப் போய்ச் சோறு தின்னுட்டு வரச் சொன்னாருங்க. அவனுவ போய் அரைமணிக்கெல்லாம் நான் கீழே வந்துட்டேன். இராத்திரிமுழுக்கத் தூங்கவேயில்லை. கண்ணை இருட்டிக்கிட்டு வருது" என்று வேலைக்காரன் சொன்னான்.

"சரிதான்" என்று மகாலிங்கம் சொல்லிவிட்டு, புஷ்பவல்லியின் அறையில் எல்லாருங் கூடியிருந்த இடத்துக்கு வந்தார். அறையை மறுபடியும் உற்றுநோக்கினார். அறையின் ஓரத்தில் சுவரோடு ஒட்டினாற்போல ஒரு மேஜை போட்டிருந்தது. பக்கத்தில் ஒரு நாற்காலியிருந்தது; கையால் எட்டக்கூடிய விடத்தில் அநேக புத்தகங்கள் அடுக்கப்பட்ட ஒரு மரப் புத்தக அலமாறி இருந்தது. மேஜை வெகு சுத்தமா யிருந்தது. மேஜையின்மீது ஒரு பிளாட்டிங் பேபர் ஒட்டப்பெற்ற அட்டையொன்றிருந்தது. வெள்ளைக் கடுதாசு ஒன்றுமே யில்லை. பச்சை மைபோட்ட மைக்கூடும், ஒரு பேனாவும் ஒரு சிறிய தகரப்பெட்டியில் ஒரு மூலையில் மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்தன. கட்டிலிலிருந்து எழுந்து இறங்கு முன்னர், கண்ணுக்குப் புலப்படும்படி சுவற்றில் பெரிய எழுத்துக்களில்,

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்ற

குறள் வரையப்பட்டிருந்தது. பிளாட்டிங் மீது பச்சை மசியால் நான்கு தரம் 'லோகநாதன்' என்று வட்ட எழுததுக்களில் எழுதப்பட்டிருந்தது. மகாலிங்கம் புத்தக அலமாரியிலிருந்து ஒரு புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தார். அது கம்பராமாயணம். உரையில்லாப் புத்தகம். ஆனால் அழகிய எழுத்துக்களில் மூலத்துக்குப் பக்கத்திலேயே உரையும், கவியின் மாண்பையனுபவித்த சுவையும் பென்சிலால எழுதப்பட்டிருந்தது. அப்பொழுது மாசிலாமணிப்பிள்ளை வெகு துக்கத்துடன் பேசவாரம்பித்தார். "உலகத்தில, பெற்ற வாஞ்சையுண்டு. அதிலும் வளர்த்த வாஞ்சை விசேஷ சக்தியுள்ள தென்பார்கள். நான் புஷ்பவல்லியைப் பெறவில்லை. வளர்க்கவுமில்லை. பதினாறு மாதம் பழகின தோஷந்தான். என் மனம் அவளிடம் பறிகொண்டுவிட்டது. என்ன புத்திசாலி! என்ன அன்பு தெரியுமா? நினைக்கக்கூட நான் கொடுத்துவைக்காதவன். வந்து நாலு மாதத்திற்குள்ளாக, கம்பராமாயணம் வேண்டுமென்று கேட்டாள். அச்சுசுத்தமாவும், அச்சுப்பிழையில்லாமலும் இருக்கவேண்டிய புத்தகத்திற்காக ஊரூராய் விசாரிக்கச் சொன்னேன். மாயவரத்திலுள்ள புத்தகங்கள் வெகு அழகாயும், பிழையே இல்லாமலும் பதிப்பிக்கப்படுகின்றன வென்றறிந்ததும், அங்கிருந்து புதிய புத்தகம் தருவித்துக் கொடுத்தேன். மூன்று மாதத்திற்கெல்லாம் அது முடிந்து விட்டதென்றும், 'வில்லிபாரதம்' வேண்டுமென்றும் வந்துவிட்டாள். நான் எப்படித்தான் இதைப்

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்த லரிது.

பொறுப்பேன்?" என்று சொல்லிக் கொண்டே அழுதார். மகாலிங்கம் அவரைச் சற்றுத் தேற்றிவிட்டு ஒரு நாடாவை எடுத்து பூமியிலிருந்து குறள் எழுதியவரை அளந்தார். பின்னர், பக்கத்தறைக்குச் சென்று ஜன்னற் கதவிலிருந்து அறைத் தாழ்வாரம் எவ்வளவு ஆழமிருக்கிறது என்று அளந்தார். அறையிலிருந்து ஜன்னல் 6 3/4 அடி இருக்கிறது. நாலடி ஐந்தங்குலமுள்ள ஒருவர், ஜன்னலிலிருந்துகுதித்தால் மாடியில் விழித்திருந்தவரைக் கலவரப்படுத்தக்கூடிய சப்தம் கட்டாயமுண்டாகும். ஆனால் அறையிலிருந்த பெண் தானகவே தான் வெளியில் போயிருக்கிறாள். ஜன்னலின் வழியாகத்தான் சென்றாள். பச்சைமை மைக் கூட்டில் எப்போ போடப்பட்டது?" என்றார்.

அமிர்தம் என்னும் தாதி உடனே அறைக்குள் வந்தாள். "விருந்தாடி ஐயா எல்லாரும் வெளியே போவதற்குமுன்னே சுமார் இருபது நாழிப் பொழுதிருக்கச்சே புஷ்பவல்லி என்னமோ படிச்சுக்கிண்டிருந்தவள் என்னைக் கூப்பிட்டாள். நான் போனேன். மசிக்கூட்டிலே மசி இல்லே, மசி போட்டுக்குண்டு வரணும்னா. என்னமோ அவசரமா ஒரு கடிதாசு எழுதணும் இன்னா. நான் உடனே லோகநாதனறைக்குள்ளேபோனேன். அவன் சட்டையெல்லாம் பூட்டிண்டிருந்தான். மசி வேணுங்னே. கருப்பு மசி ஆயிப்பூட்டுது, பச்சை மசிதான் இருக்குன்னா. நான் அதைக் கொண்டுபோய் புஷ்பவல்லி மசிக்கூட்டிலே ஊத்தினேன். எதுன்னு கேட்டா. லோகநாதனதுன்னு சொன்னேன். சிரிச்சுக்குண்டா. மசிபோட்டதும் மைக்கூட்டை வைச்சுட்டு வந்து பார்த்தேன். என்னமோ வெள்ளக் கடிதாசியில தலையைக்கூடத் தூக்காமல் எழுதுக்கொண்டே இருந்தா. நான் பூட்டேன்" என்று பதிலளித்தாள்.

"நீ பிறகு அவளை எப்பொழுது பார்த்தாய்?" என்று மகாலிங்கம் கேட்டார்.

'இராத்திரி 8-மணி இருக்கும்; வெளியிலிருந்து வந்தாள். நிலா நல்லா எரிசசுதாம். காத்துலேயே குந்துக்குட்டு இருந்துட்டாளாம். அவள் முகங்கூட கொஞ்சம் ஒப்புஸமாயிருந்தது. தலையை வலிக்கிறது. வூட்டிலே ஆச்சி கிட்டே சொல்லாதே இன்னா. இம்மே வெளியே விடமாட்டாங்க. இராத்திரி லங்கணம் போட்டுட்டால சரியாய்ப் போயிடும். கொஞ்சம் டிகாஷனைக் கூடப்போட்டு காப்பி போட்டுண்டு வான்னு சொன்னா. காப்பி போடரச்சே, ஆச்சி புஷ்பவல்லி சாப்பிட்டாச்சோன்னு கேட்டா. எல்லாம் நிலாச் சாப்பாட்டுக்குப் பிரமாத தடபுடல். நான் புஷ்பவல்லிக்குக் கொஞ்சம் அஜீர்ணமாம். காப்பி கொண்டுவரச் சொன்னான்னு சொன்னேன். கவலைக் கிடமில்லையேன்னு ஆச்சிகேட்டது. இல்லெங்து சொல்லிப்புட்டேன். காப்பி கொடுத்தேன். குடிச்சா. நான் வந்துட்டேன். நித்தியங் கூடப் படுத்துக் கொள்ளப்போவேன். நேத்திக்கு ஆச்சி கீழே படுத்துக்குட்டுது. நானும் கூடப்படுத்துக்கிட்டேன். நித்தியம் புஷ்பவல்லி என்னைச் சட்டுன்னு வந்துடுன்னு சொல்லுவா. நேத்தென்னமோ நானறையை விட்டுவந்ததும் வராததுமாகக் கதவைத் தாப்பாள் போட்டுக்கொண்டா" என்று சொல்லி முடித்தாள்.

காவற்காரனொருவன் தான் மாடியில் காத்துக்கொண்டிருக்கும் பொழுது 5 3/4 மணிக்கு புஷ்பவல்லி ஒரு கடிதத்தை போஸ்டு செய்யச் சொன்னதாயும் எஜமானர் வரும்வரை தான் அந்த இடத்தை விட்டு நகரக்கூடாதென்று சொல்லிவிட்டதாயும், புஷ்பவல்லி தானே அக்கடிதத்தை போஸ்டுசெய்யச் சென்றதாயும் சொன்னான். இன்ஸ்பெக்டர் உடனே "இரவு 8மணிக்குமேல வீட்டிலிருந்திருக்கிறாள்; தனியே வெளிக்கிளம்ப மாட்டாள். யாருடைய ஒத்தாசையாவது இருக்கவேண்டும். பன்னிரண்டு வயதுப்பெண், நுங்கம்பாக்கம் ரோடில் தனியே எப்படி ஐயா இஷ்டத்துடன் நடக்கத்துணிவாள்? விஷயமே கட்டுக்கதைபோல் இருக்கிறது. அதிலும் மகாலிங்கம் சொல்வது இன்னும் விந்தையாயிருக்கிறது. அந்தப் பெண், தானே இங்கிருந்து போயிருந்தால் எங்கே ஐயா போயிருக்கும்? பெண்தான் எங்கேயோ போச்சென்று வைத்துக்கொள்வோம், பணமும் போய்விட்டது! மகாலிங்கம்! நீர் சொல்வது சுத்தமாய் நன்றாயில்லை. அந்த லோகநாதனை நாம் கிண்டும் பக்ஷத்தில உண்மை வெளியாகிவிடும். அவனை இப்படி விடும்" என்றார்.

"கொஞ்சகாலம் அவனைச் சும்மா விட்டு வையுமே. அதற்குப் பிறகு உமக்குப்பின்னால் ஒரு தண்டாவும் செய்யாமல் வரச்சொல்லுகிறேன். எல்லாவற்றிற்கும் ஓரே பறப்பாய்ப் பறந்தால் உண்மை எப்படி ஐயா தெரியும்?

உண்மையைக் கட்டாயம் கண்டுபிடித்துவிட லாம்" என்று மகாலிங்கம் சிரித்துக்கொண் டே பகர்ந்தார்.

"ஆனால் உமக்கு உண்மை தெரியும்போலி ருக்கிறதே. பெண்ணும் பொன்னும் போன விடமெங்கே ஐயா? உடனே சொல்லுமே" என்று மாசிலாமணிப் பிள்ளை கெஞ்சினர்.

"பெண்ணிருந்த விடத்தில் பெண்ணைத் தேடினோம், பெண்ணைக் காணோம். பணமிருந்த விடத்திற்குச் சென்று பார்ப்போம். அங்கு அதுவுமில்லாவிடில் ஈசுவரனிடம் எல்லாவற் றையும் ஒப்புவித்துவிட்டு இன்ஸ்பெக்டர் சுப் பண்ணாவின் ஆக்கினைக் குள்ளாவோம்" என்று மகாலிங்கம் சொல்லிக்கொண்டே மாடி ஏறினர். எல்லோருங் கூடச்சென்றனர்.

சிவாஜி சத்ரபதி

SHIVAJI THE GREAT

நாடக பாத்திரங்கள்

1.	சிவாஜீ சத்ரபதி - மகாராஷ்டிரத் தலைவர்	
2.	அண்ணாஜீதத்தர்	முக்கிய சேனாதிபதிகள்
3.	கங்காஜீ மங்காஜீ	
4.	தானாஜீ மாலசூரர்	
5.	பஸல்கார்	
6.	அப்பாஜீ சோணதேவர்	
7.	ரகோபலால் ஆத்ரேயர்	
8.	மூலானாஆமத் - கல்யாணபுரத்திற்கதிபதி	
9.	ஔரங்கசீப் - டில்லி பாதுஷா	
10.	டாவுட்கான்	பாதுஷாவின் மதி மந்திரிகள்
11.	ஜபர்தஸ்த்கான்	
12.	போலட்கான்	
13.	மோரோபிங்களே - சிவாஜியின் பேஷ்வா	
14.	ஜயஸிங்கர்	டில்லி பாதுஷாவின் சேனாதிபதிகள்
15.	டிலீர்கான்	
16.	ரகுனாதபண்ட் - சிவாஜியின் தூதர்	
17.	சாம்பாஜீ - சிவாஜியின் புதல்வர்	
18.	ராம்ஸிங் - ஜயஸிங்கரின் புதல்வர்	
19.	ஹனுமந்தர்	இராமதாசரின் சீடர்கள்
20.	சிவராமர்	
21.	இராமதாசர் - சிவாஜியின் குருமூர்த்தி	
22.	கங்குபட்டர் - புரோகிதர்	
23.	கங்கன்	இரு வேடர்கள்
24.	மங்கன்	
25.	ஜீஜாபாய் - சிவாஜியின் தாய்	
26.	ஸஹீபாய் - சிவாஜியின் உயிர்க்காதலி	
27.	ஸடீ-யன்-நரா - மூலானாவின் மருமகள்	

சேவகர்கள், பிரதானிகள், தளகர்த்தர்கள் முதலானோர் சமயத்திற்குத் தக்கபடி நடிப்பார்கள்.

நாடகம்:— பெரும்பான்மை மகாராஷ்டிர ராஜ தானியிலும், சிறுபான்மை டில்லிமாநகரிலும் பவானி தேவியின் ஆலயத்திலும், துர்க்கத்தின் வெளிப்புறத் திலும் நிகழும்.

பிரவேசம்

(சூத்திரதாரர் பாடிக்கொண்டே வருதல்.)

ஸ்ரீஜகதாம்பிகா வரப்பிரசாத தனயா—பகவத் பாகவதா கடாட்ச வீட்சண விமலா—மகாராஷ்டிர யுக சாம்ராஜ்ய நிர்த்தாரண தலைவ—இராஜேந்திர யோக சத்ரபதி சிவாஜி மகாராஜா.—(மலர் தூவல்)

ஸர்வேஜனானு ஸுகினோ பவந்து—சமஸ்த சன்மங் களானி ஸந்து — நடி! எங்குற்றனை?

(நடி பிரவேசித்தல்)

நடி:—சுவாமீ! நாடகத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்போயிருந்தேன்.

சூத்:—நாடகமா?

நடி:—ஆம் சுவாமி. நாடகம் நடத்தப்போவதை நீர் யறியீரோ?

சூத்:—அறியேன். என்ன நாடகம்?

நடி:—இராஜேந்திர சத்ரபதி சிவாஜி மகாராஜா வின் நாடகம்.

சூத்:—அவர் யார்?

நடி:—சுவாமி! ஸ்ரீபவானி தேவியின் திருவருள் பெற்ற மகாராஷ்டிரகுல திலகரும் புஜபல பராக்கிரம சாலியும், ஷஹாஜியின் குமாரருமான சிவாஜி மகா ராஜாவை யறியாதாரும் உண்டோ!

சூத்:—சிலர் அறிவார், பலர் அறியார்.

நடி:—இல்லை பிரபோ! தோட்டிமுதல் தொண்ட மான் அடங்கலு முள்ள எவரும் இத்தேயத்தில் அவரை அறியாதார் இல்லை.

சூத்:—பெண்ணே! யாவரும் அறிவதற்குச் சந்தர்ப் பம் என்ன?

நடி:—சுவாமி! தனிமகனாய்ப் பிறந்து தாளாண் மையால் தாரணிபெற்று, நம் காவிரித் தண் புனல்பா யும் நெற்களஞ்சியமாகிய தஞ்சைநாடுவரை, அவர் செங்கோல் தழைத்திருந்தது. அவர் சந்ததியார் இன் னும் வாழ்ந்து வருகின்றனர்!

சூத்:—ஆ! அப்படியா! அவரைப்பற்றிய விசே ஷம் என்ன?

நடி:—சுவாமி! தீன் முயற்சியால் பெரிய சாம்ராச்சியத்தை ஸ்தாபித்து, யாவரையும் அணைத்து ஆதரித்து வந்தவர். அவர் தண்ணலரை விண்ணவராயினும் நடுக்குற இடித்திடும் வீரதீரன்; நல்ல உத்தமன், வைராக்கியங்கொண்டவன். தாய்மொழி தள்ளாத் தனயன், தருமொழி கடவாக் குணவான்.

சூத்:—நன்குரைத்தனை. இத்தகைய வள்ளற்பெருமானு யவர்?

நடி:—சுவாமி! பிற ஸ்திரீயைத் தாய்போற் கருதுபவர்; தெய்வபக்தி வாய்ந்தவர்; அடியார் ஆசிபெற்ற பக்திமான்; அவர் அரசு, இராம இராச்சியத்திற் கொப்பா ரிருந்தது.

சூத்:—நங்காய்! அவரது சரித்திரமா இன்று நாடகமாக நடத்தப்படுவது?

நடி:—ஆம், சுவாமி. இதுகாறும் இத்தகைய நாடகம் நந்தமிழ் பாஷையில் நடைபெறாதது. இது நவீனம்.

சூத்:—நவீன நாடகம் நாகரிகப் பாங்குடையதன்றோ?

நடி.—ஆம், அற்புதக் காட்சியும் விநோத ரசமுங் கொண்டது.

சூத்:—அப்படியாயின் இங்குள்ளவர்கள் கண்டு களிக்கத்தக்கதே.

நடி:—அதற்குச் சந்தேகமா? சுவாமி. நாழிகை ஆய்விட்டது. யான் செல்லல் வேண்டும்.

சூத்:—யானும் வருகிறேன். (நிஷ்கிரமித்தல்)

(முதல் அங்கம் — காட்சி. க.)

இடம்:— இராஜகர் தூர்க்கத்திற்குச் செல்லும் பாதை.

காலம்:—அந்திப்பொழுது.

பாத்திரங்கள்:—அண்ணாஜீ தத்தர், கங்காஜீ மங்காஜீ, மோரோ பிங்களே.—

கங்காஜீ:—ஐயா! தத்தரே! தோரண கோட்டையை முற்றுகையிட்டுக் கைவசப்படுத்தின காலத்தில் தூர்க்கக்காவலன் மகமத்கான் செய்த வாட்போரை என்னவென்று நினைக்கிறீர்?

தத்தர்:—நினைப்பதென்ன? அவன் ஒரு சூரன். ஆனல் யோசனையற்றவன். யுத்த தர்மத்தைச் சற்றே தெரிந்தவனாயின், அவனை யாம் வெல்வது முடியாது.

கங்:—நன்று கூறினீர். எனக்கும் அப்படியேதான் தோன்றிற்று. பீஜாபூர் சுல்தானிடம் இருக்கும் ஒவ்வொருவரும் நல்ல சூரர்கள். தேகக்கட்டு வாய்ந்தவர்கள்.

பிங்க:—ஐயா! நமக்குக் கைவசப்பட்ட தோரண கோட்டையைச் செப்பனிட்டு நன்கு பலப்படுத்த வேண்டாமா?

தத்:—வேண்டாமெனச் சொல்வாரும் உண்டோ? 'ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித் தற்போற்றுபவர்க்கும் பொருள்' என்பதை யறியீரோ. வலிமையுடையவராயினும் அரணில்லாவிடத்து அழியுந் தன்மையராவர் என்பது மூதுரை.

கங்:—தத்தரே! ஆம். எந்நாளும் வற்றாத நீரும், செறிந்த காடும் கோட்டைக்கு அங்கமென்பதை யான் அறிவேன்.

பிங்:—நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் இந்நான்கும் சூழப்படுவதே கோட்டை யென்பார் என்பதை யான் சிறுபிராயத்தில் படித்திருக்கிறேன்.

தத்:—நண்பர்களே! தோரணக் கோட்டை மதில் உட்புறத்தே யுள்ள பதணத்தைத் தகர்த்த காலத்தில் புதையல் அகப்பட்டதை யறிவீர்களா?

பிங்.—ஒருவாறு அறிவோம். அதைப்பற்றி ஈண்டு என்ன?

தத்தரே! நீர் யோசனையுடன் கேட்டதைப் பார்த்தால் ஏதாகிலும் விசேட மிருக்கவேண்டும்.

தத்:—விசேடம் ஒன்றுமில்லை. அகப்பட்ட புதையல் பணத்தில் ஒரு பாதியை பீஜாபூருக்கு அனுப்பிவிட்டார் சிவாஜீ.

பிங்:—என்ன! என்ன!! பீஜாபூருக்கா?

தத்.—ஆம்! பீஜாபூருக்கே.

பிங்:—ஏன் அனுப்பவேண்டும்? யுத்தத்தில் அகப்பட்ட பொருள் ஜெயித்தவனுக்கன்றோ சேரும்.

கங்:—பிங்களரே! இதில் ஏதோ விசேடமிருக்கிறது. ஒருகாரியத்தையும் சிவாஜீ பதறிச் செய்பவரல்லர். கால நிலைமையையும் இடநிலைமையுமறிந்தே செய்பவர். ஆனாலும் இதன் மர்மத்தை யாம் அறியவேண்டியதே. (தத்தரைப் பார்த்து) தத்தரே! நீர் அறிவதை யாங்கள் அறியக் கூறுவீர்.

தத்:—ஐயா! தோரணகோட்டையைத் துராக்கிரமமாய்ச் சிவாஜீ கைவசப்படுத்தினரென்று காவலன் சுல்தானுக்குச் சொல்ல, அன்னவன் நீராக்கோபங் கொண்டிருப்பதையறிந்த சிவாஜீ, ஆரம்பத்தில் வெகு சாக்கிரதையுடன் இருக்கவேண்டு மென்றறிந்து, சுல்தான் கோபந்தணியப் பணத்தை யனுப்பினர்.

பிங்:—பணத்தினால் கோபந்தணியுமா?

தத்:—ஏன் தணியாது?

கங்:—கோட்டையை யிழந்த சுல்தான், மீண்டும் கோட்டையைப் பற்றினாலன்றிக் கோபந் தணியாதல்லவா?

தத்:—அப்படியல்ல; காவலன், சுல்தானுக்குச் சரிவர வருடாந்தரப்பணம் கட்டுவதில்லை யென்றும், இனி, தான் முன்னிலும் மூன்றுமடங்கு அதிகமாகக் கட்டுகிறேன் என்றுங்கூறி கடிதமொன்றையும் சிவாஜீ அனுப்பியிருக்கிறார்.

கங்:—ஆனால் கடிதமும் பணமும் அனுப்பப்பட்டது என்று சொல்லும்.

தத்:—ஆம்.

பிங்:—தத்தரே! அனுப்பாமல் இருந்திருந்தால் என்ன?

தத்:—ஒன்றுமில்லை. ஆரம்பத்திலேயே சுல்தானுடைய விரோதம் வேண்டாம் என்பதே.

கங்:—அது மாத்திரமல்ல; சுல்தானைவிட நமக்குப் படை வலிமை குறைவு. படைவலிமை திரட்டிய பின்னரே யாம் பணத்தை நிறுத்தக்கூடும்.

தத்:—ஆம். நன்று கூறினீர். தோரணாவை வைத்துக்கொண்டே அநேக துர்க்கங்களை வெல்லவேண்டுமென்பதே சிவாஜியின் அபிப்பிராயம்.

பிங்:—தோரணாகோட்டை மிக்க பலமானதன்றோ?

தத்:—பலத்திற்கு என்ன குறை? தெரியாமலா சிவாஜி முதல் முதல் இக்கோட்டையைப் பற்றினார்.

பிங்:—தத்தரே! இக்கோட்டையின் விசேஷத்தை நீர் அறிந்திருப்பீரல்லவா?

தத்:—ஆம்! அறிவேன்.

பிங்:—சற்றே கூறுவீர்.

தத்:—அதோ! (கையை நீட்டிக் காண்பித்தல்) நமக்கு முன்பாக வானளாவி நிற்கும் மலைக்குச் சய்யாதிரி பர்வதமெனக் கூறுவர். அப்பர்வதமும் அதைச் சார்ந்த அடவிகளும் சூழப்பட்டிருப்பதால் பகைவர்கள் எளிதில் தோரணா கோட்டைக்கு வரமுடியாது. இக்கோட்டையைச் சுற்றிலும் ஆழ்ந்த பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. இது பலமான கோட்டை. இக்கோட்டைக்கு இரண்டு குரோச தூரத்தில் ரோஹிதாஸர் தவமியற்றிய இடமுமுண்டு.

கங்:—நண்பரே! என்ன பெருமை. என்ன மகிமை! பெரியோர்கள் மாதவம்புரிந்த இடம் சகல இடரையும் தீர்க்குமல்லவோ! (பாடுதல்.)

பிங்:—ஆம். அதற்கென்ன சந்தேகம்? நாம் நினையாத பாக்கியம் பெற்றோம். இதைத் தெரிந்தல்லவோ சிவாஜீ தோரணாவைப் பற்றினார்.

தத்:—இன்னும் கேளுங்கள். தோரணாகோட்டைக்குக் காததூரத்தில், ஈசானிய மூலையில் இருப்பது இராஜகடா துர்க்கம். அதற்குத் தென்புறத்தில் இருப்பது ஸிம்மகடா கோட்டை. ஸிம்மகடாவிற்கு நேர் வடக்கேயுள்ளது புரந்தரன் கோட்டை. இக்கோட்டைகள் யாவும் நம்மைச் சேர்ந்தவை.

பிங்:—என்ன! என்ன! அதெப்படி?

தத்:—ஏன் நீங்கள் அறியவில்லையோ?

கங்:—அறியோம்.

தத்:—நேற்று காலை தானாஜி மாலசூரர் இராஜகடா துர்க்கத்தைக் கைப்பற்றினார். பாஜீ பஸல்கார் ஸிம்மகடாவைச் சுவாதீனப்படுத்தினார்.

கங்:—ஆச்சரியம்! ஆச்சரியம்.

பிங்:—தானாஜீ மாலசூரர் சூரரே. (யாவரும் தானாஜியைப்பற்றிப் பாடுதல்.)

தத்:—மாலசூரர் இராஜகடாவைக் கைப்பற்றிக் கணக்கில்லாத நிதிக்குவியல்களைக் கொணர்ந்தார்.

பிங்:—ஆ! அப்படியா?

தத்:—ஆம்! நம் சிவாஜி புரந்தரன் கோட்டை முற்றுகையில் காண்பித்த வீரமே வீரம். என்ன சாகஸம்! என்ன தந்திரம்! பசுக்கூட்டத்தில் புலி பாய்வதுபோல் சத்துருக்களைச் சின்னாபின்னப்படுத்தினார்.

கங்:—சிவாஜியின் சாகஸத்தைக் கேட்கவும் வேண்டுமோ? ஷஹாஜியின் பிள்ளையல்லவோ அவர். சிங்கத்திற்குப் பிறந்தது எப்படி யிருக்கும்?

பிங்:—யுத்தரங்கத்தில் நுழைந்தால் சங்கரமூர்த்தி போலல்லவோ தோன்றுகிறார். சூரனைக் கொன்ற சுப்பிரமணியனைப் போலவும், அரக்கர்களைக் கொன்ற இராமனைப் போலவும் சண்டமாருதம்போல் போர் புரிகிறார்.

தத்:—நண்பரே! சண்டையில்தான் இவ்வளவு மும்மரமாக யிருக்கிறாரென்றால், பாகவத கோஷ்டியிலும் வெகு மும்முரமாகவே யிருந்து பஜனை செய்வார். என்ன பக்தி! என்ன பக்தி!

கங்:—தத்தரே! சிவாஜியின் குணாதிசயங்களைக் கேட்கக் கேட்க என் தேகம் மயிர்க்கூச்சலிடுகின்றது. ஒருவித பிரேமை உண்டாகின்றது. என் ஆவியுள்ளளவும் அவரைவிட்டு நீங்கேன். யான் அவர் அடிமை.

பிங்:—தத்தரே! சிவாஜிஅவரது தேகநிழல்போலச் சதா தொண்டுசெய்து பின்பற்றியே யிருப்பேன். கொம்பில் படர்கொடியதுபோல் அவரையே சுற்றிக்கொண்டிருப்பேன். அவருக்கு அனவரதமும் பணிவிடைசெய்வேன். இது நிச்சயம். (கங்காஜியும் பிங்களரும் பாடுதல்.)

தத்:—நண்பர்களே! உங்கள் மனத்தூய்மையை யான் என்னென்றுரைப்பேன். இனி யாம் மூவரும் உள்ளளவும் சிவாஜியைப் பிரியாமலிருப்பதே சிறந்த கடமை.

கங்—பிங்:— (இருவரும்) ஆம். ஆம். நம் மகாராஜாவிற்கு இவ்வளவு மகிமை உண்டாவதற்குக் காரணம் என்ன?(கோட்டையில்) சங்கத்தொனி கேட்டல்.

தத்:—நண்பரே! எல்லாம் பவானி தேவியின் திருவருள் என்று அவர் அனவரதமும் கூறுவதை நீங்கள் கேட்டதில்லையோ. சங்கநாதம் கேட்கின்றது. சபைக் கூட்டம் நடைபெறும். இனி யாம் கணப்பொழுதேனும் தாமதித்தல் தகாது. யுத்தத்தைப்பற்றிய ஆலோசனை ஏதாகிலும் உண்டாகும். சிவாஜியினிடமிருந்து ஏதாகிலும் உத்திரவு வந்திருக்கும். செல்வோம். வாருங்கள். வாருங்கள்.

கங்—பிங்:—அப்படியே போவோம்.

(நிஷ்கிரமித்தல்)

(காட்சி முடிவு.)

எடிஸனது சூழ்ச்சிகள்

EDISON'S INVENTIONS

எடிஸன் கண்டுபிடித்துள்ள சூழ்ச்சிகள் அநேகம். அவற்றுள் பல, மின்சாரசக்தியைச் சார்ந்தவை. உலகில் ஏற்பட்டுள்ள சூழ்ச்சிக் கருவிகளுள் பெரும் வியப்பை உண்டுபண்ணக் கூடியது **போனோகிராப்** என்னுமொரு பேசும் யந்திரம். இக்கருவிக்கு மனிதரைப்போல் வியக்தமாய்ப் பேசுந் தன்மையுண்டு. இது பிரகிருதி சாஸ்திரத்தின் ஒரு பாகமாகிய 'சப்த தத்துவங்களைப்' பொருத்துண்டாயது. எடிஸனது காலத்திற்கு முன்னர் வெகு வருஷங்களாகவே, ஒரு பேசும் கருவி கண்டுபிடிக்கப் பலவிதப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அநேகமாய் மனிதர் குரலுக்கொப்பான சப்தங்களை யுண்டாக்கக்கூடிய பியானோ முதலிய கருவிகளும் சூழ்ச்சிகளும் ஏற்பட்டிருந்தபோதிலும், இவைகளின் அமைப்பு வெகு சிக்கலானதாயும், ஏராளமான திரவியச் செலவு செய்து உண்டாகக் கூடியதாயுமிருந்தது. அப்படியிருந்தும், அவைகளிலுண்டாகும் சப்தமானது, மனிதக்குரலுக்கு ஒருவாறு சமமானதா யிருந்ததே யொழிய, எல்லா விதத்திலும் அதற்கு ஒத்ததெனக்கூடியதாயில்லை. எடிஸன் கண்டுபிடித்துள்ள கருவியோ எளிதிலறியக் கூடியவாறும், அற்பச் செலவிலும் அமைக்கப்பட்டு, மனிதர்களின் வார்த்தைகளையோ, பாட்டுகளையோ, வாத்திய கோஷங்களையோ கிரஹித்து, மீண்டும் நாம் வேண்டும்பொழுது வெளியிட்டுப் பரமானந்தத்தை யளிக்கக்கூடியதா யிருக்கிறது.

இக்கருவியின் ஆதார தத்துவத்தையும், அதன் அமைப்பையும் அறிவது அவசியம். எவ்வித சப்தமும் வஸ்துக்களிலுள்ள அணுக்களின் சலன விசேஷத்தால் உண்டாகிறது. அவ்வாறு உண்டாகும் சப்தமானது நம்மைச் சுற்றிலுமுள்ள வாயுமண்டலத்தில் அலைரூபமாக எங்கும் பரவி, நமது காதில் பிரவேசித்து சுரோத்திரானகத்தைத் தாக்கும் பொழுது, அதை நாம் உணர்கிறோம். ஒவ்வொரு சப்தமும் சலன விசேஷத்தால் உண்டாகிறதென்பது நமக்கு எளிதில் தெரியக்கூடிய விஷயம். ஒரு வெங்கலமணி ஒலிக்கும்போதும், தம்பூர், வீணை முதலிய வாத்தியங்கள் சப்திக்கும்போதும், மணியையோ, வாத்தியக் கம்பிகளையோ அமுக்கிப் பிடித்தால், சப்தம் நின்றுவிடுவது அனுபவசித்தம். பகவான் நமக்கு அளித்திருக்கும் வாய், குரல்வளை முதலிய சப்தேந்திரியங்களால் ஏற்படும் வார்த்தைகளும், கீதங்களும்



வெகு வியக்கத் தக்கவைகளாயும், மற்றைய சாதாரண ஒலிகளைக் காட்டிலும் விசேஷ குணங்களுள்ளவைகளாயு மிருக்கின்றன. இவ்வித சப்தங்களோ, மேற்கண்ட இந்திரியங்கள், அவைகளி னிடையேயுள்ள காற்று இவற்றில் ஏற்படும் விசேஷ சலனத்தால் உண்டாகி, வெளிக்காற்று மண்டலத்தில் பரவுகின்றன. ஒவ்வொரு சப்தமும் அதற்குரிய சலனத்தாலேயே உண்டாகக்கூடியது. இந்தத் தத்வ ரகசியமறிந்த எடிஸன் பலவாறு ஆலோசித்து, இதைத் தக்கவாறு பயன்படுத்த விரும்பினர். இவ்வித சலனங்களை ஒரு தக்க சமதளத்தில் பதியச்செய்து, மீண்டும் வேண்டும்போது அவை வெளிக்கிளம்பும்படி ஏற்பாடு செய்தால், மனிதர் பேசும் வார்த்தை முதலியனவற்றை அனுசரித்து ஒலிக்கக்கூடிய கருவியை நிர்மாணம் செய்யலாமென்று அவரது நுட்பமான புத்திக்குத் தோன்றியது. ஒருவர் சொல்லும் வார்த்தையானது மற்றவர் காதில் விழும்பொழுது, அங்குள்ள சுரோத்திரானகத்திலும் அசைவு ஏற்பட்டு, அதன் மூலமாய் சப்த உணர்ச்சி உண்டாகிறது. ஒவ்வொரு சப்தத்திற்கும் உரித்தான சலன மேற்படும்பொழுது, அச் சப்தம் உண்டாகுமென்று அவர் தமது புத்தியூகையால் கண்டுபிடித்தார். மனிதருடைய சப்தேந்திரியங்களைப் போன்ற கருவிகளையும், வாத்திய விசேஷங்களையும் அமைத்து, அவை மூலமாய் மனிதக்குரல் போன்ற தொனிகளை உண்டாக்கக்கூடு மென்பதை எடிஸனுக்கு முன்னுள்ள சில பௌதிக

வித்வான்கள் கண்டறிந்திருந்தாலும், அவ்விதத் தொனிகள் மனுஷ்ய சப்தங்களைப்போல அவ்வளவு வியக்தமில்லாம லிருப்பதுடன், மற்றைய விதங்களிலும் பேதமுள்ளவைகளாயுமிருந்தன. எடிஸனே இவ்விதக் கருவிகளின் நூனதையை யறிந்து, நாம் சப்திக்கும்போது நமது சப்தேந்திரியங்களின் சலன விசேஷங்களையே தக்கவாறு பதிய வைத்து, மீண்டும் அவற்றை வெளிப்படுத்தி அவற்றிற்குரிய தொனிகளை வேண்டும்போது உண்டாக்கத்தக்க சூழ்ச்சி செய்தார். இவ்விதப் பேசுங்கருவியின் அமைப்பைச் சற்றுக் கவனிப்போம்.

ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட அங்குல நீளமும், மூன்று அல்லது நாலு அங்குலம் குறுக்களவுமுள்ள, ஒரு பித்தளைத் திரண்டவடிவானது (Cylinder) அடிவானத்து நேரான ஓர்உருவாணியில் (Horizontal axis) பொருத்தப்பட்டு, அதன் மூலமாய் சுழலக்கூடியதாயிருக்கிறது. இவ்வடிவின் முனைகளைக் காட்டிலும், உருவாணியானது இரு பக்கத்திலும் நீண்டிருக்கிறது. இந்த ஸ்தம்பரூபமான வடிவைச் சுற்றி சுமார் 1/10 அங்குலம் இடைவெளியுள்ள, சுரை ரூபமான தவாளி (Spiral groove) ஒரு நுனிமுதல் மற்றொரு நுனிவரையில் வெட்டப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன உருவாணியிலும் இதற்கொத்ததான தவாளி ஏற்பட்டிருப்பதுடன், அது இரண்டு மறையாணிகளால் ஏந்தப்பட்டு, அதன் ஒரு முனையிலுள்ள சக்கரம்போன்ற கைப்பிடியால் சுழற்றக்கூடியதா யிருக்கிறது. மேற்கண்ட வடிவை, கைப்பிடி மூலமாய் ஒருதரம் சுற்றும்படி சுழற்றும்போது, அது சுமார் 1/10 அங்குலதூரம் முந்தியோ, பிந்தியோ செல்லக்கூடும். மேற்பக்கம் புனல்போன்றவும், மென்மையான இரும்பாற் செய்யப்பட்டுமுள்ள **விதானம்** (Diaphragm) என்னுமொரு கருவியானது இவ்வடிவிற்குச் சற்று மேலேயிருக்கும்படி ஏந்தப்பட்டிருக்கிறது. வேண்டும்போது இதை அந்தஸ்தானத்திலிருந்து எடுத்துவிடக்கூடும். இந்த விதானத்தின் அடிப்புறத்தின் மத்தியபாகத்தில் எழுத்தாணிபோன்றதொரு சிறு ஊசியானது (Stylus) பொருத்தப்பட்டுள்ளது. இவ்வூசியானது மேற்சொன்ன வடிவின் தவாளிமேல் நேராக வைக்கப்பட்டு, விதானத்தின் சலனத்தினால் தானும் அசைவுற்று, தவாளியின்மீது மெல்லப் பதியும்படி செய்யக்கூடியதாயிருக்கிறது. ஆனால் அது அந்தத் தவாளியின்மேல் அதிகமாய் அழுந்தாமலிருப்பதற்கு வேண்டிய விசை, யாக்கை முதலான உபகரணங்களும் கருவியின் அடிவாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

பேசுங் கருவியை உபயோகப்படுத்தும் விதம்.—வெகு சமமான தளமேற்படும்படி, முதலில் மேற்கூறிய திரண்டவடிவைச் சுற்றி, வெள்ளீயத் தகடால் மூடவேண்டும். இதன் மீது இரும்பு விதானமானது மேற்சொன்னவாறு தக்க ஸ்தானத்திலிருக்கும்படி தாங்கி நிறுத்தப்படவேண்டும். இப்போது இதனடியிலுள்ள எஃகுஊசியானது, ஒரு தவாளிக்கோட்டுக்கு நேராக வெள்ளீயத் தகட்டின்மீது மெல்லத் தொட்டுக்கொண்டிருக்கும். இப்பொழுது கைப்பிடியைச் சுழற்றி அதே சமயத்தில் ஒருவர் மேற்கண்ட புனல்போன்ற விதான முகத்தில் ஏதாவது பேசும்படி செய்யவேண்டும். இவ்வாறு பேசும்போது, அப்பேச்சுக்குரிய அசைவு விசேஷங்கள், இடையிலுள்ள காற்றின் மூலமாய் இரும்பு விதானத்தைத் தாக்கி, அதையும் அவ்வாறே ஆலோலமாக அசையச் செய்யும். இதனால் அதன் அடிப்புறத்திலுள்ள ஊசியும் சலனமுற்று வெள்ளீயத் தகடுமீது பட்டு, அந்தந்தச் சலனத்தின் விசாலத்துக்குத் தக்கவாறு ஆழமான பதிவுகளை (Impressions) அத்தகட்டில் உண்டுபண்ணும். அதாவது இப்பதிவுகள் விதானத்தினருகே பேசப்பட்டுள்ள வார்த்தை முதலானவற்றிலுள்ள நாதபேதங்களுக்கு ஒத்தவைகளா யிருக்கும். இப்போது விதானத்தை அந்த ஸ்தானத்திலிருந்து கழற்றி பித்தளைவடிவை அப்பிரதக்ஷணமாய்ச் சுழற்றி முதன் முதலிருந்த ஸ்தானத்திற்குக் கொண்டு வந்து, விதானத்தை மீண்டும் வெள்ளீயத் தகடின்மீது அழுந்தியுள்ள அடையாளங்கள்மீது மெல்லத் தாங்கும்படி செய்து, மறுபடியும் முன்போல் அதேதிசையில் வடிவைச் சுழலச்செய்தால், முன் பேசப்பட்டுள்ள வார்த்தை முதலியன முறையே வெளிப்படும். வடிவு சுழலும்போது, அதன் மீதுள்ள பதிவுகளைத் தொட்டு நிற்கும் எஃகு ஊசியும், அவற்றின் ஆழத்துக்குத் தக்கவாறு மேலும் கீழும் சலிக்கும்படி ஏற்பட்டு, அதனால் விதானமும் அசைவடையும். இவ்வித அசைவானது காற்றின் மூலமாய்ப் பரவி, கேட்பவர் காதுகளிற்பட்டு,

முன்சொல்லப்பட்ட சப்தங்கள் ரூபமாய் பரிணமிக்கும். இதுதான் எடிஸன் ஆதியில் கண்டுபிடித்துள்ள யந்திரம். பின்னர் இதில் அநேக சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டன.

மேற்சொன்ன வடிவில் பதிந்துள்ள அடையாளங்களைக்கொண்டு அவற்றிற்குரிய வாசகங்கள் முதலியனவற்றை மீண்டும் உண்டுபண்ண வேண்டுமானல், வடிவானது எப்போதும் ஒரே ரீதியாய்ச் சுழலவேண்டும். இது சுழலும் கால அளவு பேதப்பட்டால், அதிலிருந்து உண்டாகும் சப்தங்கள், முன்பு சொல்லப்பட்ட சப்தங்களைக்காட்டிலும் வேறுபடும். இவ்வித வேறுபாடு உண்டாகாம லிருப்பதற்கும், இன்னும் மற்றைய சௌகரியங்களுக்காகவும், அநேக திருத்தங்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. திரண்ட வடிவுக்குப் பதிலாக 10 அங்குலமுள்ள தட்டையான வட்டம் (Circular plate) உபயோகப்படுத்தப்படுகிறது. இதன் இருபக்கத்திலும், மத்தியிலிருந்து ஆரம்பித்து சுரைபோல் சுற்றிச் சுற்றிச் செல்லும் தவாளியானது வட்டத்தின் முனைக்குச் சற்று தூரம்வரையில் செதுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதத் தவாளியில் பலவித வார்த்தைகளோ, சங்கீதங்களோ மேற்கூறிய பிரகாரம் அலை போன்ற அடையாளங்கள் ரூபமாய்ப் பதிந்துள்ளன. எஃகு, வைரம், **டங்க்ஸ்டன்** என்னும் வஸ்து இவற்றுள் ஏதாவது ஒன்றினல் செய்யப்பட்ட சிறு ஊசியின் நுனியானது இந்தக் தவாளியில் சம்பந்தப்பட்டு, வட்டம் சூழலும்போது, அதன் வழியே செல்லத்தக்கதா யிருக்கிறது. இந்த ஊசியானது ஒரு மிண்டி (Lever) போன்ற ஏற்பாடு மூலமாய் அப்பிரகத்தால் (mica) செய்துள்ள விதானத்தில் (Diaphragm) பொருத்தப்பட்டிருக்கிறது. இந்த விதானமானது, தொனிவிருத்தி யந்திரம் (Sound-box) என்று சொல்லப்பட்ட ஒரு உலோக யாக்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பேச்சு முதலியவற்றை அடையாள ரூபமாய் அடக்கியுள்ள வட்டமானது அதன் மத்தியிலுள்ள துவாரப்பிரதேசத்தில் ஓர் உச்சமான உருவாணியின்மேல் (Vertical axis) வைக்கப்பட்டு, அத்துடன் சுழலக்கூடியதாயிருக்கிறது. அவ்வுருவாணி ஒரு பெட்டியின் மேற்புறத்திலிருந்து சற்று மேலே கிளம்பி நிற்கிறது. இதில் வைக்கப்பட்ட வட்டமானது அப்பெட்டியின்மேல் தாங்கி, சமமாய் நிற்க இடமுண்டாகிறது. அவ்வுருவாணியின் அடிப்புறமானது, விசை, (Spring) கடியார வேலை போன்ற சக்கரக் கூட்டங்கள் இவைகளின் மூலமாய்ச் சுழற்றப்பட்டு, ஒரே நிதானமாய்ச் சுற்றக்கூடியதாயும், வேண்டும்போது சலிக்காமல் நிற்கக்கூடியதாயு மிருக்கிறது.

(६)



இவ்வித யந்திர அமைப்பால் வட்டமானது சுழலும்போது, அதில் சம்பந்தப்பட்ட ஊசியும், வட்டத்தின் தவாளியிலுள்ள அடையாளங்களில் கீழும் மேலும் சென்று, அச்சப்தங்களுக்குரிய அசைவு விசேஷங்களைப் பெறுகிறது. இந்தச் சலனங்கள் மிண்டியின் மூலமாய்ச் சென்று, அப்பிரக விதானத்தை அசையச் செய்கின்றன. அதனல் மேலே கூறியுள்ள தொனிப் பெட்டியிலுள்ள காற்றும் அசைவுற்று அதன் பலத்தால் சுற்றிலுமுள்ள வாயுவில் சலனமேற்பட்டு, அது கேட்போரின் சுரோத்திரானகத்தைத் (Tympanum) தாக்கும்போது, அதற்குரிய சப்த உணர்ச்சி உண்டாகிறது.

இவ்வித அரிய தத்துவங்களைக் கண்டுபிடித்து, தமது நுட்பபுத்தியால் அவற்றைப் பயன்படச்செய்த எடிஸன் என்ற மகாவித்வானிடம் நாம் நன்றியறிதல் பாராட்ட வேண்டுமென்று சொல்ல வேண்டுமோ? இப்போது 'கிராமபோன்' என்று சொல்லப்பட்ட பேச்சு யந்திரத்தைக்கொண்டு, விவாகம் முதலிய கொண்டாட்ட சமயங்களிலும், இதர காலங்களிலும், பொழுது போக்குக்காக, அநேக வித்துவான்

களின் சங்கீதங்களையும், ஹாஸ்ய வார்த்தைகளையும் கேட்டுக் களித்துவருகிறோம். இவ்வித யந்திர விசேஷங்களால் நமது பந்து மித்திரர் முதலியவர்களின் வார்த்தைகளைக் கிரஹித்து அவர்கள் காலஞ்சென்ற பிறகும் அவற்றைக் காதாரக்கேட்டு ஆனந்திக்க இடமுண்டு. இவ்வாறு வெகு ஜன உபகாரம் செய்துள்ள எடிஸனது மகிமையே மகிமை! ஆனால் இது அவரது புத்திகோசரத்தால் கண்டுபிடிக்கப்பட்ட பலவித சூழ்ச்சிகளுள் ஒன்றேயாகும். அவரது மற்றைய சூழ்ச்சிகளும் கருவிகளும் சிறப்பிற் குறைந்தவைகளல்ல.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

நல்ல பேச்சினால் விளைந்த நன்மை

ஆலப்பிழை என்கிற பட்டணத்தில் ஒரு வியாபாரி இருந்தான். அவன் வியாபாரத்தில் ஏராளமாய்ப் பொருள் சம்பாதித்திருந்தான். பணக்காரனானாலும், வியாபாரி கொஞ்சமும் கர்வமில்லாதவன்; புண்ணிய பாவங்களுக்குப் பயந்தவன்; தெய்வபக்தி யுடையவன்.

அவனிடத்தில் ஒரு குதிரை இருந்தது. அக்குதிரை பார்வைக்கு வெகு அழகாயிருக்கும். எல்லோரும் ஆச்சரியப்படும்படியாய்ச் சவாரி போகும்; தன் எஜமானுடைய குறிப்பறிந்து நடக்கும். மிகவும் சாதுவாயிருக்கும்; வியாபாரி அதை மிகவும் அன்பாய் நடத்திவந்தான்.

அந்தக் குதிரையை அயலூரான் ஒருவன் விலைக்குக் கேட்டான். வியாபாரி, "இந்தக் குதிரை விலைக்குக் கிடையாது" என்று சொல்லிவிட்டான். அவன் வியாபாரியைப் பார்த்து, "நீர் எவ்வளவுபணம் கேட்டாலும் தருகிறேன். இல்லாவிட்டால் இதற்குப் பதிலாக வேறு நான்கு குதிரைகள் கேட்டாலும் தருகிறேன். எனக்கு அதை வைத்துக்கொள்ள ஆசையாயிருக்கிறது" என்று தன்னாலானமட்டும் கேட்டுப் பார்த்தான். வியாபாரி, கொடுக்க முடியாதென்று மறுத்துவிட்டான்.

அப்பால் ஒருநாள் அந்த வியாபாரி ஒரு காட்டின் வழியே அந்தக் குதிரையின் மேலேறிச் சவாரி போய்க்கொண்டிருந்தான். அந்த வழியில் ஒரு முடவன் படுத்திருந்தான். அவன் வியாபாரியைக் கண்டதும், "ஐயா, இந்த முடவனைக்காப்பாற்றுங்கள்; உங்களுக்குப்புண்ணியமுண்டு; நடக்கச் சக்தியில்லை; பசி காதையடைக்கிறது; தாகம் நாவை வரட்டுகிறது" என்றான்.

வியாபாரி குதிரையை நிறுத்தி, "என்ன செய்யச்சொல்லுகிறாய்?" என்று கேட்டான். முடவன், "ஐயா, என்னை இந்தக் குதிரையின் மேலேற்றி வைத்துக்கொண்டு போய் அடுத்த கிராமத்தில் விட்டுவிடுங்கள். நான் அங்கே யாரிடமாவது சோறுகேட்டு வாங்கி, உண்டு என்பசியைத் தீர்த்துக்கொள்கிறேன்" என்று கெஞ்சிக்கொண்டான்.

வியாபாரி அவனுக்கு இரங்கி அவனைக் குதிரையின்பேரி லேற்றி வைத்துக்கொண்டு தான் கீழே குதிரையைப் பிடித்தபடியே நடந்துபோனான். குதிரை திடீரென்று குதித்து ஓடத்தலைப்பட்டது. வியாபாரி திடுக்கிட்டு என்னவென்று பார்த்தான். அதற்குள் குதிரை ஐம்பது கஜதூரத்துக்கு மேலே போய்விட்டது.

வியாபாரி திகைத்து நின்றுவிட்டான். குதிரையின் மேலிருந்த முடவன் குதிரையை நிறுத்தி வியாபாரியைத் திரும்பிப்பார்த்தான். வியாபாரி, "இவன் முடவனலல; யாரோ வஞ்சகன்" என்றறிந்தான். முடவன், "நான் முடவனல்ல, உன்னிடம் குதிரையை விலைக்குக் கேட்டவன். உன்னை ஏமாற்றி இந்தக் குதிரையைக் கொண்டுபோகவே முடவனைப்போல் வேஷங்கொண்டு இங்குப் படுத்திருந்தேன். இப்படிச்செய்ய ஆறுமாத காலமாய்ச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தேன். என் காரியம் முடிந்தது; நீ போகலாம்" என்றான்.

வியாபாரி, "சரி, இனி நான் உன்னை என்ன செய்யப்போகிறேன். எனக்கு அவ்வளவுதான் பாக்கியம். நீ சுகமாய்க் குதிரையைக் கொண்டுபோ. அதன் அருமை அறிந்து நடத்து. உன்னிடம் ஒருவிஷயம் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தக் குதிரையை நீ என்னிடமிருந்து இப்படி ஏமாற்றிக்கொண்டு போனதை ஒருவரிடமும் சொலலாதே. சொன்னால், உலகத்தில் உண்மையான முடவனைக்கூட வஞ்சகன் என்று

எண்ணிவிடுவோர்கள்; இதைக் கவனி" என்று கொஞ்சமும் முகங்கோணாமல் சொன்னான்.

அவன், உடனே குதிரையிலிருந்து கீழே இறங்கி அதைப் பிடித்துக்கொண்டு வியாபாரியிடம் வந்தான். வியாபாரி, "என்னவேண்டும்" என்று கேட்டான். அவன், "என்னுடைய இந்தச் செய்கை உலகில் அசக்தர்களாயிருப்பவர்களுக்குத் தொந்திரவு தருகிறது. அதற்கு ஆளாக எனக்கு இஷ்டமில்லை. உன் குதிரையை நீயே வைத்துக்கொள். இதன்பேரிலுள்ள ஆசையினால் இப்படி நடந்துகொண்டேன்" என்று சொல்லிக் குதிரையை வியாபாரியினிடம் ஒப்புவித்துச் சென்றான்.

வியாபாரி நல்லபேச்சினால் தான் அடைந்த நன்மையை எண்ணி மகிழ்ந்து குதிரையேறிக்கொண்டு தன் ஊர் சென்றான்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ஸ்திரீ தர்மம்

ருக்மிணி—கிருஷ்ண சம்வாதம்

ஒருநாள் சகலலோகங்களுக்கும் குருவான கண்ணன் தந்தத்தால் விசித்திரமாய்ச் செய்யப்பட்டுத் தங்கம் வெள்ளி நவரத்தினங்களால் அழகாய் அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் சுகமாக உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுது மகாலக்ஷ்மியின் அவதாரமான ருக்மிணிதேவி மிருதுவாய் அவருக்கு விசிறிக்கொண்டிருந்தாள். அப்பொழுது பகவான் அவளைப்பார்த்து, அவளுக்கும் தனக்கும் அந்தரங்கத்திலுள்ள நட்பை எல்லோருக்கும் தெரிவிக்கக் கருதி,ஒரு விசித்திரமான சூழ்ச்சி செய்ய நினைத்து, "ஓ ராஜகுமாரியே! இந்திரன், வருணன் குபேரன் முதலியவர்களுக்குச் சமமான ஐசுவரியத்தையுடையவர்களும், அளவற்ற மேன்மை வாய்ந்தவர்களும், ரூபம் யௌவனம் அழகு காந்தி பலம் பராக்கிரமம் பெருந்தன்மை முதலிய உத்தம குணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களுமான ஜராஸந்தன், சிசுபாலன், விதூரதன், தந்தவக்கிரன், சால்வன் முதலிய பல அரசர்கள் உன்னை மணஞ்செய்ய விரும்பிக் குண்டினபுரிக்கு வந்திருந்தார்கள். உன் தமையனான ருக்மி, உன்னைச் சிசுபாலனுக்கு விவாகஞ்செய்துகொடுக்க விரும்பினான். உன் தகப்பனான பீஷ்மகர் உன்னை எனக்கு மனைவியாகக் கொடுக்க வேண்டுமென்று அந்தரங்கத்தில் நினைத்தும், மூத்தமகனுடைய வார்த்தையை மீற முடியாமல்,அவனுடைய மனம்போனபடி விட்டிருந்தார். முடிவில் ஏதோ கடவுளின் அருளால் உன்னை நான் மணம்புரியும்படி நேர்ந்தது. ஆனாலும் எவ்விதத்திலும் உனக்குத் தகுந்த மற்ற மன்னர்களைப் புறக்கணித்து எவ்விதத்திலும் உனக்குச் சற்றேனும் ஈடில்லாத என்னை நீ கணவனாகக் கொண்டதின் காரணம் எனக்குப் புலப்படவில்லை. அவர்களைப்போல நான் முடிசார்ந்த மன்னனல்ல. பயங்கரமான யுத்தங்களில் பகைவரை எதிர்த்துப் போர்புரிந்து ஜயசாலியாய்த் திரும்பினவனல்ல. மகத தேசத்தரசனான ஜராஸந்தனுக்குப் பயந்து சமுத்திரத்தைச் சரணமடைந்து இங்கேவந்து ஒளிந்து கொண்டிருக்கிறேன். காலயவனனென்ற ஒரு மிலேச்ச வேந்தனுக்கு அஞ்சி ஓடினேன். என் நடையும் ஒழுக்கமும் சீலமும் இத்தகையதென்று ஒருவர்க்குந் தெரியாது. உலகத்தில் ஜனங்கள் போகும் வழியை நான் பின்பற்றுகிறவன் அல்லன். அப்படிப்பட்ட என்னைக் கணவனாகக்கொள்ளும் பெண்கள் பெரும்பாலும் துக்கத்தையே யடைவார்கள். இந்தப் பதினான்கு லோகங்களிலுமுள்ள அழகெல்லாம் திரண்டு உருவெடுத்து வந்ததுபோன்ற ராஜகன்னிகையே! கறுத்து விகாரமாயிருக்கும் என்னை நீ மணம்புரிவது தகுமோ? மேலும் நீ பீஷ்மக மகாராஜாவின் மகள்; பிறவிச்செல்வமுடையவள். சகல சௌக்கியங்களையும் போக போக்கியங்களையும் குறைவற அனுபவிக்கும் வழக்கமுள்ளவள்; நானோ வறுமையால்வருந்துகிறவன். என்னைப்போன்ற ஏழைகளும் கதியற்றவர்களுமே என்னிடத்தில் பிரியம் வைப்பார்கள். உன்னைப்போன்ற சீமாட்டிகள் பெரும்பாலும் என்னை நெருங்கமாட்டார்கள். நீயோ ராஜகுலத்தில் பிறந்து, அதற்கேற்ற கல்வி கேள்வி, நடை, உடை, பேச்சு, பழக்கமுடையவள்; நானோ சிறைச்சாலையில் பிறந்தவன்; ஆயர் குலத்தில் வளர்ந்தவன்; அவர்களால் பழக்கப்பட்டவன்; அவர்களுக்குள்ள புத்தியும் அறி

வும் நடத்தையுமே யுடையவன் ; பிறப்பு வளர்ப்பு நாகரிகம் ஆசாரம் அழகு செல்வம் குணம் முதலியவைகளில் ஏறக்குறைய ஒத்திருக்கும் ஸ்திரீ புருஷர்களே, விவாகஞ் செய்துகொள்ள வேண்டியது. அப்படியில்லாமல் ஒருவர் மேலானவரும், மற்றொருவர் தாழ்ந்தவருமானால் அவ்விருவர்க்கும் ஒருநாளும் ஒத்துமையிராது; சிநேகம் நீடிக்காது; அன்பு பெருகாது; வெறுப்பும் த்வேஷமும் சந்தேகமும் கோபதாபமும் வளரும் ; பிச்சைக்காரர்களால் நான் மனதாறப் புகழப்பெற்றவன் ; குணவானல்ல. இதை நீ யறியாமல் , ஆழ்ந்து யோசிக்காமல் என்னை யடைந்தாய் ; ஆகையால், உனக்கு எவ்விதத்திலும் நன்மையையே செய்யவேண்டுமென்றும், உன் மனத்திற்கு எள்ளளவேனும் வருத்தத்தைக் கொடுக்கும் எதையும் விலக்கவேண்டுமென்றும் என்னால் இயன்றவரையில் முயலும் நான், உன் மனதிலுள்ள எண்ணத்தை யறிந்து அதை நீ வெளியிடப் பயந்தாலும் தயங்கினாலும் அதைப் பூர்த்திசெய்ய விரும்புகிறேன். அப்பொழுது எந்தத் தவறாலோ புத்திமயக்கத்தாலோ நிர்ப்பந்தத்தாலோ என்னை விவாகம்செய்துகொண்டதால் யாதொரு பாதகமுமில்லை. இப்பொழுதும்; நீ உனக்கேற்ற ஒரு கணவனைத் தேடி விவாகம் செய்துகொள்வதில் என்க்கு வருத்தமில்லை. மனமில்லாத ஒரு பெண்ணை மனைவியாகக் கொள்ளுகிறவனும், தன்னிடத்தில் காதல் கொண்ட ஒரு பெண்ணை மணம்புரியாதவனும் மனிதர்களுக்குக்குள் மிகவும் அற்பன். இப்படி முந்தியே சொல்லியிருந்தால் நான் தங்களை விவாகம்செய்துகொள்ளமாட்டேனேயென்றால் சிசுபாலன் முதலியவர்கள், வீர்யத்தால் மதங்கொண்டு என்னை எப்பொழுதும் எதிர்த்துவந்தார்கள். அவர்களுடைய கர்வத்தை யடக்குவதற்காகவே உன்ஸ்வயம்வரத்திற்கு வந்தேன். அவர்களை ஜயித்தேன் ; ஜயித்தவனுக்குப் பரிசாக ஏற்படுத்தப்பட்ட உன்னை எடுத்துக்கொண்டு வந்தேன். துஷ்டர்களுடைய கொழுப்பை யடக்குவதே என் வேலை. பெண்டு பிள்ளை செல்வம் உடல் உயிர் பொன் அதிகாரம் என்றவைகளில் எனக்குச் சற்றேனும் ஆசையில்லை. எனக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் காரணம் என்னிடத்திலேயே யிருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் எனக்கு ஆகவேண்டியதொன்றுமில்லை. நான் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. என்னால் அடையப்படாததும் ஒன்றுமில்லை. பிறருடைய நன்மைக்காகவே நான் உலகத்தில் சூரியனையும் தீபத்தையும்போல் கேவலம் சாக்ஷியாயிருக்கிறேன். நான் ஒன்றையும் செய்கிறவனுமல்ல ; அவைகளின் பயன்களை விரும்புகிறவனுமல்ல. நீ என்னிடத்திலிருப்பதால் எனக்கு மகிழ்வுமில்லை; நீஎன்னை விட்டுப்போவதால் எனக்கு வருத்தமுமில்லை'' என்று சொன்னார்.

“ கிருஷ்ணனுக்குத் தன்னைப்போன்ற எண்ணிறந்த மனைவிகளிருந்தும், அவரிடத்தில் எல்லா ஸ்திரீகளும் காதல்கொண்டிருந்தும் அவருடைய மனம் என்னிடத்திலேயே நாடியிருக்கிறது ; அவருடைய அன்பிற்கு நானே பாத்திரம். அவரும் என் அழகாலும் பக்தியாலும் நற்குணங்களாலும் மகிழ்ச்சியடைந்து,என்னையே தன் அந்தரங்கத்தில் காதலுற்றிருக்கிறார்'' என்று ருக்மிணி ஒருசமயம் சற்று கர்வமடைந்ததுண்டு. அந்த அற்பமான தவறும் அவளிடத்தில் இருக்கப் பொறாத பரமாத்மா அதை விளக்குவதற்காக இந்த உபாயத்தைச்செய்தார்.

அதுவரையில் கோபாலன் அப்படி ருக்மிணியைக் கண்டித்துப் பேசினதில்லை. ருக்மிணியின் செவியில் அந்த வார்த்தைகள் நாராசம் போல் விழுந்தன. இன்னதென்று சொல்லமுடியாத ஒருபயம் அவளைக் கவர்ந்தது ; மனம் தத்தளித்தது ; உடல் நடுங்கிற்று ; கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று ; புத்திசிதறி இந்திரியங்கள் மங்கி ஒன்றுந்தோன்றாமல், காலின் பெருவிரலால் நிலத்தைக் கீறிக்கொண்டு நின்றாள். மழைத்தாரைகளைப்போல் பெருகிவரும் கண்ணீரால் கரைக்கப்பட்டமை நிர்மலமான ஆடையில் விழுந்து அதை நனைத்து, மார்பில் அணிந்திருக்கும் குங்குமப்பூச்சைச் சேறாக்கிற்று. தலைகுனிந்து கண்ணீரால் கண்கள் மறைக்கப்பட்டுப் பேசமுடியாமல் நெஞ்சடைத்தது. அங்கேயிருப்பதற்கும் அதைவிட்டு வேறிடத்திற்குப்போவதற்கும் தோன்றாமல் பிரமைபிடித்தவளைப்போல் சூனியமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள். எங்கே தன்னை கிருஷ்ணன் தள்ளிவிடுவாரோவென்ற நினைவுவந்து கையிலணிந்த கங்கணம் நழுவிற்று ; சாமரம் கீழே விழுந்தது; பெருங்காற்றினால் நான்குபுறத்திலும் அடிக்கப்பட்ட இளம்வாழையைப்போல் தத்தளித்தாள்.

அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம் புறத்த புகழு மில.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

போலீஸ்காரர் கையில் மின்சாரவிளக்கு. பெரிய நகரங்களில் மோட்டார்வண்டிகள், சைகிள்கள்கோச்சுவண்டிகள் முதலியபோக்குவரத்துக்குரிய சாதனங்கள் நாடோறும் அதிகரித்து, இரஸ்தாக்களில் செல்பவர்களுக்கு அபாயமுண்டாகக்கூடிய நிலைமையிலிருப்பது சென்னை முதலிய இடங்களிலிருப்பவருக்கு அனுபவசித்தமாகும். வண்டிகள் ஓடுவதை ஒழுங்குபடுத்தி, அபாயம் வராமல் தடுக்கும்பொருட்டு, ரஸ்தாக்களில் ஆங்காங்கு போலீஸ்காரர்கள் நிறுத்தப்பட்டு, அவர்கள் செய்யும் கைஜாடைகளால் மோட்டார் வண்டிகளின் ஓட்டம் ஒரு முறைமைக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது. இவ்வித ஏற்பாடுகள் இந்தியாவிற்காட்டிலும், மேனாட்டு நகரங்களில் மிக்க நன்றாய் நடைபெற்றுவருகின்றன. இராக் காலங்களில் போலீஸ்காரர் செய்யும் அடையாளங்கள் வண்டியோட்டிச் செல்வோருக்கு நன்கு புலப்படுமாறு,ஒரு புதிய ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். போலீஸ்காரர் தரித்துக்கொண்டிருக்கும் கையுறையில் நான்கு மின்சார விளக்குகள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றைவேண்டும்போது எரியும்படிச் செய்வதற்கான மின்சாரப் பிரவாகமானது அவனது அரைக்கச்சையிலிருந்து தொங்கவிடப்பட்டுள்ள இரண்டு மின்சார பாட்டரிகளிலிருந்து உண்டாக்கக் கூடியது. இவைகளுக்கு மின்சார சம்பந்தமுண்டாவதற்குரிய ஸ்பரிச சாதனங்கள் அவனது கைவிரல்களில் உள. இவை ஒன்றோடொன்று சம்பந்தப்படும்படி செய்து அப்போது மின்சாரப்பிரவாகம் மின்சார விளக்குகள் வழியாய்ச் சென்று, அவற்றை எரியச் செய்யும். இவ்விளக்கு வெளிச்ச மூலமாய் போலீஸ்காரன் தனதுகையால் செய்யும் அடையாளங்கள் வண்டிக்காரர்களுக்கு சந்தேகமறப் புலப்படும்.

உலகிலுள்ளோருள் மிகச் சிறிய மனிதன்.— உலகில் வயதுமுதிர்ந்த மனிதருள் மிகக் குட்டையும்,அற்பகனமுமுள்ளவர் மேஜர் கிளாரன்ஸ் ஹாவர்டன்(Major Clarence Howerton) என்பவர். இவரது உயரம் 18 அங்குலம்; அல்லது $1\frac{1}{2}$ அடி;நிறை 17-பவுண்டு.ஒவ்வொருவரும் 7 அடி 4 அங்குலத்துக்கு மேற்பட்ட உயரமுள்ள பலர் ஏறியுள்ளதும், 1000-பவுண்டு பளுவுள்ளதுமான ஒரு வண்டியை ஹாவர்டன் இழுக்கக்கூடியவராம்.

பண்டைய இந்தியாவில் நகர நிர்மாண சட்டங்கள். — நமது பரதநாட்டில் பூர்வகாலத்தில் நகர்நிர்மாண விஷயத்தில் சுகாதார ஏற்பாடுகள் எவ்வாறு கவனிக்கப்பட்டு வந்தனவென்பதுபற்றி ஸ்ரீமான் பினேபிகாரி தத்தா என்பவர் தனது லேகனத்தில் சிறிது எடுத்துக் கூறியிருக்கிறார்.

(1) ஒவ்வொரு வீட்டுக்கு வெளிப் பாகத்தில், ஆனால் அதனுடன் சம்பந்தப்பட்டதாய் **வீதிகா** என்று சொல்லப்பட்ட சிறுபாதை கட்டப்படவேண்டும். அது இப்போதைய முக்கிய நகரங்களிலுள்ள பெரும் வீதிகளின் இரு பக்கத்திலுமுள்ள கற்பாவின பாதைகள்போல், வீதியைக் காட்டிலும் கொஞ்சம் உயர்ந்திருக்கும். இந்த வீதிகையானது, வீட்டின் அகலத்தில் மூன்றிலொருபங்கு அகலமுள்ளதாயிருக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் இவ்வித வீதிகை இருக்கவேண்டியது அவசியம்.

(2) எல்லாவீடுகளும் ராஜவீதிகளை நோக்கியே கட்டப்படவேண்டும். அவைகளின் பின்புறத்தில் கூளம், குப்பை முதலிய அசுத்த வஸ்துக்களை எடுத்துச் செல்வதற்கான சந்துகளோ சிறு வழிகளோ ஏற்படுத்தப் படவேண்டும். இரண்டு வீடுகளுக்கு மத்தியில், 3 அல்லது 4 அடி இடம் காலியாயிருக்கும்படி விட்டு, வீடுகள் கட்டவேண்டும்.

இவைபோன்ற விதிகளை அனுசரித்து நாம் சில நூற்றாண்டுகளாக நமது வீடுகளைக் கட்டிக்கொண்டு வந்திருந்தால், பட்டணங்களிலுள்ள ஜனங்களின் தேகாரோக்கிய நிலைமை இப்போதைப்போல் அவ்வளவு கேவலமாயிருந்திராது.

ஒரு துக்க சம்பவம்.—மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல் ஆரம்ப காலமுதல், ஹெட்மாஸ்டர் பதவியிலிருந்து அதன் அபிவிருத்தியின் பொருட்டுப் பலவிதத்திலும் உள்ளன்புடன் உழைத்துவந்த ஸ்ரீமான் வ. பஞ்சாபகேசய்யரவர்கள், எம்.ஏ., எல்.டி., ஒரு வாரம் தேக அசௌக்கியமாயிருந்து காலகதி யடைந்துவிட்டார். இவர் மரணம் நமக்கு மாத்திரமல்ல, கல்வி உலகத்துக்கே ஒரு பெரிய நஷ்டமாகும். இவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

காலஞ்சென்ற ஸ்ரீமான் S. கஸ்தூரிரங்க ஐயங்கார்